# மன்னெழில் II



வெளியீடு

**மன்னார் மாவட்ட கலை பண்பாட்டுப் பேரவை,**
**மாவட்டச் செயலகம்,**
**மன்னார்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னெழில்

# II

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழில்முகம்

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | 'மன்னெழில் – II' |
| மலராசிரியர் | : | சிவஸ்ரீ மஹா தர்மகுமாரக் குருக்கள் |
| மொழி | : | தமிழ் |
| பொருள் | : | மன்னார் மாவட்ட கலை பண்பாடு |
| ஆண்டு | : | 2022 நவம்பர் |
| அச்சு எழுத்து | : | 12 |
| பக்கங்கள் | : | 90 |
| வெளியீடு | : | மன்னார் மாவட்ட கலை பண்பாட்டுப் பேரவை,<br>மாவட்டச் செயலகம்,<br>மன்னார் |
| வடிவமைப்பு | : | செல்வி. ச. மிதினா |
| அட்டைப்படம் | : | திரு. ஜெரோமி மார்க் |
| வரைகலை | : | பதிப்புக்கலைச்செல்வன் திரு. எஸ். ஷதீஸ். |
| அச்சகம் | : | 'சைபர் சிற்றி' அச்சுக்கலையகம்,<br>மன்னார். 023 2251668,<br>0715 797 597 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னெழில் -II

## 2022

நூலுருவாக்கத்திற்கு
அனுசரணை வழங்கிய
வட மாகாண
பண்பாட்டலுவல்கள்
திணைக்களத்திற்கு
எமது மனமார்ந்த
நன்றி !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர்க்குழு

வழிகாட்டலும் அனுமதியும்

**திருவாட்டி அ. ஸ்ரான்லி டி மெல்**

அரசாங்க அதிபர்/ மாவட்டச் செயலாளர்,

மன்னார்.

ஆலோசகர்கள்

**திரு. ய. பரந்தாமன்**

மேலதிக அரசாங்க அதிபர், மன்னார்.

**திரு. வே. சிவராஜா**

உதவி மாவட்ட செயலாளர், மன்னார்.

மலராசிரியர்

**செந்தமிழருவி சிவஸ்ரீ. மஹா தர்மகுமாரக் குருக்கள்**

துணை ஆசிரியர்

**தேசியக்கலைஞர் எஸ். ஏ. உதயன்**

உறுப்பினர்கள்

**திரு. இ. நித்தியானந்தன்**

**திருமதி. பெப்பி விக்ரர் லெம்பேட்**

**திரு. ல. அமலானந்த குமார்**

**திரு. முஹமட் ஹன்பல் இமாம்**

**கம்பிகளின்மொழி பிறேம்குமார்**

**திரு. எம்.எம் சக்கரியான்**

**திரு. முனவ்பர் ஹான்**

**பதிப்புக்கலைச்செல்வன் திரு. எஸ் சதீஸ்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அரச அதிபருடன் மன்னெழில் - II மலர்க்குழுவினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே...


01. முகப்பு — i

02. எழில்முகம் — ii

03. அனுசரணையாளர் பக்கம் — iii

04. மலர்க்குழு — iv

05. உள்ளே... — v

06. நுழைவாயிலில்... — vii

07. மன்னார் மறை மாவட்ட ஆயர் அவர்களின் ஆசிச்செய்தி — ix

08. மன்னார் திருக்கேதீஸ்வரம் ஆலய பிரதம குருவின் ஆசிச்செய்தி — x

09. மன்னார் ஜம்இய்யத்துல் உலமாசபை செயலாளரின் ஆசிச்செய்தி — xi

10. முருங்கன் புராதன மஹாவிகாரை பீடாதிபதியின் ஆசிச்செய்தி — xii

11. வடக்கு மாகாண பிரதம செயலாளரின் வாழ்த்துச் செய்தி — xiii

12. மன்னார் மாவட்ட அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி — xiv

13. வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு செயலாளரின் வாழ்த்துச் செய்தி — xv

14. வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி — xvi

15. கடம்பநதியின் காணாமற்போன கிளையாறு பாலாவி, உயிர்ப்புடன் பாயும் அருவியாறு — 01

16. வடமேற்கில் ஒரு வளநிலம் — 03

17. என்னூரே! மன்னாரே! — 04

18. இலங்கைத் தமிழரின் பூர்வீக வரலாற்றையும், பண்பாட்டையும் அடையாளப் படுத்திக் காட்டும் மன்னார் கட்டுக்கரை தொல்லியல் அகழ்வாய்வுகள் — 05

19. இறக்கைகளின் தொலைவில்.... — 31




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20. மன்னார் நாட்டார் பாடல்களில் இருந்து வழக்கொழிந்து போகாத வழிநடைச்சிந்துக்களில் சில 32

21. 'கலைப் புயல் ஓய்ந்தது' கலைத்தவசி குழந்தை செபமாலை அவர்கள் பற்றிய மனப்பதிவு 38

22. வடக்கின் முதுசம் பனைமரம்... 41

23. மாற்றம் கோரும் மரபுக்கலைகள் 42

24. முத்தரிப்புத்துறையிலுள்ள டோரிக் பங்களா ஒரு வரலாற்றுப் பார்வை 47

25. முத்துக்குளிப்பால் உலகைக் கவர்ந்த சிலாவத்துறை 51

26. கட்டளை... 53

27. பழமையும் செழுமையும் வாய்ந்த தொன்மைமிகு மன்னார் பரப்புக்கடந்தான் கர்த்தர் ஆலயம் 54

28. மன்னாரின் மகிமை பாடி... 58

29. வங்காலை பறவைகள் சரணாலயம் ஓர் பார்வை 61

30. தங்கத்தேரு... மன்னாரு 69

31. மன்னார் பறவைகள் சரணாலயம் 70

32. எழிலோங்கும் மன்னார் தீவு 73

33. நவில்கின்றோம் நன்றி 74



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மலராசிரியரின் உள்ளத்திலிருந்து...

மொழியின் வரிவடிவமே இலக்கியமாகின்றது

மன்னார் மாவட்டத்தின் பெருமைகளையும் சிறப்புக்களையும் இளம் சந்ததிகளுக்கும் எதிர்கால சமுதாயத்திற்கும் கடத்தும் சிறப்பு மலராக வெளிவரும் மன்னெழில் -II மன்னாரின் மற்றுமொரு கலை பன்பாட்டு ஆவணமாகும்

வந்தவர்களை எல்லாம் வாழவைக்கும் சிறப்பு மன்னார் மண்ணுக்குரியது. ஒரு காலத்தில் யாரும் வர விரும்பாத மாவட்டம் என தமக்குள் நினைத்தவர்களை, வந்து வாழ்ந்து விட்டால் திரும்ப போகவே விரும்பாமல் இருக்கச் செய்யும் தனிச்சிறப்பு இம்மண்ணுக்குரியது என்றால் மிகையாகாது.

இவ்வாறான சிறப்பு மிக்க மாவட்டத்தில் மன்னார் மாவட்ட செயலகமும் மன்னார் மாவட்ட கலை பண்பாட்டுப் பேரவையும் இணைந்து வெளியிடும் மன்னெழில்-II நூலுக்கு மலர் ஆசிரியராக எனக்கு மீண்டும் வாய்பளித்தவர்களை நன்றி உணர்வுடன் பற்றிக் கொள்ளுகின்றேன்.

மன்னார் மாவட்டத்தின் எழில்மிகு சிறப்புகளை உலகிற்கு வெளிக்கொணரும் நோக்கில் வெளிவரும் மலரிற்கு "மன்னெழில்-II" என்ற முத்தாய்ப்பான பெயர் சூட்டப்பட்டு அதன் கன்னி வெளியீடு சிறப்பாக நடந்தேறியபொழுது இம்முயற்சி தொடர வேண்டும் என எல்லோர் மனங்களிலும் இருந்த பேரவா இன்று நிதர்சனமாகி நிற்கின்றது.

இம் மலர் தாங்கிவருகின்ற ஆக்கங்கள் இருவகையாக உள்வாங்கப்பட்டுள்ளது. மன்னாரின் கலைஞர்கள் பேரறிஞர்கள் ஆக்கிய படைப்புக்கள் மற்றும் மன்னார் குறித்து பிற புத்திஜீவிகள் பேரறிவாளர்கள் எழுதிய ஆக்கங்கள் ஆகியனவாகும். ஒவ்வொரு ஆக்கங்களும் மன்னாரின் சிறப்புகளையும், மருகிப்போகும் பாரம்பரியங்கள் மற்றும் தடங்களையும் அழகாக எடுத்தியப்பி ஆவணப்படுத்தி நிற்கின்றன.

எதிர்காலத்தில் தொடர்ச்சியாக வெளிவரவிருக்கின்ற இம் மலரின் அடுத்தடுத்த வெளியீடுகளை உருவாக்க இருக்கின்ற எமது அடுத்த தலைமுறைக்கு இது ஒரு கால்வாயாக அல்லது ஆரம்ப புள்ளியாக இருக்கும் என்பது மலர்க்குழுவின் நம்பிக்கை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னெழில்

இம்மலரின் முயற்சிக்கு ஆதரவும் ஆலோசனையும் தந்து வழிகாட்டிய மதிப்பார்ந்த மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி அ.ஸ்ரான்லி டி மெல் அம்மணி அவர்களின் கலை ஆர்வமும், மேலான ஒத்துழைப்பும் வழிகாட்டலும் இம்மலர் வெளிவர இன்றியமையாதது. மாவட்ட சிரேஷ்ட கலாசார உத்தியோகத்தர் திரு.இ.நித்தியானந்தன் அவர்களுடைய அயராத கடின உழைப்பு மிகவும் சிறப்பானது. இம் மலருக்கான பெரும் பணியினை அவரே செய்து முடித்தார் என்பதே நிதர்சனம் அவருக்கு சிறப்பான நன்றிகள்

இம்மலருக்கான ஆசிச்செய்திகள் வழங்கிய மதத்தலைவர்கள் வாழ்த்துச் செய்திகள் வழங்கிய பெரியோர்கள், ஆக்கங்கள் மற்றும் கட்டுரைகளை தந்துதவிய கல்வியலாளர்கள், படைப்பாளிகள் அனைவருக்கும் மலர்க்குழு சார்பாக மனம் நிறைந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

இம்மலர் உருவாக்கத்தில் இணைந்து செயற்பட்ட துணை ஆசிரியர் தேசிய கலைஞர் எஸ்.ஏ.உதயன் மற்றும் மலர்க்குழு உறுப்பினர்கள் அனைவருக்கும் சிறப்பான நன்றிகள். இம்மலர் சிறப்பாக அமைவதற்கு மலரை வடிவமைத்து அச்சிட்ட சைபர் சிற்றி அச்சுக்கலையக உரிமையாளர் பதிப்புக்கலைச்செல்வன் திரு.எஸ் சதீஸ் அவர்களுக்கும் அட்டைப்படத்தினை வரைந்து வடிவமைத்த மன்னார் மாவட்டத்தின் சிறப்பத்துறையின் நவீன அடையாளமாகத் திகழும் ஆசிரியர் திரு.ஜெரோமி மார்க் அவர்களுக்கும் நிறைவான நன்றிகள்.

மன்னெழில் -II பயனுள்ள மலராக வெளிவரும் என நிறைவாக நம்பும் அதேவேளை தொடர்ந்து வரும் காலங்களிலும் மன்னெழில் மலரின் அடுத்தடுத்த வெளியீடுகள் சிறப்பாக வெளிவர வேண்டும் என்பது எம் அனைவரதும் அவா.

என்றும் அன்புடன்
செந்தமிழருவி மஹா தர்மகுமாரக் குருக்கள்.

பொறுப்பு துறப்பு

இந்த மலரில் இடம்பெற்றுள்ள
அனைத்து ஆக்கங்களின் கருத்துகளுக்கும்
தார்மீகப் பொறுப்புடையவர்கள் ஆக்கியவர்களே..!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மன்னார் மறை மாவட்ட ஆயர் அவர்களின் ஆசிச்செய்தி

மன்னார் மாவட்டத்தின் 2022 ஆம் ஆண்டுக்கான கலை, பண்பாட்டு பெருவிழாவை முன்னிட்டு ஆண்டுதோறும் வெளியிடப்படுகின்ற "மன்னெழில்-II" என்ற மலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் மகிழ்வடைகின்றேன்.

மன்னார் மாவட்டத்தின் வரலாறு, கலை, பண்பாடு, தொல்லியல் மற்றும் ஆய்வு முயற்சிகளை தன்னகத்தே தாங்கிவருவது இந்நூலினுடைய சிறப்பம்சமாகும். நிச்சயமாக "மன்னெழில்" என்ற நாமத்தை தாங்கிவருகின்ற இந்நூல் எதிர்கால தலைமுறையினருக்கு மன்னார் பற்றிய சிறப்பான பெறுமதிமிக்க தகவல்களை தாங்கிச் செல்லும் என்பதில் ஐயமில்லை. எனவே மன்னார் மாவட்ட செயலகமும், மாவட்ட கலை பண்பாட்டுப் பேரவையும் இணைந்து இந்நூலைப் பிரசவிக்க எடுத்திருக்கின்ற முயற்சிகளை வாழ்த்துகின்றேன். இந்த நூல் வெளியீட்டுக்காக உழைக்கின்றவர்களையும், அவர்களது முயற்சிகளையும் இறைவன் நிறைவாக ஆசீர்வதிப்பாராக. மன்னெழிலின் வருகை மன்னார் மாவட்டத்தின் எழிலை இன்னும் மெருகூட்ட இறையாசீர் வேண்டுகின்றேன்.

உங்கள் எல்லோரையும் இறைவன் நிறைவாக ஆசீர்வதிப்பாராக!

**மேதகு ஆயர் இம்மானுவேல் பெனாண்டோ**
**மன்னார் ஆயர்**
**மன்னார் மறை மாவட்டம்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மன்னார் திருக்கேதீச்சரத் திருத்தல பிரதம குருவின் ஆசிச்செய்தி

ஈழ மணித்திருநாட்டின் மாதோட்ட பெரு நிலப்பரப்பினையும் கடல் சூழ்ந்த தீவுப் பெரு நிலப்பரப்பினையும் கடல் சூழ்ந்ததீவுப் பட்டினத்தையும் தன்னகத்தே கொண்ட மன்னார் மாவட்டத்தின் வரலாற்று சிறப்புகள், இன, மத சிறப்புகள் இயற்கை வளங்கள், காலநிலை மாற்றத்திற்கேற்ப கண்டம்விட்டு வந்து தங்கிச்செல்லும் பறவைகளின் சிறப்பு என்பனவற்றையும் சுயதொழில் உற்பத்தி சிறப்பு என்பவற்றையும் சுமந்து வரலாறு படைத்து வரும் "மன்னெழில் -II" மலர் மலர வாழ்த்தி ஆசிகூறுவதில் பெருமிதமடைகிறேன்

"மண் செழிக்கும் வகைசெய்வோம்."

**சிவஸ்ரீ தியாக. கருணாந்த குருக்கள்**
**பிரதம குரு**
**திருக்கேதீச்சரத் திருத்தலம்,**
**மன்னார.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜம்இய்யத்துல் உலமாசபை
# மன்னார் கிளை செயலாளரின்
# ஆசிச்செய்தி

மன்னார் மாவட்டம் எமது இலங்கைத் திருநாட்டின் அழகிய மாவட்டம். இம் மாவட்டமானது கடல் வளமும், வயல் நிலங்களும், காடுகளும் நிறைந்த இயற்கை எழில் கொஞ்சும் வனப்பு மிக்க மாவட்டமாகும்.

நமது மாவட்டத்தில் ஆன்மீகம், பண்பாடு, ஒழுக்கம் கலை, கலாச்சாரம், விளையாட்டு ஆகியவற்றில் குறிப்பிடத்தக்க வகையில் முத்திரை பதிக்கின்ற மக்கள் வளங்களை கொண்ட அழகிய பிரதேசமாகும்.

இவ் அம்சங்களையெல்லாம் தாங்கி மாவட்ட செயலகத்தால் வெளி யிடப்படுகின்ற "மன்னெழில் - II' சஞ்சிகைக்கு எனது வாழ்த்துக்களையும் ஆசிச்செய்தியையும் வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

நன்றி

**மௌலவி. அஷ்ஷெய்க் எஸ். ஏ. அஸீம்**
**செயலாளர்,**
**ஜம்இய்யதுல் உலமா - மன்னார் கிளை,**
**பேஷ் இமாம் - மூர்வீதி ஜும்மாப் பள்ளிவாசல்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முருங்கன் புராதன மஹா விகாரை பீடாதிபதியின் ஆசிச்செய்தி

மன்னார் மாவட்டத்தின் பல்வேறு சிறப்புகளையும் ஆவணப்படுத்தும் வகையில் மன்னார் மாவட்ட செயலகமும் கலை பண்பாட்டுப் பேரவையும் இணைந்து ஆண்டு தோறும் வெளியிடும் "மன்னெழில்" என்ற மலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதையிட்டு மகிழ்ச்சியடைகிறேன்.

நான் நீண்டகாலமாக இப்பிரதேசத்தில் கடமையாற்றுவதையிட்டு பெருமிதம் கொள்கிறேன், இம்மாவட்டமானது கல்வி, கலை, கலாச்சாரம், மொழி, சமய நம்பிக்கை, பாலின சமனிலை போன்ற சமூகவிழுமியங்களுக்கு மதிப்பளிக்கும் சமூகத்தை கொண்டுள்ளது என்பதற்கு உதாரணமாக எமது மாவட்டத்தினை பூர்வீகமாக கொண்ட கலை, கலாச்சாரம், மொழி,சமய நம்பிக்கைகளையும், மக்களின் வாழ்வியலைலும் புரிந்துகொண்ட அரசாங்க அதிபர் கொடையாக கிடைத்ததை பிரதேசவாசியாக நானும் மனமகிழ்ச்சியடைகிறேன். மேலும் ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடுகையில் பௌத்தர்கள் சிறுபான்மையாக காணப்பட்ட போதிலும் எமக்கான சுயகௌரவம், சமத்துவம், அபிவிருத்தி என்பன அரசாங்க அதிபரின் வழிகாட்டலின் கீழ் மேற்கொள்ளப்படுவதையிட்டு எமது சமூகம் சார்பாக நன்றியோடு நினைக்கிறேன்.

***"மற்றவர்களுக்கு உபதேசிக்கின்ற காரியத்தை உபதேசிப்பவர் தாமே செய்கையில் செய்து காட்டக்கடவர்: முதலில் தம்மை ஒழுக்கத்தில் நிறுத்திக்கொண்டு பிறகு மற்றவரை நிறுத்தட்டும் ஏனென்றால் தன்னை அடக்கி நடப்பது கடினமானது"*** என்ற புத்தபெருமானின் பொன்மொழிக்கிணங்க நான் இப்புனித பூமியில் பணியாற்ற இப்பிரதேச வழக்கு மொழியான தமிழ் மொழியினை கற்றுக்கொண்டமையும், சகோதர இன,மதத்தவரின் ஒத்துழைப்பு கிடைக்கின்றமையும் கிடைத்தற்கரிய பாக்கியமாக கருதுகிறேன்.

மென்மேலும் கல்வி, கலை, கலாச்சாரம், மொழி,சமய நம்பிக்கை, பாலின சமனிலை போன்ற சமூகவிழுமியங்களை வளர்த்து நாட்டின் பாதுகாப்பு, ஒற்றுமை, சமாதானம் என்பவற்றை கட்டியெழுப்ப இம்மலர் பேருதவியாக இருக்கும் என்பதுடன் இம்மலர் வெளியிட உழைக்கும் அரசாங்க அதிபருக்கும் மலர் வெளியீட்டுக்குழுவுக்கும் புத்தபொருமானின் ஆசிகளை வேண்டிநிக்கிறேன்.

**அதிவண.வல்பொல சரண பிரதம குரு** B.A (Hons), M.A, Post Graduate Diploma In Education Pandit
**மாவட்ட பதிவாளர், அகில இலங்கை சமாதான நீதவான்**
**பீடாதிபதி,**
**முருங்கன் புராதன மஹா விகாரை**
**பிரதான வீதி, முருங்கன்,**
**மன்னார்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வடக்கு மாகாண பிரதம செயலாளரின் வாழ்த்துச் செய்தி

ஒரு இனத்தின், சமூகத்தின் அடையாளமாகவும் பாரம்பரிய சான்றாகவும் விளங்கி வருவது கலையும் பண்பாடுமே, பல பாரம்பரியக் கலைகளையும் கலாசார விழுமியங்களையும் மரபுவழிகாத்து, அவற்றின் தொன்மை மாறாது அதனூடாக பல்வேறு கலையம்சங்களையும் பண்பாடுகளையும் பல்துறைசார் கலைப்படைப்புகளூடாக வளர்த்து வருவதில் மன்னார் மாவட்டம் அர்ப்பணிப்புடன் செயலாற்றிவருகின்றமையை மாவட்டத்தில் அரங்கேறிவருகின்ற பல கலை நிகழ்வுகளினூடும் கலைப்படைப்புகளினூடும் காணக்கூடியதாக உள்ளது.

மன்னார் மாவட்டத்திற்கே உரித்தான சில கலையம்சங்கள், நாட்டுக்கூத்துகள் மற்றும் மேடை நாடகங்கள் மிகவும் சிறப்பம்சங்கள் நிறைந்தவை. வருடந்தோறும் நடாத்தப்பட்டு வருகின்ற மன்னார் மாவட்ட கலைவிழாவானது கலைத்துறையின் வளர்ச்சிக்கு அர்ப்பணிப்புடன் சேவையாற்றி வருகின்ற கலைஞர்கள், படைப்பாளிகளைக் கௌரவித்தும் இலைமறை காய்களாக இருக்கின்ற மரபுவழிக் கலைஞர்களை வெளிக்கொணர்ந்தும் ஊக்குவித்தும் வருகின்றது.

மன்னார் மாவட்டத்தின் வரலாற்றுத் தொன்மைமிக்க பண்பாட்டுக் கோலங்களையும் கலைஞர்களின் ஆக்கங்களையும் படைப்புகளையும் உள்ளடக்கி மலர்கின்ற மன்னெழில் மலருக்கு எனது வாழ்த்துச்செய்தியை மனஉவகையுடன் வழங்குவதோடு இவ்விழாவில் கௌரவிக்கப்படுகின்ற கலைஞர்கள், படைப்பாளிகள் யாவரும் மென்மேலும் அர்ப்பணிப்போடு கலைப்பணியாற்றுவதற்கேற்ப ஏதுவான ஆற்றல், ஞானம் என்பவற்றை எல்லாம் வல்ல இறைவன் அருள வேண்டுமென மனதார வாழ்த்துகிறேன்.

**எஸ்.எம்.சமன்.பந்துலசேன**
**பிரதம செயலாளர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மன்னார் மாவட்ட அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி

மன்னார் மண்ணின் மணம்வீசும் "மன்னெழில் -II" மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதையிட்டு பெரும் மகிழ்ச்சியடைகின்றேன். வடக்கின் பல்துறை வளம் நிறைந்த மாவட்டங்களில் மன்னாரும் ஒன்று. அதன் அமைவிடம், சூழலியல் பண்புகள், வரலாற்றுச் சின்னங்கள், தனித்துவமான பண்பாட்டுக் கோலங்கள் மற்றும் இன்னோரன்ன சிறப்புக்கள் இந்த மண்ணிற்கு மென்மேலும் மகிமை சேர்ப்பன. இத்தகைய சிறப்புக்கள் பொருந்திய மண்ணில் பிறந்து வளர்ந்த தன்மையினாலும், மாவட்ட நிர்வாக தலைமைப்பீடத்தை வழிநடாத்துகின்ற தன்மையினாலும் எனக்கு இரட்டிப்பு மகிழ்ச்சியுண்டு.

தம்மை நாடி வருவோரை வரவேற்று உபசரிப்பதுடன், மன்னாரில் விரும்பி உறைவோருக்கு சகல வளங்களையும் அள்ளிக்கொடுத்து அவர்களை வாழ வைக்கின்ற சிறப்பினாலும் மன்னாருக்கு நிகர் மன்னாரே. இத்தகைய மகிமை பொருந்திய மாவட்டத்தின் சிறப்பை எடுத்துக்காட்டும் இதழாக "மன்னெழில் - II" மலரை மன்னார் மாவட்ட கலை, பண்பாட்டுப் பேரவை தங்கள்முன் சமர்ப்பிக்கின்றது. இதன் வரவிற்காய் உழைத்துநின்ற அனைவரையும் இந்த தருணத்தில் நன்றியுடன் நினைவு கூருகின்றேன். மன்னார் மாவட்டத்தின் வரலாற்றை, அதன் வரலாற்றுச் சின்னங்களை அடையாளம் காண்பதுடன், அவற்றை ஆவணப்படுத்தி எதிர்கால சந்ததிக்கு கையளிக்கவேண்டும் என்பது எங்கள் அனைவரினதும் பேரவா. அதனை மாவட்டத்தின் ஐந்து பிரதேச செயலகங்கள் ஆண்டுதோறும் வெளியிடும் பிரதேச மலர்களும், மாவட்ட செயலகத்தினால் வெளியிடப்படும் "மன்னெழில்-II" மலரும் படிப்படியாக நிறைவேற்றிவருகின்றன. இவற்றிற்கு அனுசரணை வழங்கும் வடக்கு மாகாண கல்வி அமைச்சு மற்றும் வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் ஆகியவற்றிற்கு எனது விசேட நன்றிகள்.

மன்னாரின் வரலாற்றை தேடியறியும் ஆர்வமுள்ள இளம் சந்ததி உருவாக வேண்டும். அவர்களின் எழுத்துக்களால் மாவட்டம் வளம்பெறவேண்டும். விசேடமாக மன்னார் மாவட்டத்தின் வரலாற்றுச்சிறப்புமிக்க இடங்களுக்குச் சென்று களஆய்வுகள் மேற்கொண்டு அவற்றின் உண்மைத்தன்மைகளை உள்ளவாறு வெளிப்படுத்துவது தொடர்பில் இவ்வாறான இளந்தலைமுறையினர் ஆர்வம் காட்டுதல் வேண்டும். இத்தகைய ஆக்கபூர்வமான முயற்சிகளுக்கு மன்னார் மாவட்ட செயலகம் என்றும் பக்கபலமாக இருக்கும். மாவட்டத்தின் இனங்காணப்படாமலும், அறியப்படாததுமாக உள்ள வனப்பு நிறை இடங்களும் வளங்களும் எதிர்கால சந்ததியினருக்கு சுட்டிக்காட்டப்பட இத்தகைய மலர்கள் உதவவேண்டுமென விரும்புகின்றேன்.

இவ்வாறான மலரை உருவாக்கவேண்டும் என்பதில் கூடிய அக்கறையுடன் செயற்பட்ட மலராசிரியர் உள்ளிட்ட மன்னெழில் - II மலர் குழுவினர், மன்னார் மாவட்ட கலை பண்பாட்டுப் பேரவையினர், துணை ஆலோசனை வழங்கிய உதவி மாவட்ட செயலாளர் திரு. வே. சிவராஜா மற்றும் இவ்விடயத்தில் ஆர்வத்துடன் செயற்பட்ட மாவட்ட சிரேஷ்ட கலாசார உத்தியோகத்தர் திரு. இ. நித்தியானந்தன் உள்ளிட்ட அலுவலர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திருமதி.அ.ஸ்ரான்லி டி மெல்**
**அரசாங்க அதிபர் / மாவட்ட செயலாளர்**
**மன்னார்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை
மற்றும் இளைஞர் விவகார அமைச்சு செயலாளரின்

# வாழ்த்துச் செய்தி

மன்னார் மாவட்ட செயலகமும், மாவட்ட கலை பண்பாட்டுப் பேரவையும் இணைந்து வெளியீடு செய்யும் 'மன்னெழில்' கலை பண்பாட்டு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதையிட்டு பெரும் மகிழ்ச்சியடைகின்றேன்.

வடக்கின் முன்னணி மாவட்டங்களில் ஒன்றான மன்னார் மாவட்டம், வரலாற்றுப் பிரசித்தி பெற்ற திருக்கேதீச்சரம், மடுத்தேவாலயம் உள்ளிட்ட வழிபாட்டுத்தலங்களை தன்னகத்தே கொண்டுள்ளது. அதுமட்டுமன்றி இலங்கையின் வரலாற்றுடன் தொடர்புபடும் கோட்டை, அல்லிராணிக்கோட்டை, குஞ்சுக்குளம் தொங்குபாலம் உட்பட சரித்திரப்பிரசித்தி பெற்ற இடங்களையும் உல்லாசப் பயணிகளைக் கவரும் அழகிய கடற்கரைகளையும் இங்கு காணலாம். அதே வேளை பருவகாலத்தில் மன்னாரை நாடிவரும் பல்வேறு நாடுகளின் பறவை இனங்களும் இந்த மாவட்டத்தின் தனித்துவத்தை பறைசாற்றும்.

இத்தகைய சரித்திரப் பின்னணியை தன்னகத்தே கொண்ட மன்னார் மாவட்டத்தின் நிர்வாகத்திற்குப் பொறுப்பான மாவட்ட செயலகம் ஆண்டு தோறும் மாவட்டத்தின் கலை, பண்பாட்டையும் வெளியுலகிற்கு எடுத்துக் கூறும் வகையில் கலை,பண்பாட்டு விழாவை நடாத்துவதும் அதனை முன்னிட்டு 'மன்னெழில்' என்ற பெயரில் மலர் ஒன்றை வெளியிடுவதும் பாராட்டப்பட வேண்டியதொன்றாகும். எதிர்கால சந்ததியினருக்கு தத்தமது பிரதேசம் பற்றிய வரலாற்றுச் செய்திகளை எடுத்துக்கூறவேண்டியதும், அதே வேளை அவற்றை ஆவணமாக்கி பாதுகாக்க வேண்டியதும் நமக்கிருக்கும் பாரிய கடமையாகும். இத்தகைய பொறுப்பை எமது அமைச்சின் கீழ் இயங்கும் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் முனைப்புடன் முன்னெடுத்துவருகின்றது.

இந்த வகையில் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையிலும் வழிப்படுத்தலிலும் மன்னார் மாவட்ட செயலகம் இது போன்ற ஆவணமாக்கல் செயற்றிட்டத்தை ஆண்டுதோறும் தவறாமல் நிறைவேற்றி வருவதறிந்து மகிழ்ச்சியடைவதுடன் இவ்வாறான பணிகளை அர்ப்பணிப்புடன் செயலாற்றும் மன்னார் மாவட்டச் செயலாளர், உத்தியோகத்தர்கள் மற்றும் கலை பண்பாட்டுப் பேரவையினர் ஆகியோருக்கு எனது மனம் நிறைந்த வாழ்த்துக்களையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**இ. வரதீஸ்வரன்**
**செயலாளர்,**
**கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும்**
**இளைஞர் விவகார அமைச்சு,**
**வடமாகாணம்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பிரதிப் பணிப்பாளரின்

# வாழ்த்துச் செய்தி

மன்னார் மாவட்ட செயலகம் மன்னார் மாவட்ட கலை பண்பாட்டுப் பேரவை ஆகியவற்றின் ஒருங்கிணைவில் வெளியிடப்படும் 'மன்னெழில்' மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதையிட்டு பெரும் மகிழ்ச்சியடைகின்றேன்.

வடக்கு மாகாணத்தின் கலை பண்பாட்டுப் பாரம்பரியங்களை உரியவாறு பாதுகாத்து முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்பது தொடர்பில் எமது திணைக்களம் மாவட்டங்கள் தோறும் பல்வேறு ஆக்கபூர்வமான செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றது. இத்தகைய செயற்றிட்டங்களின் வெளிப்பாடே இன்று மன்னாரில் இடம்பெறும் மாவட்ட பண்பாட்டு பெருவிழாவும் 'மன்னெழில்' மலர் வெளியீடும் ஆகும்.

எமது திணைக்களம் முன்னெடுத்து வரும் அனைத்து கலாசார அபிவிருத்திச் செயற்றிட்டங்களையும் மன்னார் மாவட்ட செயலகம் தவறாமல் நடைமுறைப்படுத்தி வருகின்றது. இந்த ஆண்டில் நடாத்தப்பட்ட இப்தார் நோன்பு திறக்கும் நிகழ்வு, ஆடிப்பிறப்பு கொண்டாட்டம், திருவள்ளுவர் விழா என்பன இவற்றுள் முக்கியமானவை. இவ் விடயம் தொடர்பில் எமது திணைக்களத்தின் கலைத்திட்டங்களுக்கு முழுமையான பங்களிப்பை வழங்கிவரும் மன்னார் மாவட்ட செயலகம் மற்றும் அவருடன் இணைந்து பணியாற்றும் உத்தியோகத்தர்கள், கலைஞர்கள் அனைவருக்கும் இந்த தருணத்தில் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார், சுந்தரமூர்த்தி நாயனார் முதலிய நாயன்மார்களால் பாடல் பெற்ற திருக்கேதீச்சரம் வரலாற்றுப் பெருமை பேசும் மருதமடு அன்னையின் திருத்தலம் இன்னும் இன்னோரன்ன வரலாற்றுத் தொன்மைகளை தன்னகத்தே கொண்ட மன்னார் மாவட்டம், அதன் தொன்மையை 'மன்னெழில்' நூல் வடிவில் ஆவணமாக்குவதற்கு எடுத்து வரும் முயற்சிகளை மனதாரப் பாராட்டுகின்றேன். விசேடமாக மாவட்டத்தின் வரலாற்றுப் பொக்கிஷங்களாக அமையும் வழிபாட்டுத் தலங்கள் ,கோட்டைகள், விசேடத்துவம் மிக்க இடங்கள் பற்றிய பதிவுகள், உல்லாசப் பயணிகளை கவரும் பிரதேசங்கள், மாவட்டத்திற்கே உரித்தான தொழில்கள் 'மன்னெழில்' மலரில் இடம்பெறவேண்டும் என்பது எனது விருப்பம். இத்தகைய திட்டங்கள் தொடர்ந்தும் முனைப்புடன் முன்னெடுக்கப்படல் வேண்டும். இதற்கு எமது திணைக்களத்தின் ஒத்துழைப்புக்கள் தொடர்ந்தும் கிடைக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திருமதி ராஜமல்லிகை சிவசுந்தரசர்மா**
**பிரதிப் பணிப்பாளர்**
**பண்பாட்டலுவல்கள் திணைக்களம்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடம்பநதியின் காணாமற்போன கிளையாறு பாலாவி, உயிர்ப்புடன் பாயும் அருவியாறு



மு. சுந்தரம் பாண்டியன்

இலங்கைத் தீவின் வடபாகத்தே குதிரைமலையையும், கோகர்ணத்தையும் கிழக்கு மேற்காக இணைத்து நேர்கோடொன்று கற்பனையால் வரையுமிடத்து அதன் வடக்கே அமைந்துள்ள பெருநிலப்பகுதி பரந்து விரிந்து வடக்கில் யாழ்ப்பாணக் கடனீரேரி வரை வியாபித்துள்ளது. இப்பரந்த பிரதேசம் நாட்டின் வரலாற்று நூல்களில் நீண்ட நெடுங்காலமாக வன்னி எனக் கூறப்படுகின்றது. இந்நிலப்பரப்பில் தமிழ் மக்கள் தொன்மைக்குடிகளாகவும் வாழ்ந்து வருகின்றனர். இந் நிலப்பரப்பில் மூன்று பாகங்களிலும் சூழவுள்ள கடல்களிலே கலக்கின்ற இருபத்து மூன்று ஆறுகள் வன்னியின் மத்திய நிலப்பகுதியிலும் வடமத்திய மாகாணங்களிலும் உற்பத்தியாகின்ற மழைக் கால ஆறுகளாகும். கோடைகாலங்களில் இவ் ஆறுகள் வற்றிக் கொண்டு வருகின்றன. வடமத்திய பிரதேசத்தில் உற்பத்தியாகும் 166km நீளமுடைய கடம்பநதி எனப்படுகின்ற மல்வத்து ஓயா சற்று வேறுபாட்டினைக் கொண்டுள்ளது. அனுராதபுர பகுதிகளில் அமைந்துள்ள பெரிய குளங்களில் உவர் நீரினை சிறிய அளவில் கோடை காலங்களிலும் வெளியேற்றுவதால் முற்று முழுதான வரட்சிக்கு வருடத்தின் எக்காலப் பகுதியிலும் உட்படுவதில்லை. இந்நதியானது இலங்கையின் ஆரம்ப கால குடியேற்றத்தோடு பின்னிப்பிணைந்த நீண்ட வரலாற்றை தன்னத்தே கொண்டுள்ளது.

வன்னியின் நீர் பிரிவு மேற்கு வடிகால் அடர்த்தியில் ஆறுகள் பாயும் பகுதி மற்றைய உயர் நிலப்பகுதிகளிலும் தாழ்ந்தவைகளாகும். ஆறுகளின் வடமேற்கு நோக்கிய போக்கிற்கு ஏற்பவே பள்ளத்தாக்கு பிரதேசங்களும் அமைந்து காணப்படுகின்றன. வடமாகாணத்தின் மேற்கு கடலில் கலக்கும் ஆறுகளான மோதரகம ஆறு, கல்லாறு, அருவியாறு, பாலாவியாறு, நாயாறு, பறங்கியாறு, கப்பியாறு, பாலியாறு, பல்லவராயன் கட்டாறு, மண்டகல்லாறு என்பவை களாகும். இவற்றுள் பாலாவியாறு சில நூற்றாண்டுகளாக காணாமற்போய்விட்ட துர்ப்பாக்கிய நிலமை வேதனைக் குரியதாகும். மல்வந்து ஓயா என்பதை கடம்ப நதி அல்லது கதம்ப நதி என்று அழைப்பதுண்டு. ஆற்றின் இரு கரையும் கடம்ப மரங்கள் சோலையாக காணப்படும் காரணத்தாலும் அம்மரங்களிக் மலர்கள் ஆற்று வெள்ளத்தில் நிறைந்து அள்ளுண்டு செல்வதாலும் கதம்ப நதி என்னும் பெயரினையும் பெற்றிருக்கலாம் போல் தோன்றுகின்றது. இதனாற் போலும் சிங்கள மொழியில் மல்வத்து ஓயா என்ற பெயரும் தோன்றியிருக்கலாம் மேலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாற்றங்கரை பகுதிகளில் வாழும் பெரும்பாலானவர்களின் குலத்துக்கான மலராக கடம்ப மலர் கொள்ளப்படுவதும் கருத்திற் கொள்ளகூடியது.

கடம்ப நதியானது கடலில் சங்கமிக்கும் கழிமுகத்தில் இருந்து கிழக்கே சுமார் 50வது கிலோமீற்றர் தூரத்தில் இரு நிலைகளாகப் பிரிந்து வலது கிளை பாலாவியாறு என்றும் இடதுபக்க கிளை அருவியாறு என்றும் முறையே மாந்தைத் துறை என்றும் முத்தரிப்புத் துறை என்றும் குறிப்பிடப்படும் இடங்களிலே கடலுடன் சங்கமித்தன. மாந்தை துறைமுகத்தில் பாலாவியின் கரைமேல் திருக்கேதீஸ்வர திருத்தலம் அமையப்பெற்றமை குறிப்பிடத்தக்கது. கடம்ப நதியின் வழித்தடம் இவ்விதம் இருக்க கிபி 15ம்நூற்றாண்டுகளில் மாந்தை துறைமுகப் பகுதியில் ஏற்பட்டதாக கூறப்படும் கடல்கோள் காரணமாக படிப்படியாக துறைமுகப்பட்டினம் கைவிடப்படும் நிலைமை ஏற்பட்டுள்ளது. பின்வரும் காலங்களில் போர்த்துக்கேயர் வருகையும் வேறு விளைவுகளும் துறைமுகப் பட்டினமான மாந்தையும் பாலாவியாறும் திருக்கேதீஸ்வர ஆலயத்திற்கும் பெரும் இன்னலை ஏற்படுத்தின.

## ஏட்டுத்துலசு (AHEAD SLUICE)

போர்த்துக்கேயர் ஒல்லாந்து ஆட்சிகாலங்களில் நாட்டுக்கும், சுதேச மக்களுக்கும் ஆட்சியாளர்களினால் பல இன்னல்களும், கொடுமைகளும் ஏற்படுத்தப்பட்டன. பின்னர் ஆங்கிலேயர் முழுநாட்டையும் 1815இல் தம் கட்டுபாட்டுக்குள் கொண்டுவந்தனர். பிறட்றிக் நோத் முதல் ஆளுநராக நியமிக்கப்பட்டதன் பின்னர் 1800ஆம் ஆண்டு முதன்முதலில் நில அளவை திணைக்களம் ஆரம்பிக்கப்பட்டது. 1900ஆம் ஆண்டுகளில் உலர், வறள் வலயங்களின் நீர்ப்பாசனத்திட்டங்களில் பெரிதும் ஆர்வம் காட்டினர். பண்டைய மன்னர்களால் கட்டப்பட்ட குளங்களும் ஏரிகளும், கால்வாய்களும் தூர்வாரப்பட்டு விவசாய நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டு பாரிய அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

மல்வத்து ஓயாவின் கிளைகளிலொன்றான அருவியாற்றின் பாயும்திறன் காலத்துக் காலம் வழிந்தடத்தில் சில மாறுதல்களை ஏற்படுத்தினாலும் கடலை நோக்கிய திசைப்போக்கு பெரிதும் மாற்றமடைய வில்லை. ஆனால் பாலாவிக் கிளையாற்றின் வழிநிலத்தடத்தில் மாறுதல்கள் ஏற்பட்டிருந்தமைக்கான சில ஆதாரங்கள் காணப்படுகின்றன. நீண்ட காலங்களின் பின்னர் 1900ஆம் ஆண்டுகளில் நீர்ப்பாசனக் குளங்கள் புனரமைப்புச் செய்யப்பட்ட போது பாலாவிக் கிளையாற்றின் சுவடுகளை ஒட்டியே கட்டுக்கரைக்குளம் நீரைப் பெறுவதற்கான வலதுகரை வாய்க்கால் அமைக்கப்பட்டுள்ளது. பாலாவியின் போக்கு வழி சம காலத்தின் சின்ன உடைப்பு – பெரிய உடைப்புக்கு இடையே தான் அமைந்திருக்க வேண்டும். இவ்விடைப் பகுதியில் குளக்கட்டு அணைமூலம் பாலாவி மறிக்கப்பட்டு குளத்திற்கான நீர் தேக்கப்பட்டது.

பாலாவிக் கிளையாறு, புனரமைக்கப்பட்ட குளப்படுகைக்குள் ஊடறுத்துப் பாய்ந்தமையால்தான் சுமார் முப்பதுக்கும் மேற்பட்ட சிறு கிராமங்கள் ஆங்கிலேயர் மூலம் கட்டுகரைக்குளத்தின் உட்பகுதி யிலிருந்து 1902ஆம் ஆண்டு குளத்தின் வெளியே காணிகள் வழங்கப்பட்டு மக்கள் குடியமர்த்தப்பட்டனர். பாரம்பரியமான பூர்வீகக் கிராமங்களான புல்லறுத்தான் கண்டல், பச்சைக்கிளாச்சி, சின்னத்தரவை, விடத்தல்வேம்பு, ஊற்றுப்பிட்டி போன்ற வற்றின் அடையாள எச்சங்களை இன்றும் காணலாம். செட்டியார் மகன் கட்டையடம்பன் கிராமம் இன்றளவும் பூர்வீகமான இடத்தில் அமைந்திருப்பது சிறந்த உதாரணமாகக் காணப்படுகின்றது. பாலாவியின் வழித்தடம் இன்றளவும் அடையாளம் காணகூடியதாகவுள்ளதுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கேதீஸ்வர ஆலயத்தின் புனித தீர்த்த த்தலமாக விளங்கும் இன்றைய பாலாவியே முன்னைய பாலாவியாற்றின் கழிமுகப் பகுதியில் அமைந்துள்ள தீர்த்தத் தலமாகும்.

வன்னி நாட்டில் கி.பி 7ம் நூற்றாண்டி லிருந்து வரலாற்று நூல்களில் குறிப்பிடப் பட்டுவரும் பத்தினித் தெய்வமான கண்ணகி அம்மன் கோயிலும் இடைமறிக்கப்பட்ட பாலாவி ஆற்றை அண்டியதாகவே அமைந்திருந்ததாக ராஜாவலிய, பத்தினிகொல்முரா போன்ற சிங்கள வரலாற்று நூல்கள் கூறுகின்றன. இதில் கூறப்பட்டுள்ள தன்மைகளைக் கொண்ட பத்தினியம்மன் கற்சிலை மல்வத்து ஓயாவில் கண்டெடுக்கப்பட்டு ஆங்கிலேயப் பொறியியலாளரினால் தலைமைத் துலுசான ஏட்டுதுலுசடியில் பிரதிஸ்டை செய்யப்பட்டுள்ளது. இன்றளவும் இப்பாதையினால் பயணம் செய்வோர் பத்தினி அம்மனுக்கு தேங்காய் உடைத்து வழிபட்டு செல்வதைக் காணமுடிகின்றது.

வரலாற்றுக் காலத்திலிருந்து இன்றைய காலம் வரைக்கும் குறிப்பிடப்படும் பாலாவித்தீர்த்தம் இதுதான் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. பாலாவிக் கிளையாறும் இதுவென்றே கூறமுடியும். எதிர்கால ஆய்வாளர்கள் இது தொடர்பான உண்மைகளை ஆதார பூர்வமாக கண்டறிவார்கள் என்பது எமது அசைக்கமுடியாத நம்பிக்கையாகும்.

சுந்தரர் அருளியது( 7ஆம் நூற்றாண்டு)

அங்கம்மொழி யன்னாரவர் அமரர்தொழு தேத்த
வங்கம்மலி கின்றகடல் மாதோட்டநன் னகரில்
பங்கஞ்செய்த பிறைசூடினன் பாலாவியின் கரைமேல்
செங்கண்அரவு அசைத்தான் திருக்கேதீஸ்வரத்தானே

# வடமேற்கில் ஒரு வளநிலம்



திருமதி. சிவகௌரி புஸ்பராசன்

மேற்குத்திசை கொண்ட கடற்கரை
மேவித் தலை சாய்க்கும் கடல்அலை
மன்னார் என்று பெயர் கொண்டு
மாண்புடன் திகழும் - நகரம்

நெய்தல் நிலம் எங்கள் உறவு
நெல் அரிசி எங்கள் உணவு
நெய்யாய் உருகும் எங்கள் மொழி
நெருடும் ஊதல் வளி

தஞ்சை நிலம் கொண்டு - நிமிர்
நெஞ்சத் திமிர் கொண்டு
தேறிய தமிழ் கொண்டு
நீண்டு நிலைக்கும் நிலமிது

தஞ்சம் வேண்டுவோர் மிது
வஞ்சம் ஏதுமின்றி
வாஞ்சை கொண்டு
கொஞ்சும் மொழி பேசி - கூடிக்குலாவும்

சிறப்பு வரலாறு கொண்ட மாவட்டம்
செயல் வீரம் கொண்ட வாலிபர் கூட்டம்
சமய நெறி இங்கு அறம் பாடும்
செழுமை சீர் கொண்டு அது வாழும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னூரே! மன்னாரே!

மன்னூரான் ஷிஹார்

என்னூரே! மன்னாரே!
வடபுலத்தின் வசந்தமென
வந்துதித்த மன்னாரின்
கடல்வளமும் கழனிகளும்
கண்கொள்ளாக் காட்சிகளும்
தடம்பதித்த சாதனையும்
தமிழ்மணக்கும் ஊர்மனையும்
இடம் பிடித்து எம்மனதை
என்றென்றும் ஆட்கொள்ளும்!
மன்னாரின் மகத்துவத்தை
மனதாறச் சொல்லிவிட
தன்னார்வம் கொண்டெந்தன்
தமிழ்த்தாயை துணைக்கழைத்தேன்,
சொன்னாலும் தீர்ந்திடாத
சுவைமிகுந்த அனுபவங்கள்
என்னோடு சேர்ந்துவிட
இடமளித்த தி(ரு)ப்பதியே!
நிலையில்லா இவ்வுலகில்
நீடுவாழும் பழைமைமிகு
கலைகளையும் மரபினையும்
கண்டுவாழும் எம்பதியின்
விலைமதியாச் செல்வங்களாய்
வித்தகர்கள் தாராளம்
அலைகடலின் முத்தெனவே
அறிஞருண்டு ஏராளம்!
நெய்தல் முல்லை மருதமென
நிறைவான தொழில்வளங்கள்
செய்துவாழும் நிலங்களிங்கு
செழிப்புடனே காட்சிதரும்,
பொய்கை வனம் ஆறு கடல்
பொற்கதிர்கள் ஆடும் வயல்
மெய்மறந்து ரசிக்கவைக்கும்
மேனியினை சிலிர்க்கவைக்கும்!

இந்து முஸ்லிம் கிறிஸ்தவராய்
இங்கு ஒரு பேதமில்லை
எந்த சக்தி வந்தபோதும்
எங்கள் நிலை மாறவில்லை,
வந்தகுடி வாழ்ந்தகுடி
வகுப்புவாதம் பேசவில்லை
சொந்தமென ஒன்றுபட்டே
சுகதுக்கம் நாம் பகிர்ந்தோம்!
வேட்டொலிகள் தீவிரமாய்
விண்பிளந்த நாட்களிலும் - எங்கள்
பாட்டொலிகள் ஓயவில்லை
பண்பாடும் தேயவில்லை,
நாட்டுக்கூத்து வாசாப்பு
நாடகங்கள் குறையவில்லை
பூட்டிவைத்த வீட்டினுள்ளும்
புதுமைமிகு கலைவளர்த்தோம்!
தொண்ணூறில் அகதிகளாய் - நாம்
துயர்சுமந்து போகையிலே
கண்ணீரால் விடைகொடுத்து
கடல்வழியே அனுப்பிவைத்து - தாய்
மண்ணோக்கி மீண்டு(ம்)வர
மகிழ்வுடனே அரவணைத்த
பண்பாடு வரலாறாய்
பதிந்திருக்கும் எம்மனதில்!
மேன்மைமிக்க பண்புகளால்
மிளிர்ந்துநிற்கும் நம் மன்னார்
வானுயர வளர்ச்சிபெற்று
வையகத்தில் புகழோங்க
ஆனவரை அரசதிபர்
அம்மணியும் முயலுகின்றார்
நானொரு கை நீயொருகை
நட்புடனே கோர்ப்போம் வா!
போதையெனும் பொல்லாத
புற்றுநோயும் புரையோடி
வாதையிலே வாலிபரை
வளைத்திழுத்து வீழ்த்துகின்ற
வேதனையைத் துடைத்தெறிந்து
வெற்றிபெற்று வாழ்க்கையிலே
சாதனைகள் புரிந்துவிட
சரியான வழிவகுப்போம்!
மண்வளத்தைச் சூறையிடும்
'மா.'.பியா'வை முறியடிப்போம்!
உண்ணுகின்ற உணவில் இன்னும்
உப்பிட்டே (உ)ரோசம் கொள்வோம்!
கண்களிலே மன்னாரின் - எதிர்
காலத்தைக் கனவுகண்டு
எண்ணுவது உயர்வென்றே
எழுந்திடுவோம் வீறுகொண்டு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கைத் தமிழரின் பூர்வீக வரலாற்றையும், பண்பாட்டையும் அடையாளப்படுத்திக்காட்டும்

# மன்னார் கட்டுக்கரை

## தொல்லியல் அகழ்வாய்வுகள்

சிரேஷ்ட பேராசிரியர் ப. புஷ்பரட்ணம்,

**அறிமுகம்**

இலங்கை தொடர்பாக அண்மைக் காலங்களில் வெளிவந்த வரலாற்று ஆய்வுகள், அரச வரலாற்றுப்பாட நூல்கள், தொல்லியற் கண்டுபிடிப்புக்கள் என்பன இலங்கையின் பூர்வீகமக்கள், பண்பாடு என்பவற்றின் தொடக்ககாலத்தை விஜயன் வருகைக்கு முந்திய நாகரிகத்தில் இருந்து ஆராய்ந்து பார்க்கப்பட வேண்டும் என்பதைக் கோடிட்டுக்காட்டுவதாக உள்ளன. பிரித்தானிய ஆட்சியிலிருந்து இலங்கையின் பூர்வீக வரலாறு தீபவம்சம், மகாவம்சம் முதலான பாளி இலக்கியங்களை அடிப்படையாகக் கொண்டே எழுதப்பட்டு வந்துள்ளன. அவ்விலக்கியங்கள் கி.மு.6ஆம் நூற்றாண்டளவில் வடஇந்தியாவில் இருந்து விஜயன் தலைமையில் ஏற்பட்ட குடியேற்றத்துடனேயே இலங்கையின் மனிதவரலாறும், நாகரிக வரலாறும் தோன்றியதாகக் கூறுகின்றன. இக்குடியேற்றம் நடப்பதற்கு முன்னர் இயக்கர்,நாகர் என்ற இருவினமக்கள் இங்கு வாழ்ந்ததாக இந்நூல்களில் (Mahavamsam:vi-vii.5155) குறிப்பிடப்பட்ட போதிலும் பிற்காலத்தில் எழுந்த பெரும்பாலான வரலாற்று ஆய்வுகளில் அம்மக்களை மனித இனமாகக் கருத்தில் கொள்ளப்படவில்லை (Mendis 1946:8, Paranavithana1961:181-82) மகாவம்சம் வடஇந்தியாவிலிருந்து குடியேறியவர்களை இந்நாட்டிற்குரிய மக்களாகவும், தமிழர்களை அக்கரையிலிருந்து (தென்னிந்தியா) வந்துசென்ற அந்நியராகவும் குறிப்பிடுகின்றது. இக்கதைகளை அடிப்படையாகக் கொண்டெழுந்த பிற்கால வரலாற்று நூல்கள் சிங்கள மக்களை வடஇந்தியாவிலிருந்து குடியேறிய ஆரிய இனக்குழுமத்தின் வழித்தோன்றல்களாகவும், தமிழர்களைத் தமிழ்நாட்டிலிருந்து பிற்காலத்தில் வந்து குடியேறிய அந்நியராகவும் குறிப்பிடுகின்றன. ஆங்கிலேயர் ஆட்சிக்கால வரலாற்று மொழியில் சார்ந்த ஆய்வுகள் சிங்கள மக்களை ஆரியமொழிக் குடும்பத்தைச் சார்ந்தவர்களாகவும், தமிழர்களைத் திராவிட மொழிக்குடும்பத்தைச் சேர்ந்தவர்களாகவும் அடையாளப் படுத்திக்கூறியுள்ளன. ஆயினும் 1970களிலிருந்து இலங்கையில் மேற்கொள்ளப்பட்டு வரும் விஞ்ஞான பூர்வமான தொல்லியல் ஆய்வுகளின் முடிவுகள் வடஇந்தியக் குடியேற்றம் நடந்ததாகக் கூறப்படும் காலத்திற்குப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலநூற்றாண்டுகளுக்கு முன்னரே இலங்கையில் மனித வரலாறும், நாகரிக வரலாறும் தோன்றிவிட்டதை உறுதி செய்கின்றன. இவை தமிழ், சிங்கள மக்களின் பூர்வீக வரலாறு, பண்பாடு பற்றிய பாரம்பரிய வரலாற்றுக் கதைகளையும், நம்பிக்கைகளையும் மீளாய்வு செய்யத் தூண்டியுள்ளன. அவற்றை மேலும் உறுதிப்படுத்துவதில் கட்டுக்கரைத் தொல்லியல் ஆய்வுகளில் கண்டுபிடிக்கப் பட்ட பூர்வீக மக்கள் பற்றிய சான்றுகளுக்கு முக்கிய இடமுண்டு.

### கட்டுக்கரையின் அமைவிடம்

கட்டுக்கரைத் தொல்லியல் மையம் வடஇலங்கையில் மன்னார் மாவட்டத்திற்கு வடகிழக்கே 26கி.மீ. தொலைவில் கட்டுக்கரைப் பிரதேசத்தில் உள்ள குருவில் என்ற சிறிய கிராமத்தில் காணப்படுகின்றது. தற்காலத்தில் இக்குளத்தைச் சுற்றியமைந்துள்ள பிரதேசம் சிங்களத்தில் 'யோதவேவ' எனவும், தமிழில் 'கட்டுக்கரைக்குளம்' எனவும் அழைக்கப்படுகின்றது. ஆயினும் இற்றைக்கு 50 ஆண்டுகளுக்கு முன்னர் இக்குளம் உட்பட அதன் சுற்று வட்டாரத்தில் உள்ள கிராமங்கள் 'பாலப்பெருமாள்கட்டு' என்றே அழைக்கப் பட்டு வந்துள்ளது. இக்குளத்தின் சுற்றுவட்டாரத்தில் உள்ள ஊர்களின் இடப்பெயர்களின் பின்னொட்டுச் சொற்களாகக் குளம், அடி, மோட்டை, வில், புலவு, தாழ்வு, கட்டு, காடு என முடிகின்றன. இப்பின்னொட்டுச் சொற்கள் இற்றைக்கு 2000 ஆண்டுகளுக்கு முன்பிருந்த இடப்பெயர்களிலும் பயன்படுத்தப்பட்டு வந்ததற்கு தமிழ், பாளி இலக்கியங்களும், பிராமிக்கல்வெட்டு களிலும் ஆதாரங்கள் காணப்படுகின்றன (Ragupathy1991, Pushparatnam). இவ்வாதாரங்கள் கட்டுக்கரைப் பிரதேசத்திலுள்ள சில ஊர்ப்பெயர்களுக்கு நீண்டகால வரலாறு இருந்திருக்கலாம் என்பதைக் காட்டுகின்றன.

### தொல்லியல் மேலாய்வு

கட்டுக்கரைகுளம் வடஇலங்கையில் உள்ள மிகப்பெரிய குளங்களில் ஒன்றாகக் காணப்படுகின்றது. இக்குளம் தொடர்பான வரலாற்றுக் கதைகள், இலக்கியக் குறிப்புகள், தொல்பொருட் சான்றுகள் என்பன இக்குளத்திற்கு தொன்மையான வரலாறு இருப்பதை உறுதிப்படுத்து கின்றன. இச்சுற்றாடலில் காணப்பட்ட தொல்பொருட் சின்னங்கள் பற்றிய தகவலை முதலில் அப்பிரதேசத்தைச் சேர்ந்த பாடசாலை அதிபர் டேவிட் அவர்கள் தொல்லியல் மாணவன் கிரிசாந்தனுக்கு கூறியிருந்தார். அத்தகவலின் அடிப்படையில் 2016-2017 ஆண்டு காலப்பகுதியில்யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தொல்லியல் பிரிவு ஆசிரியர்களும்,மாணவர்களும் இங்கு விரிவான தொல்லியல் மேலாய்வினை மேற்கொண்டிருந்தனர். அதன்போது குளநீர்ப்பெருக்கினால் சிதைவடைந்த அணைக்கட்டுக்கள், கால்வாய்கள், குளபரப்பினுள் தொல்பொருட் சின்னங்கள் காணப்பட்ட இடங்கள் என்பவற்றில் இருந்து அதிகளவான தொல்பொருட் சின்னங் களைக் கண்டுபிடிக்க முடிந்தது. குளத்திற்கு வடக்குப்பக்க அணைக் கட்டுடன் இணைந்த காட்டுப்பிரதேசத்திலும், மேட்டுப் பிரதேசத்திலும் பிறதேவைக்காக மண் அகழப்பட்ட ஆழமான குழிகளி லிருந்து தொல்பொருட் சின்னங்களுடன், கலாசார மண்ணடுக்குகளையும் அடையாளம் காணமுடிந்தது. இந்த மேலாய்வின் மூலம் கட்டுக்கரைப் பிரதேசத்தில் கற்காலம் தொட்டு மக்கள் வாழ்ந்து வருவதை உறுதிப்படுத்தும் கற்கருவிகள், பல்வேறு காலகட்ட மட்பாண்டங்கள், சுடுமண் உருவங்கள், கட்டிட எச்சங்கள், கூரை ஓடுகள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செங்கட்டிகள், ஆதிகால, இடைக்கால உள்நாட்டு, வெளிநாட்டு நாணயங்கள் என்பவற்றைக் கண்டுபிடிக்க முடிந்தது. மேலும் இக்குளம்வற்றிய காலங்களில் தெரியவரும் தொல்லியற் சின்னங்களும், கட்டிட எச்சங்களும் இக்குளம் 1896ஆம் ஆண்டு பெருப்பித்துக் கட்டப்படுவதற்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே இங்கிருந்த சிறிய குளங்களை அண்டியதாக மக்கள் குடியிருப்புகள் இருந்ததையும் அறிந்து கொள்ளமுடிந்தது.

### தொல்லியல் அகழ்வாய்வு

வட இலங்கையில் இதுவரை கண்டு பிடிக்கப்பட்ட மிகப்பெரிய புராதன குடியிருப்புமையமாகக் கட்டுக்கரைப் பிரதேசம் அடையாளம் காணப்பட்டுள்ளது. இக்குடியிருப்புகள் கட்டுக்கரைக் குளத்திற்கு வடக்குப்பக்கமாக ஏறத்தாழ 3கிலோமீற்றர் சுற்றுவட்டாரத்தில் இருந்துள்ளதை இதுவரை கண்டு பிடிக்கப்பட்ட தொல்லியல் ஆதாரங்கள் உறுதிசெய்கின்றன. ஆயினும் இப்பிரதேசத்தில் இருந்து பிறதேவைக்காக நீண்டகாலமாக மண் அகழப்பட்டு வருவதனால் அவ்விடங்கள் தற்போது பெரிதும், சிறிதுமான குழிகளாகக் காணப்படுகின்றன. இக்குழிகளில் இருந்து பிற இடங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்ட மண்ணோடு தொல்பொருட் சின்னங்களும் கொண்டுசெல்லப்பட்டுள்ளதை தொலை தூரத்தில் புதிதாக அமைக்கப்பட்ட வீதிகளிலும், அணைக்கட்டுக்களிலும் அவதானிக்க முடிகின்றது. இந்நிலையில் கட்டுக்கரைப் பிரதேசத்தின் பூர்வீக மக்கள், பண்பாடு என்பவற்றைக் கண்டறியும் நோக்கில் 2016-2017 காலப்பகுதியில் இரு இடங்களில் அகழ்வாய்வுகள் மேற் கொள்ளப்பட்டன. அவற்றுள் முதலாவது குளத்தின் வடக்குப்பக்க அணைக்கட்டிற்கு அருகிலும், இரண்டாவது குளநீர் வெளியேறும் வாய்க்காலுக்கு அருகிலும் மேற்கொள்ளப்பட்டன.

முதலாது அகழ்வாய்வில் 6 குழிகள் 4 மீற்றர் நீள, அகலத்தில் இயற்கை மண்ணை அடையாளம் காணும் வரை அகழ்வு செய்யப்பட்டது. ஏறத்தாழ இக்குழிகளின் மேற்படையில் இருந்து முதல் நான்கு அடி ஆழத்தில் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய கலாச்சார மண்ணடுக்கு களைக் காணமுடியவில்லை. அவ்விடங் களின் மேற்படையில் குளத்தின் நீரமட்டம் உயர்வடைந்த காலத்தில் நீரலையினால் அள்ளுண்டுவந்த மண், மட்பாண்ட ஓடுகள், சங்கு, சிற்பி, கடல் உயிரினச்சுவடுகள், சுடுமண் உருவங்கள், புராதன கூரையோடுகள், செங்கற்கள் என்பனவே பரவலாகக் காணப்பட்டன. குழிகளின் நான்கடி ஆழத்திற்கு கீழே 3 வேறுபட்ட கலாசார மண்ணடுக்குகள் காணப்பட்டன. அவற்றுள் முதலிரு மண்ணடுக்குகளில் இருந்து பலவடிங்களில் அமைந்த மட்பாண்டங்கள், மென்தன்மை குறைந்த பெருங்கற்கால கறுப்பு-சிவப்பு நிறமட்பாண்டங்கள், சிறிய மட்கலசங்கள், குறியீடுகள் பொறித்த மட்பாண்ட ஓடுகள், கழிவிரும்புகள் (iron slacks) கற்களில் வடிவமைக்கப்பட்ட கைவளையல்கள், பல வடிவங்களிலும், பலஅளவுகளிலும் செய்யப்பட்ட அகல்விளக்குகள், சுடுமண் தெய்வச்சிலைகள், சிற்பங்கள், சமயச் சின்னங்கள், ஆண், பெண் உருவங்கள், எருது, யானை, குதிரை, பாம்பு, மயில் முதலியவற்றின் சிலைகள், சிற்பங்கள், சங்கு, சிற்பிகள், குவாட்ஸ் கல்லாயுதங்கள், என்பன கண்டுபிடிக்கப்பட்டன. இத்தொல் பொருட் சின்னங்களைத் தொடர்ந்து நான்காவது கலாசார மண்ணடுக்கில் செங்கட்டிகளைப் பயன்படுத்திக் கட்டப்பட்ட அத்திவாரம் காணப்பட்டது. அதன் ஒரு பகுதி குளத்தை நோக்கிக் கட்டப்பட்ட நிலையில் சிதைவடைந்து காணப்பட்டது. இரண்டாவது அகழ்வாய்வில் இரண்டு குழிகள் 4மீற்றர் நீள அகலத்தில் அவற்றின் இயற்கை மண் அடையாளம் காணப்படும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரை ஏறத்தாழ 7அடி ஆழத்திற்கு அகழ்வு செய்யப்பட்டது. இங்கு அகழ்வாய்வுக்குத் தெரிவு செய்யப்பட்ட இருகுழிகளின் மேற்பகுதிகள் இயந்திரங்கள் கொண்டு மண் அகழப்பட்டதனால் அகழ்வு செய்யப்பட்ட குழிகளின் மேற்பரப்பு மண்ணடுக்குகளும், அங்கு கிடைத்த தொல்பொருட் சின்னங்களும் பெருமளவுக்கு குழம்பிய நிலையில் காணப்பட்டன. இதனால் சிதைவடைந்த மண்ணடுக்குகளில் பிற்காலத் தொல்லியற் சான்றுகளுடன் முற்காலத் தொல்லியற் சான்றாதாரங்களும் கலந்துகாணப்பட்டன. அவற்றுள் பலவகை மட்பாண்டங்கள், தாழிகளின் உடைந்த பாகங்கள், சுடுமண் உருவங்கள், கழிவிரும்புகள் என்பன தொன்மைச் சான்றுகளாக அடையாளம் காணமுடிந்தது.

இந்நிலையில் சிதைவடையாதிருந்த கலாசார மண்ணடுக்கில் மேற்கொள்ளப் பட்ட அகழ்வாய்வில் ஏறத்தாழ ஏழடி ஆழத்தில் பெருங்கற்கால அல்லது ஆதியிரும்புக்காலப் பண்பாட்டுக்குரிய இருவகை ஈமச்சின்னங்கள் கண்டுபிடிக்கப் பட்டன. இவை 1980ஆம் ஆண்டு ஆனைக்கோட்டையில் கண்டுபிடிக்கப்பட்ட பெருங்கற்கால ஈமச்சின்னங்களின் பின்னர் வடஇலங்கையில் கண்டுபிடிக்கப்பட்ட இரண்டாவது அதிமுக்கியத்துவம் வாய்ந்த பெருங்கற்கால ஈமச்சின்னங்கள் எனக் கூறலாம். அவற்றுள் முதலாவது அகழ்வாய்வுக் குழியில் கண்டுபிடிக்கப்பட்ட ஈமச் சின்னத்தில் இறந்த மனிதனது எலும்புகளை எருது வடிவில் மண்ணால் செய்யப்பட்டு பின்னர் சுடப்பட்ட ஈமப்பேழைக்குள் (Sarcophagus) வைத்து அடக்கம் செய்யப்பட்டிருந்தது. இவ்வகையான ஈமச்சின்னங்கள் தென்னிந்தியா சிறப்பாக தமிழகப் பெருங்கற்காலப் பண்பாட்டில் பரவலாகப் பயன்படுத்தப்பட்டிருந்தபோதும் அது இலங்கையில் இதுவரை கண்டு பிடிக்கப்பட வில்லை. ஆனால் முதன் முறையாகக் கட்டுக்கரையில் ஈமப்பேழையொன்று கண்டு பிடிக்கப்பட்டிருப்பது பெருங்கற்காலப் பண்பாட்டில் கட்டுக்கரை முக்கிய இடத்தில் இருந்ததைக் காட்டுகின்றது. ஏறத்தாழ மூன்றடி நீளமும், இரண்டடி அகலமும் கொண்ட ஈமப்பேழைக்குள் இறந்தவரது எலும்புகள் வைக்கப்பட்டு அவை வைரமான களிமண் கொண்டு மூடப்பட்டிருந்தது. ஈமப்பேழையை மூடிய மண் மங்கலான சிவப்பு நிறத்தால் தனித்து அடையாளப்படுத்திக் காணப்பட்டது. அத்துடன் ஈமப்பேழையைச் சுற்றி பல்வேறுஅளவுகளில், பலவடிவங்களில் மட்பாண்டங்கள், குவளைகள் வட்டில்கள், மண்தட்டுக்கள் என்பன வைக்கப் பட்டிருந்தன. அவற்றுள் நரைநிறமற்றும் தனிக்கறுப்பு, சிவப்புநிற மட்பாண்டங் களுடன் பெருங்கற்காலப் பண்பாட்டிற்கே தனித்துவமான கறுப்பு சிவப்புநிற மட்பாண்டங்கள் அதிக அளவில் கண்டு பிடிக்கப்பட்டமை சிறப்பாகக் குறிப்பிடத் தக்கது. இம்மட்பாண்டங்கள் இறந்தவர் வாழ்ந்த காலத்தில் பயன்படுத்திய பலதரப்பட்ட பொருட்களை நிவேதனப் பொருட்களாக (படையற் பொருட்கள்) வைப்பதற்கு பயன்படுத்தப் பட்டவையாகும். அவற்றை உறுதிப் படுத்தும் வகையில் இம்மட்பாண்டங் களுடன் கலந்த நிலையில் கார்ணலேயன், அகேட் வகையிலான கல்மணிகள்,இரும்புப் பொருட்கள், குறியீடுகள் பொறித்த மட்பாண்ட ஓடுகள், சுடுமண் உருவங்கள், சங்கு, சிற்பி, கடல் உணவின் எச்சங்கள், தானியவகைகள், மாமிச உணவுகளின் எச்சங்கள் எனபன கிடைத்துள்ளன.

இரண்டாவது ஆய்வுக்குழியில் முதலாவது ஆய்வுக்குழியின் சம ஆழத்தில் இறந்தவரது எலும்பின் பாகங்களை தாழியில் வைத்து அடக்கம் செய்யப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈமச்சின்னம் கண்டுபிடிக்கப்பட்டது. இவ்வகையான ஈமச்சின்னங்கள் பொதுவாக தாழியடக்கம் என அழைக்கப்படுகின்றது. இதுபோன்ற ஈமச்சின்னங்களே தமிழகப் பெருங்கற்காலப் பண்பாட்டில் பரவலாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதை மணிமேகலையில் வரும் 'சுடுவோர் இடுவோர் தொடுகுழிப் படுவோர் தாழ்வையின் அடைப்போர் தாழியிற் கவிப்போர்' என்ற பாடல்வரிகள் உறுதிசெய்கின்றது (மணிமேகலை 6.111.11.66-67). இலங்கையிலும் பெருங்கற்காலக் குடியிருப்புகள் காணப்பட்ட மணற்பாங்கான இடங்களில் பெரும்பாலும் தாழியடக்க முறையே இருந்துள்ளது. இதற்குப் புத்தளம் மாவட்டத்தில் பொம்பரிப்பு என்ற இடத்தில் கண்டுபிடிக்கப்பட்ட நூற்றுக்கணக்கான ஈமத்தாழிகள் சிறந்த சான்றாகும். கட்டுக்கரையில் கண்டுபிடிக்கப்பட்ட ஈமத்தாழி ஒரு அடி உயரமும்,அதன் வாய்ப்பகுதி ஆறு அங்குல விட்டமும் கொண்டது. இத்தாழிக்குள் இறந்தவரது எலும்புகளுடன் மட்பாண்ட ஓடுகளும் கண்டுபிடிக்கப்பட்டன. இம்மட்பாண்டங்கள் படையற்பொருட்கள் வைக்கப்பட்ட பாத்திரங்களாக இருக்கலாம். தாழியைச் சுற்றி பெருங்கற்காலப் பண்பாட்டிற்குரிய கறுப்புச் சிவப்பு நிற மட்பாண்டங்களுடன் பலவடிவங்கள், பலநிறங்கள் கொண்ட மட்பாண்டங்களும் கிடைத்துள்ளன. இவை முதலாவது ஆய்வுக்குழியில் கிடைத்த பொருட்களை பெருமளவிற்கு ஒத்திருப்பதால் அதன் சமகாலத்திற்குரிய ஈமச்சின்னமாகக் கருதலாம். இருப்பினும் இவ்ஈமச்சின்னத்தில் பெருங்கற்காலப் பண்பாட்டுக்கு முந்திய நுண்கற்கால மக்கள் பயன்படுத்திய சேட் கல்லாயுதங்களும் கிடைத்துள்ளன. இவ்வாதாரங்கள் கட்டுக்கரையில் நுண்கற்காலப் பண்பாட்டின் தொடர்ச்சியாகப் பெருங்கற்காலப் பண்பாடு பரவிய போது அப்பண்பாட்டை நுண் கற்கால மக்கள் ஏற்றுக் கொண்டதை உறுதிப்படுத்துவதாக இருக்கலாம், அல்லது பெருங்கற்காலப் பண்பாட்டின் தொடக்க காலத்தில் நுண்கற்கால மக்கள் பயன்படுத்திய கற்கருவிகளை பெருங்கற்கால மக்களும் பயன்படுத்தி யிருக்கலாம். இவ்வாறான பண்பாட்டுத் தொடர்ச்சி தமிழகத்திலும், இலங்கையில் பொம்பரிப்பு, அநுராதபுரம் ஆகிய பெருங்கற்கால மையங்களிலும் கண்டறியப்பட்டுள்ளன. கட்டுக்கரை அகழ்வாய்வில் இரு வேறுபட்ட பண்பாடுகளுக்குரிய ஆதாரங்கள் ஒரேயிடத்தில் ஒன்றுடன் ஒன்று கலந்தநிலையில் கண்டுபிடிக்கப்பட்டிருப்பது இப்பிரதேசத்தின் மனித வரலாறும், பண்பாட்டு வரலாறும் நுண்கற்கால மற்றும் பெருங்கற்காலப் பண்பாட்டுடன் தோன்றி வளர்ந்ததைக் காட்டுவதாக உள்ளன.

**கட்டுக்கரையின் பூர்வீக பண்பாடு.**

இலங்கையில் வாழ்ந்த நுண்கற்கால, பெருங்கற்கால மக்கள், அவர்களின் பண்பாடுகள் என்பன தொடர்பான தொல்லியற் சான்றாதாரங்களை வட இந்தியக் குடியேற்றங்கள் ஏற்படுவதற்கு முன்னர் இலங்கையில் வாழ்ந்த இயக்கர் நாக மக்களுடன் தொடர்புபடுத்தி ஆராயும் போக்கு அண்மைக் காலத்தில் தோன்றியுள்ளது. இதனால் கட்டுக்கரைத் தொல்லியல் ஆய்வுகளின் போது கண்டுபிடிக்கப்பட்ட நுண்கற்கால, பெருங்கற்காலப் பண்பாடுகளின் முக்கியத்துத்தை மேலே கூறப்பட்ட ஆய்வுகளின் பின்னணியில் நோக்கப்படுவது பொருத்தமாகும்.

இலங்கையில் விஜயன் யுகத்திற்கு முந்திய நாகரிக வரலாறு உண்டு என்பதற்கு தொல்லியற் கண்டுபிடிப்புக்களை ஆதாரங்களாகக் காட்டியிருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராசிரியர் சேனகபண்டாரநாயக்கா இலங்கை மக்களின் இன அடையாளங்களுக்கு உடற்கூற்றியல் வேறுபாடுகள் காரணமல்ல, பண்பாட்டு வேறுபாடுகளே காரணம் என்றும் அப்பண்பாட்டு வேறுபாடுகளை இலங்கையில் நாகரிகவரலாறு தோன்றிய காலத்திலிருந்து ஆராய்ந்து பார்க்க வேண்டுமெனவும் வலியுறுத்துகின்றார் (சேனகபண்டாரநாயக1985:1-23) இந்நிலையில் பேராசிரியர் சத்தமங்கல கருணாரட்ன மகாவம்சம் கூறும் நாகரும் இலங்கையில் வாழ்ந்த இனக் குழு என்பதற்கு 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட பிராமிக்கல் வெட்டில் சொல்லப்பட்டுள்ள 'நாககுலம்' என்ற வரலாற்றுக் குறிப்பை ஆதாரமாகக் காட்டுகின்றார் (Karunaratne 1984:56).

மகாவம்சத்தில் குறிப்பிடப்பட்ட நாக என்ற பெயர் வடஇந்தியக் குடியேற்றம் நடந்ததாகக் கூறப்பட்ட காலத்திற்குப் முன்னர் வரலாற்றுத் தொடக்ககால இலங்கையுடன் பின்னிப் பிணைந்த பெயராக இருந்ததைப் பிராமிக் கல்வெட்டுக்களும், சமகாலப் பாளி இலக்கியங்களும் உறுதிசெய்கின்றன. இலங்கையில் இதுவரை ஏறத்தாழ 1500 பிராமிக் கல்வெட்டுக்கள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. அவற்றுள் ஏறத்தாழ 200 கல்வெட்டுக்களில் 'நாக' என்ற பெயரைப் பலதரப்பட்ட மக்களும் தனிநபரின் பெயராகப் பயன்படுத்தியதற்கு ஆதாரங்கள் காணப்படு கின்றன. அப்பெயருக் குரியவர்கள் இனக்குழுத் தலைவர்கள், சிற்றரசர்கள், அரச அதிகாரிகள், வணிகர்கள் என உயர் பதவிகளில் இருந்ததை அக்கல் வெட்டுக்கள் மேலும் உறுதிசெய்கின்றன. வவுனியா மாவட்டத்தில் கண்டுபிடிக்கப்பட்ட நான்கு பிராமிக் கல்வெட்டுக்கள் அங்கிருந்த நாகச் சிற்றரசர்களின் ஆட்சி பற்றிக் கூறுகின்றன. பிராமிக் கல்வெட்டுக்களில் வரும் நாகரைப் பற்றிய செய்திகள் அவற்றின் சமகால வரலாறு கூறும் பாளி இலக்கியங்களிலும் காணப்படுகின்றன. இதற்கு உதாரணமாக அநுராதபுர இராசதானியில் ஆட்சியில் இருந்த துல்லத்தநாக (கி.மு.119), கல்லத்தநாக (கி.மு.109-103), சோறநாக (கி.மு.63-51), மகாநாக (கி.பி.7-9), இளநாக (கி.பி.33-43), மகல்லநாக (கி.பி.136-143), குஜநாக (கி.பி.186-187), குஞ்சநாக (கி.பி.187-189), ஸ்ரீநாக (கி.பி.189-209), அபயநாக (கி.பி. 231-240), ஸ்ரீநாக (கி.பி.240-242) முதலான நாக மன்னர்களின் ஆட்சி பற்றிக் கூறியுள்ளதைக் குறிப்பிடலாம். இவ்வாதாரங்கள் வரலாற்றுத் தொடக்ககால இலங்கையில் வாழ்ந்த நாகர்களுக்கும் வடஇந்தியக் குடியேற்றம் நடப்பதற்கு முன்னர் வாழ்ந்த நாகர்களுக்கும் தொடர்பிருப்பதைக் காட்டுகின்றன.

மகாவம்சம் கூறும் இயக்கரும் நாகரைப் போல் வடஇந்தியக் குடியேற்றத்திற்கு முன்னர் இலங்கையில் வாழ்ந்த இன்னொரு இனக்குழுவாகப் பார்க்கப்படு கின்றது. இதற்குப் பேராசிரியர் ராஜ்சோமதேவ பிராமிக் கல்வெட்டுக்களில் வரும் யக்ஷ என்ற பெயரை ஆதாரமாகக் காட்டுகிறார். இலங்கையில் தோன்றி வளர்ந்த யக்ஷ வழிபாடுகள் பற்றி விரிவாக ஆராய்ந்த பேராசிரியர் சிற்றம்பலம் அவற்றின் தொடக்க காலத்தை மகாவம்சம் கூறும் இயக்கருடன் தொடர்புடையவர்கள் என்பதற்கு பிராமிக் கல்வெட்டுக்களையே ஆதாரங்களாகக் காட்டுகின்றார். தமிழரது பண்பாட்டு அடையாளங்கள் இலங்கையில் வாழ்ந்த பூர்வீக மக்களது பண்பாட்டிலிருந்து தொடங்க வேண்டும் எனக் கூறும் கலாநிதி பொ.இரகுபதி இதற்குச் சான்றாக 2500 ஆண்டுகளுக்கு மேலாகத் தமிழர் மத்தியில் இருந்து வந்த இயக்கவழிபாடு பற்றிக் கால அடிப்படையில் எடுத்துக்கூறி அவ்வழிபாடு காலப்போக்கில் வல்லிபுரநாதர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயமாக மாறியதைப் பொருத்தமான ஆதாரங்களுடன் நிறுவியுள்ளார் (இரகுபதி 2006:1-23).

மேற்கூறப்பட்ட கருத்துக்கள் இலங்கை மக்களின் வரலாறும், பண்பாடுகளும் இதுவரைகால வரலாற்று ஆய்வுகளில் கவனத்தில் கொள்ளப்படாத யக்ஷ, நாக மக்களிலிருந்து பார்க்கப்படவேண்டும் என்பதைச் சுட்டிக்காட்டுகின்றன. தொல்லியல் அறிஞர்கள்இயக்கர்நாக மக்களின் பண்பாடுகளாக நுண்கற்காலப் பண்பாட்டையும் (Mesolithic Culture), பெருங்கற்கால (Megalithic Culture) அல்லது ஆதியிரும்புக்காலப் (Early Iron Age Culture) பண்பாட்டையும் அடையாளப்படுத்துகின்றனர். மானிடவியல் அறிஞர்கள் உடற்கூற்றியல் அடிப்படையில் இம்மக்களை ஆதிஒஸ்ரலோயிட் மற்றும் திராவிட மக்கள் எனவும், மொழியியல் அறிஞர்கள் இவர்கள் பேசிய மொழிகளை ஆதிஒஸ்ரிக் மற்றும் திராவிட மொழிகள் எனவும் கூறுகின்றனர். கட்டுக்கரைத் தொல்லியல் ஆய்வுகளில் மேற்கூறப்பட்ட இருவகைப் பண்பாடு மக்களும் வாழ்ந்ததற்கான உறுதியான ஆதாரங்கள் கிடைத்துள்ளன. இதனால் அப்பண்பாடு களின் முக்கியத்துவத்தை சமகால தென்னிந்திய, இலங்கைப் பண்பாடுகளின் பின்னணியில் ஒப்பிட்டுப் பார்ப்பது கட்டுக்கரைத் தொல்லியற் கண்டுபிடிப்புக் களின் முக்கியத்துவத்தை மதிப்பீடு செய்வதற்குப் பெரிதும் உதவலாம்.

**கட்டுக்கரையும் நுண்கற்காலப் பண்பாடும்**

இலங்கையில் இதுவரை மேற்கொள்ளப் பட்ட தொல்லியல் ஆய்விலிருந்து இற்றைக்கு 125000 ஆண்டிலிருந்து நாடோடிகளாக உணவுக்கு அலைந்து திரிந்த மேலைப் பழங்கற்கால மக்கள் வாழ்ந்ததற்கான ஆதாரங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. 1970 களில் வடஇலங்கையில் இரணைமடு பிரதேசத்தில் தொல்லியல் ஆய்வை மேற்கொண்ட கலாநிதி சிரான்தெரணியகல இக்கற்கால மக்கள் பெரிய மிருகங்களை வேட்டையாடவும், காடுகளில் இயற்கை யாகக் கிடைக்கும் காய்கனிகள், கிழங்கு வகைகளைப் பறிக்கவும் பயன்படுத்திய குவாட்ஸ், சேட் வகையிலான கற்கருவிகள் பலவற்றைக் கண்டுபிடித்ததாகக் கூறுகிறார். மேலும் இக்கற்கால மக்கள் இரணைமடுவில் இருந்து தெற்கே மாங்குளம், தென்மேற்கே மன்னார், வடக்கே வெற்றிலைக்கேணி வரை வாழ்ந்திருக் கலாம் எனவும் கூறுகின்றார். சமகாலத்தில் இம்மேலைப் பழங்கற்கால மக்கள் தென்னிலங்கையில் முந்தல், பலாங் கொடை முதலான இடங்களில் வாழ்ந்ததற்கும் ஆதாரங்கள் கிடைத் துள்ளன. இருப்பினும் இக்கற்காலப் பண்பாட்டிற்கும் பிற்காலத்தில் இலங்கை யில் தோன்றி வளர்ந்த பண்பாடுகளுக்கும் இடையிலான தொடர்புகள் பற்றி இதுவரை முழுமையான ஆய்வுகள் மேற்கொள்ளப் படவில்லை.

இம்மேலைப் பழங்கற்காலப் பண்பாடு மறைந்து நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் வாழ்ந்த இடைக்கற்கால மக்களது பண்பாடு பிற்கால இலங்கைப்பண்பாடு களுடன் கலந்து கொண்டமைக்கான ஆதாரங்கள் கண்டறியப்பட்டுள்ளன. இம்மக்கள் நாடோடிகளாகத் திரிந்து வேட்டையாடவும், உணவு சேகரிக்கவும் தொழில்நுட்பம் வாய்ந்த நுண்ணிய கற்கருவிகளைப் பயன்படுத்தியதால் தொல்லியலாளர் இப்பண்பாட்டை நுண்கற்காலப் பண்பாட்டு அல்லது குறுணிக்கற்காலப் பண்பாடு எனப் பெயரிட்டுள்ளனர். இம்மக்கள்கி.மு. 37000 இல் இருந்து மலைநாடு தொட்டு தாழ்நிலம் வரை ஏறத்தாழ 75க்கு மேற்பட்ட இடங்களில் வாழ்ந்ததற்கான சான்றா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாரங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. வடஇலங்கையில் மாதோட்டம், மாங்குளம், பூநகரி, இரணைமடு, புளியங்குளம் ஆகிய இடங்களிலும் இப்பண்பாட்டு மக்கள் பயன்படுத்திய குவாட்ஸ், சேட் வகையிலான கற்கருவிகள் கண்டறியப் பட்டுள்ளன.

தென்னிலங்கையில் பலாங்கொடைக்கு அண்மையில் உள்ள குகைகளில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வுகளில் காலத்தால் முந்திய நுண்கற்கால கருவிகளும், மனித எச்சங்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இதன் காரணமாக இப்பண்பாட்டை பலாங் கொடைப் பண்பாடு எனவும், இங்கு வாழ்ந்த மக்களை பலாங்கொடை மனிதர்கள் எனவும் அழைக்கப்படுகின்றது. இப்பண்பாட்டு மக்கள் கற்கருவிகளுடன் மிருக எலும்புகள், மான்கொம்புகள் என்பவற்றால் வடிவமைக்கப்பட்ட முனைகள், ஊசிகள் போன்ற கருவிகளையும் பயன்படுத்தியதற்கு ஆதாரங்கள் கிடைத்துள்ளன (Seniveratne 1085:149, Deraniyagala 1992:278-81, 2004:9)இம்மக்களின் தற்காலிக இருப்பிடங்கள் மிக அரிதாகவும், சிறிதாகவும் காணப்பட்டன. அவை ஏறத்தாழ 50 சதுரமீற்றரில் ஒரு சில மையக் குடும்பங்கள் வாழக்கூடிய நிலையில் அமைந்திருந்தன (Deraniyagala 1992:351). இம்மக்கள் இறந்தவர்களை தமது வாழ்விடங்களிலேயே அடக்கம் செய்தனர். பாகியன் மற்றும் ரணவிலாகுகை ஆய்வுகளில் இறந்த மனிதனின் சில எலும்புகளை மட்டும் அடக்கம் செய்து அதன்மேல் செம்மண்ணால் பூசப்பட்டிருந்ததற்கான தடயங்கள் கண்டறியப்பட்டுள்ளது. இம்மரபு அக்கால மக்களின் சமய நம்பிக்கைகளைப் பிரதிபலிப்பதாகக் கருதப்படுகின்றது (Deraniyagala1992: 465-7,696). பெல்லன்பதிபெலஸ குகை ஆய்வுகளிலிருந்து இம்மக்கள் பலவகைப்பட்ட தானியங்கள், கிழங்கு வகைகள், பழங்கள், காட்டுவிலங்குகள், மீன் போன்ற கடல் உணவுகளையும் பயன்படுத்தியுள்ளமை தெரியவந்துள்ளது. இச்சான்றுகளில் இருந்து இம்மக்கள் உணவுகளைச் சேமித்து வைக்கும் பழக்கத்தையும், நெருப்பின் பயன் பாட்டையும் ஓரளவு அறிந்திருந்தனர் என்பது மேலும் தெரியவந்துள்ளது. சிரான் தெரணியகல சில குகை ஓவியங்கள் நுண்கற்கால மக்களுக்கு உரியவையாக இருக்கலாம் எனக் கருதுகிறார் (1992:465,2004:10). குருவித்தைக்கு அண்மையில் உள்ள பட்டதெம்பா குகையி லிருந்து சங்கிலிருந்து வடிவமைக்கப்பட்ட மணிகள், சங்கு, சிப்பி என்பனவும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவை அக்காலமக்களின் கலையுணர் வையும், கடற்கரையோடு இம்மக்களுக் கிருந்த தொடர்பையும் எடுத்துக்காட்டு கின்றன. அண்மையில் ஹற்றன் சமவெளியில் கண்டுபிடித்த தானிய விதைகளை ஆய்வுக்கு உட்படுத்தியதி லிருந்து கி.மு 17000 ஆண்டளவில் வாற்கோதுமை, ஓட்ஸ் எனப்படும் தானியங்கள் இம்மக்களால் பயிரிடப் பட்டமை உறுதிசெய்யப்பட்டிருக்கின்றது.

ஆகவே நுண்கற்காலப் பண்பாடு பற்றி ஆதாரங்கள் மேலைப்பழங்கற்காலப் பண்பாட்டின் மறைவிற்குப் பின்னர் இலங்கையில் ஓரளவு நாகரிகமுடைய மக்கள் வாழ்ந்துள்ளனர் என்பதை எடுத்துக்காட்டுகின்றன. இம்மக்கள் பிற்காலத்தில் தோன்றிய பெருங்கற்கால அல்லது ஆதி இரும்புக்கால மக்கள் அறிமுகப்படுத்திய புதிய பண்பாட்டுடன் கலந்துள்ளனர். இந்த உண்மை பொம்பரிப்பு, அநுராதபுரம் ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகழ்வாய்வுகளின் போது நுண்கற்காலப் பண்பாட்டின் தொடர்ச்சியாக அதன் மேற்படையில் பெருங்கற்காலப் பண்பாட்டிற்குரிய சான்றுகளும், அதன் தொடர்ச்சியாக வரலாற்றுத் தொடக்ககாலப் பண்பாட்டுச் சான்றுகளும் கண்டுபிடிக்கப் பட்டதிலிருந்து உறுதியாகின்றது.

கட்டுக்கரையில் இதுவரை மேற்கொள்ளப் பட்ட தொல்லியல் ஆய்வுகளிலிருந்து இப்பிரதேசத்தின் தொடக்ககால மனித வரலாறும், பண்பாடும் நுண்கற்காலப் பண்பாட்டுடன் தொடங்கியதை இங்கு கண்டுபிடித்த குவாட்ஸ், சேட் வகையிலான கற்கருவிகள் உறுதிசெய்கின்றன இக்கற்கருவிகளும், கருவிகளை வடிவமைக்கும் போது ஏற்பட்ட கற்களின் சிதறல்களும் அகழ்வு செய்யப்பட்ட குழிகளில் கிடைத்தவற்றை விட பிறதேவைகளுக்காக மண் அகழப்பட்ட குழிகளில் இருந்தே அதிக எண்ணிக்கையில் கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. ஆயினும் அகழ்வு செய்யப்பட்ட குழிகளில் பெருங்கற்காலச் சின்னங்களுடன் கலந்த நிலையில் இக்கருவிகள் கண்டுபிடிக்கப்பட்டமை கட்டுக்கரைப் பிரதேசத்தில் நுண்கற்காலப் பண்பாடும், அம்மக்களும் பின்னர் அறிமுகமான பெருங்கற்காலப் பண்பாட்டுக்குள் உள்வாங்கப்பட்டதை உறுதிசெய்கின்றன.

**கட்டுக்கரையும் பெருங்கற்காலப் பண்பாடும்**

கட்டுக்கரையில் நுண்கற்காலப் பண்பாட்டின் தொடர்ச்சியாகப் பெருங்கற்காலப் பண்பாடு தோன்றியுள்ளது. இங்கு மேற்கொள்ளப்பட்ட இரு அகழ்வாய்விலும் இப்பண்பாடு பற்றிய ஆதாரங்களே அதிக அளவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவை வடஇலங்கை வரலாற்றுக்கு சிறப்பாக இலங்கைத் தமிழர் வரலாற்றிற்குப் புதுவெளிச்ச மூட்டுவதாக உள்ளன. பெருங்கற்காலப் பண்பாடு என்பது இறந்தவர்களுக்கான ஈமச் சின்னங்கள் பெரிய கற்களைக் கொண்டு அமைக்கப்பட்டதால் தோன்றிய பெயராகும். ஆதிகால மக்கள் இறந்தவர்களுக்கு மறுபிறப்பு உண்டு என்ற நம்பிக்கையில் தமது வாழ்விடங்களை விட இறந்தவர்களுக்கு பெரிய கற்களைப் பயன்படுத்தி ஈமச்சின்னங்களை அமைத்ததற்கான சான்றுகள் பல நாடுகளில் காணப்படுகின்றன. ஆயினும் திராவிட மொழி பேசும் தென்னிந்திய மாநிலங்களின் பெருங்கற்காலப் பண்பாட்டிற்குச் சில தனித்துவமான அம்சங்கள் காணப்படுகின்றன. அதிலும் தென்தமிழகப் பெருங்கற்காலப் பண்பாடும் இலங்கைப் பெருங்கற்காலப் பண்பாடும் ஒரே பிராந்தியம் என மயங்கும் அளவிற்கு பல அம்சங்களில் நெருங்கிய ஒற்றுமை கொண்டு காணப்படுகின்றன. அவற்றுள் இரும்பின் உபயோகம், கறுப்புச் சிவப்பு மட்பாண்டங்களின் பயன்பாடு, தாழியடக்க முறை, சுடுமண் கலைவடிவங்கள் என்பன தனித்துவமான அம்சங்களாகப் பார்க்கப்படுகின்றது. இதனால் பெரிய கற்கள் கொண்டு ஈமச்சின்னங்கள் அமைக்கப்படாத இடங்களில் இப்பண்பாட்டுச் சின்னங்கள் காணப்படுமாயின் அப்பண்பாடும் பெருங்கற்காலப் பண்பாடு அல்லது ஆதியிரும்புக்காலப் பண்பாடு என அழைக்கப்படுகின்றது.

இலங்கையிலும் தென்னிந்தியாவிலும் சிறப்பாக தென் தமிழகத்திலும் பெருங்கற்காலப் பண்பாட்டின் தோற்றம் வரலாற்றின் புதிய காலகட்டத்தின் தொடக்கமாகப் பார்க்கப்படுகின்றது. இப்பண்பாட்டின் தோற்றத்துடன் நாடோடிகளாக வாழ்ந்த மக்கள் ஓர் இடத்தில் நிரந்தரமாகக் கூடி வாழ்தல், நிரந்தர பொருளாதாரம், நீர்ப்பாசன விவசாயம், குளத்தை மையப்படுத்திய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமக் குடியிருப்புக்கள், இரும்பின் அறிமுகம், மிகை உற்பத்தி, சிறுதொழில் நுட்ப வளர்ச்சி, சக்கரங்களைப் பயன் படுத்திய மட்பாண்ட உற்பத்தி, பண்டமாற்று, உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தகம், நகரமயமாக்கம், அரச உருவாக்கம் என்பன தோற்றம்பெற்றன. இலங்கையில் ஏறத்தாழ 60க்கு மேற்பட்ட இடங்களில் பெருங்கற்காலக் குடியிருப்புக்களும், ஈமச் சின்ன மையங்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் மிகப் பெரிய குடியிருப்பு மையமாக அநுராதபுரம் அடையாளம் காணப்பட்டுள்ளது. இரண்டாவது பெரிய குடியிருப்பு மையமாக வடஇலங்கையில் கந்தரோடை அடையாளம் காணப் பட்டுள்ளது. ஆரம்பத்தில் இலங்கையின் கரையோரங்களில் குடியேறிய மக்களே காலப்போக்கில் வளமான இடங்களைத் தேடிச் சென்று அவ்விடங்களில் குடியேறினர் (Seneviratne 1983 237 - 307) அவற்றுள் பௌதீக மற்றும் கனிமவளங்கள் என்பவற்றைக் கொண்டிருந்த அநுராதபுரம், கந்தரோடை, மகாகமை ஆகிய இடங்களில் பரந்த பெருங்கற்காலக் குடியிருப்புக்கள் உருவாகி அவ்விடங்களில் ஆரம்பகால நகரமயமாக்கமும், அரச உருவாக்கமும் ஏற்பட்டன. அவற்றுள் அநுராதபுரத்தில் மிகப்பெரிய குடியிருப்புகள் தோன்றியதால் அங்கு பலமான மைய அரசு தோன்றியது. 1994ஆம் ஆண்டு காலப்பகுதியில் இங்கு அகழ்வாய்வு செய்த பேராசிரியர் கனிங்காம் தலைமையிலான குழுவினரால் கண்டு பிடிக்கப்பட்ட சான்றுகள் நவீன கணிப்பில் பெருங்கற்காலப் பண்பாட்டின் தோற்றம் கி.மு.1000 (இற்றைக்கு 3000 ஆண்டுகளுக்கு) எனக் கணிப்பிடப் பட்டுள்ளது. இக்காலக் கணிப்பு வடஇந்தியக் குடியேற்றம் நடந்ததாகக் கூறப்படும் காலத்திற்கு 400 ஆண்டுகளுக்கு முன்னரே தமிழகத் தொடர்பால் இலங்கையின் நாகரிக வரலாறு தோன்றியமை உறுதிப்படுத்தப்பட்டது.

### பெருங்கற்காலப் பண்பாட்டில் கட்டுக்கரையின் முக்கியத்தும்

வட இலங்கையில் இதுவரை கண்டுபிடிக்கப் பட்ட மிகப்பெரிய பெருங்கற்காலக் குடியிருப்பு மையமாகக் கட்டுக்கரை காணப்படுகின்றது. இதை அநுராதபுரத் திற்கு அடுத்த நிலையில் கண்டு பிடிக்கப்பட்ட மிகப்பெரிய குடியிருப்பு பிரதேசம் எனக் கூறலாம்.கட்டுக்கரைப் பெருங்கற்காலப் பண்பாடு சமகாலத் தமிழக, இலங்கைப் பெருங்கற்காலப் பண்பாடுகளுடன் ஒற்றுமை கொண்டிருந் தாலும் சில சான்றாதாரங்கள் வட இலங்கையின் பூர்வீக வரலாற்றிற்கு அதிலும் குறிப்பாகத் தமிழர் வரலாற்றிற்குப் புதிய செய்திகளைக் கூறுவதாக உள்ளன. கட்டுக்கரைத் தொல்லியல் ஆய்விலேயே பெருங்கற்கால மக்களின் சமய நம்பிக்கைகளை வெளிப்படுத்தும் அதிகளவிலான சான்றுகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் நாகவழிபாட்டுக்குஉரிய சான்றாதாரங்கள் மிகப்பெரிய அளவில் கிடைத்திருப்பது சிறப்பாக நோக்கத்தக்கது. பெருங்கற்காலப் பண்பாட்டில் குடியிருப்பு, ஈமக்காடு, குளம் என்பன ஒருங்கே அமைந்திருப்பது அப்பண்பாட்டின் முக்கிய அம்சங்களாகும். இந்த நான்கு அம்சங்களும் தமிழகப் பெருங்கற்காலப் பண்பாட்டில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. ஆயினும் இலங்கைப் பெருங்கற்காலப் பண்பாட்டில் இந்த அம்சங்கள் குறிப்பிட்ட மையப்பரப் பிற்குள் இதுவரை கண்டுபிடிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. ஆனால்கட்டுக்கரையில் இந்த நான்கு அம்சங்களும் ஒரு குறுகிய வட்டத்திற்குள் கண்டுபிடிக்கப்பட்டிருப்பது இங்கு சிறப்பாக நோக்கத்தக்கது. பெருங்கற்கால மக்கள் இறந்தவர்களை அடக்கம் செய்வதற்கு பல அளவுகளில்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல வடிவங்களில் ஈமச் சின்னங்களை அமைத்துள்ளனர். அவற்றுள் எருது, யானை போன்ற மிருகங்களின் உருவங்களை மண்ணில் செய்து அவற்றுள் இறந்தவரின் உடலை அல்லது எலும்புகளை வைத்து அடக்கம் செய்யும் ஈமப்பேழை சிறப்பான அம்சமாக நோக்கப்படுகின்றது. ஆயினும் இலங்கைப் பெருங்கற்கால ஈமச் சின்னங்களுள் இவ்வகையான ஈமப்பேழை கண்டு பிடித்ததாகத் தெரியவில்லை. கட்டுக்கரை அகழ்வாய்வில் தாழியடக்க ஈமச் சின்னத்துடன் ஈமப்பேழை ஈமச்சின்னமும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதுவே இலங்கையில் கண்டுபிடிக்கப்பட்ட முதலாவது பெருங்கற்கால ஈமப்பேழையாக இருக்கலாம். வரலாற்று மூலங்கள் பலவும் இலங்கையின் வரலாற்றுப் பழமைவாய்ந்த துறைமுகமாக வடஇலங்கையில் உள்ள மாதோட்டத்தைக் குறிப்பிடுகின்றன. அங்கு 1825இல் இருந்து 1984வரை விரிவான தொல்லியல் அகழ்வாய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆயினும் அங்கு கண்டுபிடிக்கப்படாத தொன்மைச் சான்றுகள் கட்டுக்கரையில் கண்டு பிடிக்கப்பட்டு வருகின்றன. இச்சான்றுகள் மாதோட்டத்தில் இருந்து துறைமுக நகரத்தை அடையாளம்காண உதவலாம். தென்னாசியாவில் கி.மு.3ஆம் நூற்றாண்டளவில் பிராமி எழுத்து தோன்றுவதற்கு முன்னர் இங்கு வாழ்ந்த மக்களிடையே குறியீடுகள் ஒரு தொடர்பு மொழியாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. சிந்துவெளி நாகரிகத்தில் தோன்றிய இக்குறியீடுகள் மேற்கிந்தியா ஊடாக பெருங்கற்காலப் பண்பாடு வரை தொடர்ந்ததற்கு ஆதாரங்கள் காணப்படுகின்றன. கட்டுக்கரை அகழ்வாய்வில் கண்டுபிடிக்கப்பட்ட பெருங்கற்கால மட்பாண்டங்களில் சிலவகையான குறியீடுகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் ஒரு குறியீடு சிந்துவெளிநாகரிக காலச் சிறப்புக் குறியீடாகக் காணப்படுகின்றது. இக்குறியீட்டை தென்னிந்தியாவின் முதன்மைத் தொல்லியலாளர்களில் ஒருவரான பேராசிரியர் இராஜன் கட்டுக்கரை பெருங்கற்காலக் குடியிருப்புகளின் தோற்றம் தமிழகத்தின் மிகப்பெரிய குடியிருப்பு மையமான கொடுமணலின் சமகாலமாக அல்லது அதற்கு முற்பட்டகாலமாக இருக்கலாம் எனக் கூறியிருப்பது இங்கு சிறப்பாக நோக்கத்தக்கது. மேலும் கட்டுக்கரைத் தொல்லியல் ஆய்வில் கண்டுபிடிக்கப்பட்ட சமயம், சமய நம்பிக்கைகள், உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தகம், நகரமயமாக்கம், சிறு கைத்தொழில்சாலைகள் என்பன தொடர்பான தொல்லியற் சான்றுகள் பெருங்கற்காலப் பண்பாட்டுடன் கட்டுக்கரையில் வலுவான ஒரு நாகரிகம் உருவாகிவிட்டது என்பதை உறுதிப் படுத்துவதாக உள்ளன.

### பெருங்கற்கால மக்களின் சமய நம்பிக்கைகள்

கி.மு.3ஆம் நூற்றாண்டு பௌத்த மதம் இலங்கையில் அறிமுகப்படுத்தப்படுவதற்கு முன்னர் இங்கு வாழ்ந்த மக்களிடையே நிலவிய சமய நம்பிக்கைகள் இந்து மதத்துடன் தொடர்புடையவையாக இருந்துள்ளன. இதைப் பௌத்த மதத்தை முன்னிலைப்படுத்தி கூறும் பாளி இலக்கியங்களும் உறுதிசெய்கின்றன. இம்மத நம்பிக்கைகள் பற்றிப் பல அறிஞர்களும் ஆராய்ந்துள்ளனர் (Paranavithana 1970,சிற்றம்பலம் 1996, பத்மநாதன் 2016, இரகுபதி2006) இந்த உண்மையை பெருங்கற்காலப் பண்பாடு பற்றிய ஆய்வுகளில் கண்டுபிடிக்கப்பட்ட சுடுமண் சிற்பங்கள், சிலைகள், சமயச் சின்னங்கள், குறியீடுகள் என்பனவும் உறுதிசெய்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுக்கரைத் தொல்லியல் அகழ்வாய்வின் போது பெருங்கற்காலக் குடியிருப்புப் பகுதியிலிருந்து வெளிவந்த சமயச் சின்னங்கள் பொது மக்கள் பலரின் கவனத்தைக் கட்டுக்கரையின் பக்கம் திரும்பிப் பார்க்க வைத்திருந்தது. அவற்றுள் கட்டுக்கரைக் குளத்தின் வடக்குப்பக்க அணைக்கட்டுப்பகுதி அகழ்வாய்வின் மூன்றாவது கலாசாரமண் அடுக்கில் கண்டுபிடிக்கப்பட்ட சமயச் சான்றுகள் இங்கு சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. இச்சான்றுகள் செங்கட்டிகள் கொண்டு கட்டப்பட்ட அத்திவாரத்திற்கு உட்பட்ட பகுதியிருந்து கண்டுபிடிக்கப்பட்டவையாகும். இக்கட்டிட அத்திவாரம் இவ்விடத்தில் பழமையான ஆலயம் அல்லது சமயச் சடங்கு நடந்த மண்டபம் இருந்திருக்கலாம் என்பதை உறுதிப்படுத்துகின்றது. இக்கட்டிடப் பகுதியில் இருந்தே பெருமளவு சுடுமண் சிற்பங்கள், சிலைகள், மணிகள், யானை, குதிரை, நந்தி, முதலான தெய்வ வாகனங்களின் பாகங்கள், அகல் விளக்குகள், தீபங்கள், சமயச் சின்னங்கள், இலட்சனைகள், குறியீடுகள் என்பன கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இக்கலைவடிவங்கள் களிமண் அல்லது களி மண்ணுடன் குருமணல், நெல்லுமி அல்லது வைக்கோல் என்பன கலந்து வடிவமைக்கப்பட்டு பின்னர் அவை சுடப்பட்டவையாகக் காணப்படுகின்றன. இவை தமிழகப் பெருங்கற்காலப் பண்பாட்டு மையங்களில் கண்டுபிடிக்கப்பட்ட சமயச் சின்னங்களைப் பெருமளவு ஒத்ததாகக் காணப்படுகின்றன. தமிழகத்தில் பெருங்கற்காலப் பண்பாட்டிலிருந்து கி.பி. 6ஆம் நூற்றாண்டுவரை இந்து ஆலயங்களும், அவை சார்ந்த கலைவடிங்களும் அழியக்கூடிய மண், மரம், சுதை என்பன கொண்டு அமைக்கப்பட்டவையாகும். இம்மரபே சமகால இலங்கையிலும் பின்பற்றப் பட்டதாகக்கூறப்படுகின்றது.

கட்டுக்கரைத் தொல்லியல் அகழ்வாய்வில் சிவன், முருகன், விநாயகர், அகத்தியர், நாகம் முதலான வழிபாடுகளுக்குரிய சின்னங்கள், சிற்பங்கள், சிலைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் ஐயனார் வழிபாட்டுக்குரிய சான்றுகளே அதிக அளவில் கிடைத்துள்ளன. இவற்றின் அடிப்படையில் இங்கு கண்டுபிடிக்கப்பட்ட கட்டிட எச்சங்கள் இங்கு ஐயனாருக்குரிய ஆலயம் அல்லது ஐயனார் வழிபாட்டுச் சடங்கு நடந்த இடமாக எடுத்துக் கொள்வதே பொருத்தமாகும். தென்தமிழகத்திலும், இலங்கையிலும் பெருங்கற்காலப் பண்பாட்டுடன் தோன்றிய குளக்குடியிருப்பில் ஐயனாரை முக்கிய தெய்வமாக வழிபடும் மரபு இருந்துள்ளது. இது பொருளாதாரச் செழிப்பிற்காகவும், இயற்கை அனர்த்தங்கள் மற்றும் கொடிய மிருகங்கள் என்பவற்றிலிருந்து பாதுகாக்கவும் மக்களால் வழிபடப் பட்டதாகக் கூறப்படுகின்றது. இதற்கு தமிழகத்தில் மதுரை மாவட்டத்தில் கண்டுபிடிக்கப்பட்ட மிகத் தொன்மையான ஐயனார் வழிபாட்டுக்குரிய சின்னங்கள் சிறந்த சான்றுகளாகும். வன்னியிலும் பண்டு தொட்டு ஐயனார் ஒரு முக்கிய தெய்வமாக வழிபடப்பட்டு வருவதற்குப் பல ஆதாரங்கள் காணப்படுகின்றன. கட்டுக்கரை அகழ்வாய்வுகளில் ஐயனார் தெய்வத்தை அடையாளப்படுத்தும் நூற்றுக்கணக்கான யானை, குதிரை என்பவற்றின் உடற்பாகங்கள், தலைப்பகுதிகள், 75 இற்கும் மேற்பட்ட யானைத் தந்தங்கள், 50 இற்கும் மேற்பட்ட யானை, குதிரை, நந்தி முதலான வாகனங்களின் கழுத்தில் அணியப் பட்டிருந்த மணிகள் என்பன கண்டு பிடிக்கப்பட்டமை இங்கு சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. இவ்வாதாரங்களிடையே யானை அல்லது குதிரையின் மேலமைந்திருந்த பீடத்தில் தெய்வீக கோலத்தில் இரு கால்களையும் கீழே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொங்கவிடப்பட்ட நிலையில் இருக்கும் இரு பெண் தெய்வங்களின் அரிய சிலைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவை ஐயனாரின் இரு தேவியர்களைக் குறிப்பதாக அறிஞர்கள் கருதுகின்றனர். இவற்றைத் தவிர ஆண்,பெண் தெய்வங்களின் தலை உருவங்கள் பலவும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவை ஐயனார், ஐயனாரின் தேவியர்களின் சிலைகளின் உடைந்த பாகங்களாக இருக்கலாம்.

இங்கு ஐயனார் வழிபாட்டுக்குரிய சான்றுகளுடன் சிவன், முருகன், விநாயகர், அகத்தியர் முதலான வழிபாட்டுக்குரிய சான்றுகளும் கிடைத்துள்ளன. இவ்வாதாரங்கள் பிற்கால ஐயனார் ஆலயங்களில் பிறதெய்வங்களையும் வைத்து வழிபடப்படும் மரபு பெருங்கற்காலப் பண்பாட்டிலிருந்து தோன்றியதை எடுத்துக்காட்டுகின்றன. அல்லது பொருளாதாரச் செழிப்பு, பாதுகாப்பிற்காக ஐயனாரை வழிபாடு செய்த மக்கள் தமது குலத் தெய்வங்களின் உருவங்களை, சின்னங்களை மண்ணிலே செய்து ஐயனாருக்கு காணிக்கையாக வழங்கியிருக்கலாம் அல்லது அவ்விடத்தில் வைத்து வழிபாடு செய்திருக்கலாம்.

இங்கு கண்டுபிடிக்கப்பட்ட நந்தி, ஆவுடையுடன் கூடிய சிவலிங்கம், திரிசூலம் என்பன சிவவழிபாடு முக்கியத்துவம் பெற்றிருந்ததை உறுதிசெய்கின்றன. நந்தி, ஆவுடையுடன் கூடிய சிவலிங்கம் முதலான சுடுமண் சிற்பங்கள் கட்டுக்கரை பெருங்கற்காலப் பண்பாட்டில் முதல் முறையாக கண்டுபிடிக்கப்பட்டிருப்பது சிறப்பாக நோக்கத்தக்கது. தமிழக ஆதிச்சநல்லூர் பெருங்கற்காலப் பண்பாட்டில் கண்டுபிடிக்கப்பட்ட முருக வழிபாட்டிற்குரிய வேலும், சேவல் சின்னமும் இரும்பால் செய்யப்பட்டிருந்தன. ஆனால் கட்டுக்கரையில் அவ்வழிபாட்டை அடையாளப்படுத்தும் மயில் சின்னங்களும், அதன் இறகுகளும், வேல் சின்னங்களும் சுடுமண் உருவங்களாகக் கிடைத்திருப்பது அவ்வழிபாட்டின் தொன்மைக்குச்சான்றாகும். இங்கு மிகச் சிறிய கலசங்கள் பெருங்கற்கால மட்பாண்டங்களுடன் கண்டுபிடிக்கப்பட்டன. இக்கலசங்களின் வாய்ப்பகுதிலிருந்து தெய்வ உருவத்தின் முகம் வெளிவருவது போன்ற தோற்றப்பாடு காணப்படுகின்றது. வரலாற்றுக் கதைகளில் அகத்தியரை குடமுனி என அழைக்கும் மரபு காணப்படுகின்றது. அவ்வழிபாடு இராமேஸ்வரத்தில் இருந்து இலங்கைக்குப் பரவியதான மரபும் காணப்படுகின்றது. இதனால் கட்டுக்கரையில் கண்டு பிடிக்கப்பட்ட சிறிய கலசங்கள் அகத்தியர் வழிபாடு இருந்ததை நினைவுபடுத்துவதாக உள்ளன.

### கட்டுக்கரையின் அயல்நாட்டுத் தொடர்புகளும் நகரமயமாக்கமும்

பண்டைய காலத்தில் தரை, நீர்வழிப்பாதைகள், கடல்சார்வழித் தொடர்புகளுக்குசாதகமான இயற்கைத் துறைமுகங்கள், வணிகமையங்கள் என்பன வர்த்தக நோக்கத்திற்காக பல நாட்டவர்களும், பல இன மக்களும் ஒன்று கூடுவதற்கு வழிவகுத்துக் கொடுத்தன. அவ்வாறான இடங்களிலிலேயே நெருக்கமான குடியிருப்புகள் தோன்றி அவ்விடங்கள் காலப்போக்கில் புராதன நகரங்களாக எழுச்சி பெற்றன. இப்பின்னணியிலேயே இற்றைக்கு 2300 ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கையில் அநுராதபுரம், மகாகமை, மாதோட்டம், கந்தரோடை முதலான இடங்கள் முக்கிய வணிக நகரங்களாகத் தோற்றம் பெற்றன. கட்டுக்கரையைப் பொறுத்தவரை இங்கு கண்டுபிடிக்கப்பட்ட தொழில்நுட்பம் வாய்ந்த மட்பாண்டங்கள், விலையுயர்ந்த கற்கள், கல்மணிகள் என்பன தமிழகத்திலிருந்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் என்பதை உறுதிப்படுத்துகின்றன. இவ்வாதாரங்கள் பெருங்கற்காலப்பண்பாடு நிலவிய காலத்திலேயே கட்டுக்கரைக்கும் தமிழகத்திற்கும் இடையே நெருக்கமான வர்த்தக, கலாசாரத் தொடர்புகள் இருந்ததை உறுதிசெய்கின்றன. இவ்வர்த்தகத் தொடர்பு தமிழகத்துடன் மட்டுமன்றி இந்தியாவின் பல வட்டாரங்களுடனும் இருந்துள்ளது. கி.மு.5ஆம், 4ஆம் நூற்றாண்டுகளில் வடஇந்தியாவில் மகத அரசால் வெளியிடப்பட்ட அச்சுக் குத்தப்பட்ட வெள்ளி நாணயங்களே (Punch-marks coins) தென்னாசியாவில் வெளியிடப்பட்ட முதலாவது வகை நாணயமாகும். இவ்வகை நாணயம் கட்டுக்கரைக் குளப்பரப்பில் இருந்தும் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. அச்சுக் குத்தப்பட்ட நாணயங்களைத் தொடர்ந்து கி.மு 3ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி.13 ஆம் நூற்றாண்டுவரை தமிழகத்திலும், இலங்கையிலும் வெளியிடப்பட்ட சிலவகை நாணயங்களும் கட்டுக்கரையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவ்வாதாரங்களுடன் கி.பி.4ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த அராபிய நாட்டு மட்பாண்டங்களும், 10ஆம், 11ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சீனநாட்டுப் பீங்கான் பொருட்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவ்வாதாரங்கள் ஆதிகால, இடைக்கால வரலாற்றில் கட்டுக்கரை பிறநாடுகளுடன் வணிக, கலாசாரத் தொடர்புகளைக் கொண்டிருந்ததை எடுத்துக்காட்டுகின்றன. இவ்வாதாரங்களின் அடிப்படையில் அநுராதபுரத்திற்குச் சமாந்தரமான காலத்தில் கட்டுக்கரையிலும் நகரமயமாக்கம் ஏற்பட்டதெனக் கூறமுடியும் இங்கு நடைபெற்ற தொல்லியல் ஆய்வுகளையும், கண்டுபிடிப்புக்களையும் நேரில் பார்வையிட்ட மத்திய கலாசார நிதிய யாழ்ப்பாணச் செயல்திட்ட முகாமையாளர் லட்சுமன் சந்தன மைத்திரிபாலா, யாழ்ப்பாணப் பிராந்திய தொல்லியல் பணிப்பாளர் பாலித்த விக்கிரமசிங்கே மற்றும் தென்னிலங்கைத் தொல்லியல் அறிஞர்கள் தற்போது காடாகக் காட்சிதரும் கட்டுக்கரைப் பிரதேசம் பண்டைய காலத்தில் மாதோட்டத்திற்கும் அநுராதபுரத்திற்கும் இடைப்பட்ட போக்குவரத்தில் ஒருநகரமாக எழுச்சிபெற்றதை இங்கு கண்டுபிடிக்கப்பட்ட சான்றுகள் உறுதிசெய்வதாகக் கூறியுள்ளனர்.

### கட்டுக்கரையின் பண்டைய கைத்தொழிற் சாலைகள்

கட்டுக்கரையின் பண்பாட்டுத் தொன்மையையும், தொழில்நுட்பச் சிறப்பையும் அடையாளப்படுத்திக் காட்டுவதில் அங்கு வாழ்ந்த பெருங்கற்கால மக்களின் சிறு கைத்தொழிற்சாலைகளுக்கு முக்கிய இடமுண்டு. தென்தமிழகத்திலும், இலங்கையிலும் இரும்பின் பயன்பாட்டை முதலில் அறிமுகப்படுத்தியவர்கள் பெருங்கற்காலப் பண்பாட்டு மக்களாவர். இதன் விளைவால் இதுவரை காலமும் கல்லாயுதங்களைப் பயன்படுத்திவந்த மக்கள் இரும்புக் கருவிகளைப் பயன்படுத்தத் தொடங்கினர். இந்தமாற்றம் பெருங்கற்கால மக்களின் பொருளாதாரத் திலும், பண்பாட்டிலும் புரட்சிகர மாற்றங்களேற்பட வழிவகுத்தன. இங்கு இரும்புத்தாதின் படிமங்களை அகழ்வாய்வு செய்யப்பட்ட குழிகளிலும், பிறதேவை களுக்கு மண்ணகழப்பட்ட ஆழமான குழிகளிலும் பரவலாகக் காணமுடிந்தது. பெருங்கற்கால கலாசார மண் அடுக்குகளில் அப்பண்பாட்டு மக்கள் இரும்பை உருக்கிக் கருவிகளைச் செய்ததற்கான சான்றுகள் (Iron Slacks) அதிக அளவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இதை மேலும் உறுதிப்படுத்துவதாக இரும்புத்தாதை உருக்குவதற்கு பயன்படுத்திவந்த சிறிய இரும்புச் சூளைகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருங்கற்கால பண்பாட்டுடன் தோன்றிய நிரந்தர பொருளாதாரக் கட்டமைப்பால் ஏற்பட்ட மிகை உற்பத்தி மக்களுக்கு ஓய்வுகாலத்தை வழங்கியது. இதன் விளைவால் ஆன்மீகம், கலைகள், அழகுசாதனப் பொருட்கள் போன்ற துறைகளில் நாட்டம் காட்டினர். அவற்றுள் பெண்களின் அலங்காரப் பொருட்களாக கற்கள், சங்குகள், சிற்பிகள், மிருக எலும்புகள், மீன்களின் முள்ளந்தண்டு எலும்புகள் என்பவற்றைப் பயன்படுத்திக் கழுத்துமாலைகள், காற்சலங்கைகள், கைவளையல் என்பவற்றை உற்பத்தி செய்தனர். கட்டுக்கரைத் தொல்லியல் ஆய்வில் பல அளவுகளில், பல வடிவங்களில் பயன்படுத்தப்பட்ட கல்மணிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவை கார்லினிலேயன், அகட் முதலான கற்களில் செய்யப்பட்டவை. இக்கல்மணிகள் பெருங்கற்காலப் பண்பாட்டில் காணப்பட்ட பிரதான அம்சங்களில் ஒன்றாகும். தமிழகத்தில் இக்கல்மணிகளை ஆக்குவதற்கான விலையுயர்ந்த கற்கள் வடஇந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு தமிழகப் பெருங்கற்கால மையங்களில் வைத்து கல்மணிகள் உற்பத்தி செய்யப்பட்டதற்கு கொடுமணல், காரைக்காடு முதலான தொல்லியல் மையங்களில் சான்றாதாரங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அம்மையங்களில் இருந்தே இலங்கைக்கான கல்மணிகள் கொண்டு வரப்பட்டதாகவும் கூறப்படுகின்றது. ஆனால் பேராசிரியர் ஒஸ்மோன் பொப்பே ஆராய்ச்சி இலங்கைப் பெருங்கற்கால மையங்களிலும் கல்மணிகளை உற்பத்தி செய்யும் தொழிற்கூடங்கள் இருந்ததாகக் கூறுகின்றார். அவரின் கூற்று பொருத்தமானது என்பதற்கு கட்டுக்கரை அகழ்வாய்வில் சில சான்றுகள் கிடைத்துள்ளன. இங்கு பலவகை கல்மணிகளுடன், கல் மணிகளை உற்பத்தி செய்யப் பயன்படுத்திய விலையுயர்ந்த கற்களும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. அக்கற்களில் பல அளவுகளில் கல்மணிகள் வெட்டியெடுக்கப் பட்டதற்கான அடையாளங்களும் காணப்படுகின்றன. இவை கட்டுக்கரை மக்களிடையே கல்மணிகளை உற்பத்தி செய்யும் தொழிற் கூடங்கள் இருந்ததற்குச் சான்றாகும்.

பூர்வீக மக்கள் வாழ்ந்த இடங்களை அடையாளம் காண்பதற்கு மட்பாண்டங்கள் முக்கிய சான்றுகளாகக் காணப்படுகின்றன. பண்டைய காலங்களில் அனைத்து தேவைகளுக்கும் மட்பாண்டங்களே பயன்படுத்தப்பட்டன. இவை இலகுவாக அழிவடைந்து போவதால் அவற்றைத் தொடர்ந்து உற்பத்தி செய்ய வேண்டியிருந்தது. இதனால் பண்டைய குடியிருப்புகள் இருந்த இடங்களில் இவையே அதிக அளவில் காணப்படுகின்றன. கட்டுக்கரையில் பல அளவுகளில், பல வடிவங்களில், பல்வேறு தேவைகளுக்காகப் பயன்படுத்தப்பட்ட மட்பாண்டங்கள் முழுவடிவிலும், உடைந்த நிலையிலும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவற்றின் தொழில்நுட்பம், வடிவமைப்பு, அலங்காரங்கள், அவற்றின் வர்ணங்கள், குறியீடுகள் என்பவற்றின் அடிப்படையில் அவற்றின் காலங்களைக் கணிப்பிட முடிகின்றன. கட்டுக்கரையில் கண்டுபிடிக்கப்பட்ட பெருங்கற்காலத் தாழிகள், வட்டில்கள், மண்தட்டுக்கள், மண்பானைகள், குவளைகள், உடைந்த மட்பாண்ட விளிம்புகள் என்பவற்றின் வடிவமைப்பு, தொழில்நுட்பம், வர்ணம், அலங்காரம் என்பனபெருமளவு ஒரே தொழில்நுட்பம் வாய்ந்தவையாகக் காணப்படுகின்றன. இதற்கு அவை சக்கரங்கள் கொண்டு உற்பத்தி செய்யப்பட்டதே காரணமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்பத்திசெய்யப்பட்ட மட்பாண்டங்களை செம்மைப்படுத்தவும், அவற்றின் மீது அலங்காரங்களைப் பொறிக்கவும், வர்ணங்கள் தீட்டவும் பயன்படுத்தப்பட்ட தனித்துவமான கற்கருவிகள் பல கட்டுக்கரையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவ்வாதாரங்கள் கட்டுக்கரைப் பெருங்கற்காலப் பண்பாட்டு மக்களிடையே மட்பாண்டங்களை உற்பத்திசெய்யும் சிறுதொழிற்சாலைகள் இருந்தமைக்குச் சான்றாகும். மேலும் பெருங்கற்கால ஈமச்சின்னங்களில் கண்டுபிடிக்கப்பட்ட இயற்கையான சங்குகளுடன் சங்கை வெட்டியெடுத்து செயற்கையாகச் செய்யப்பட்ட சில பொருட்களும் கிடைத்துள்ளன. இவை சங்குத் தொழிற்சாலைகள் இருந்திருக்கலாம் என்பதைக் காட்டுகின்றன.

**கட்டுக்கரைக்கு புலம்பெயர்ந்துவந்த பூர்வீக மக்கள்**

கட்டுக்கரைத் தொல்லியல் ஆய்விலிருந்து இங்கு வாழ்ந்த பூர்வீக மக்கள் நுண்கற்கால, பெருங்கற்காலப் பண்பாட்டுக்குரியவர்கள் என்பது உறுதியாகின்றது. தொல்லியல் அறிஞர்கள் இலங்கையிலும், தென்னிந்தியாவிலும் வாழ்ந்த நுண்கற்கால மக்கள் ஒரே இனவர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் என அடையாளப் படுத்தியுள்ளனர். தொல்லியலாளர் அல்ஜின் இலங்கையில் பயன்படுத்தப்பட்ட இருபக்க அலகுடைய நுண்கற்காலக் கல்லாயுதங்கள் தமிழகத்தில் உள்ள தேரிக் கலாசாரத்துடன் ஒரே பிராந்தியம் எனக் கருதும் அளவிற்கு ஒற்றுமை கொண்டுள்ளதாகக் குறிப்பிடுகின்றார் (Sitrampalaஅ, 1990:34). மொழியியலாளர்கள் இலங்கையில் நுண்கற்கால மக்கள் பேசிய ஆதிஒஸ்ரிக் மொழி தென்னிந்தியாவில் நுண்கற்கால மக்கள் பேசிய ஆதி ஒஸ்ரிக் மொழியோடு கொண்டுள்ள ஒற்றுமையைச் சுட்டிக் காட்டுகின்றனர். மேலும் தற்காலத்தில் இலங்கையில் பேச்சுவழக்கில் உள்ள 200க்கும் மேற்பட்ட சொற்கள் நுண்கற்காலப் பண்பாட்டு மக்கள் பேசிய ஆதிஒஸ்ரிக் மொழிச் சொற்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளன. இவ்வொற்றுமைகளின் அடிப்படையில் இலங்கையில் வாழ்ந்த நுண்கற்கால மக்கள் தென்னிந்தியா அதிலும் குறிப்பாகத் தமிழகத்தில் உள்ள தேரிமணற்குன்றுப் பகுதியிலிருந்து புலம்பெயர்ந்து வந்தவர்கள் எனக் கூறப்படுகின்றது. பேராசிரியர் இந்திரபாலா வடஇலங்கை அதிலும் குறிப்பாக யாழ்ப்பாணக் குடாநாடு தமிழகத்தின் தொடக்க வாயிலாக இருப்பதால் தமிழகத்தில் இருந்து புலம்பெயர்ந்து வந்த இம்மக்கள் முதலில் யாழ்ப்பாணத் தீபகற்பத்திலேயே குடியேறியிருக்க வேண்டும் எனக் கூறுகிறார். இக்குடியேற்றம் கட்டுக் கரையிலும் ஏற்பட்டதை அங்கு கண்டுபிடிக்கப்பட்ட சான்றுகள் உறுதி செய்கின்றன.

நுண்கற்காலப் பண்பாட்டைத் தொடர்ந்து புலம்பெயர்ந்த பெருங்கற்கால மக்களையும், அவர்களின் பண்பாட்டையும் அறிஞர்கள் பலரும் இலங்கை நாகரிகத்தின் ஆக்ககாலமாகவே எடுத்துக் கொள்கின்றனர். இப்பண்பாடு எங்கே தோன்றியது? எப்போது தோன்றியது? தோற்றுவித்த மக்கள் யார்? என்பது தொடர்பாக அறிஞர்களின் மத்தியில் வாதப்பிரதி வாதங்கள் உள்ளன. ஆயினும் திராவிட மொழி பேசும் மாநிலங்களான கர்நாடகம், ஆந்திரம், கேரளம், தமிழ்நாடு ஆகிய மாநிலப் பெருங்கற்காலப் பண்பாட்டில் காணப்படும் தனித்துவமான அம்சங்கள் ஒரே பிராந்தியத்திற்குரிய பண்பாடாக தோற்றமளிக்கின்றன. இப்பண்பாட்டு வட்டத்திற்குஉள்ளேயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைப் பெருங்கற்காலப் பண்பாடும் உள்ளடக்கப்படுவதால் இப்பண்பாட்டைத் தென்னிந்தியாவில் இருந்து புலம்பெயர்ந்த திராவிட மக்களே அறிமுகப்படுத்தினர் என்பது அறிஞர்கள் பலரின் கருத்தாகும். பேராசிரியர் இந்திரபாலா நுண்கற்காலப் பண்பாட்டு மக்களைப் போல் பெருங்கற்கால மக்களும் தென் தமிழகத்தில் இருந்தே வடஇலங்கை ஊடாக இலங்கைக்குப் புலம்பெயர்ந்தனர் எனக் கூறுகின்றார். இதற்கு கட்டுக்கரையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள பெருங்கற்காலக் குடியிருப்புக்கள் மேலும் சான்றாகும்.

**பெருங்கற்காலப் பண்பாடும் நாக இனக்குழுவும்**

கலாநிதி சிரான் தெரணியாகல போன்ற அறிஞர்கள் இலங்கைக்கு பெருங்கற்காலப் பண்பாட்டை அறிமுகப்படுத்தியவர்கள் நாக இன மக்கள் என அடையாளப்படுத்திக் கூறுகின்றனர் (Deraniyagala, 1992:735). பேராசிரியர் இந்திரபாலா இம்மக்கள் தென்தமிழகத்திருந்தே இலங்கைக்குப் புலம்பெயர்ந்ததாகக் கூறுகின்றார் (இந்திரபாலா 2006). தென்னாசியாவில் பண்டுதொட்டுப் பயன்படுத்தப்பட்ட பெயர்களில் ஒன்றாக 'நாக' என்ற பெயர் காணப்படுகின்றது. இதற்கு மத வழிபாட்டில் நாகத்தை குலமரபுத் தெய்வமாகக் கொண்டிருந்த மக்கள் வாழ்ந்து வந்ததே காரணம் எனக் கூறப்படுகின்றது. வடஇந்தியாவில் அரசமைத்த குப்தரும், தக்கணத்தில் ஆட்சி புரிந்த சாதவாகனரும் தம்மை நாக குலத்தவர் என அழைத்துக் கொண்டனர். தமிழகத்தின் பண்டைய தலைநகரான நாகபட்டினம் நாகரின் தலைநகர் என்ற கருத்துண்டு. சங்ககாலத்தில் இப்பெயர்கள்குறுநிலத் தலைவர்களுடனும், புலவர்களுடனும், நாடு, நகர், ஊர் ஆகிய இடப்பெயர்களுடனும் இணைந்து வருகின்றன. சமகால இலங்கைப் பாளி நூல்களிலும், பிராமிக் கல்வெட்டுகளிலும் இப்பெயர்கள் அரசர்களுடனும், சிற்றரசர்களுடனும், நகரங்களுடனும், தனிநபர்களுடனும் இணைந்து வருகின்றன. கட்டுக்கரைப் பெருங்கற்கால குடியிருப்பு மற்றும் ஈமச்சின்ன மையங்களில் நடாத்தப்பட்ட தொல்லியல் அகழ்வாய்வின் போது கண்டுபிடிக்கப்பட்ட நாக வழிபாட்டுச் சின்னங்கள் பெருங்கற்காலப் பண்பாட்டை இலங்கைக்கு அறிமுகப்படுத்திவயர்கள் நாக இன மக்கள் என்பதை உறுதிப்படுத்துவதில் அதிக முக்கியத்துவம் பெறுகின்றன. இவ்வகையான சான்றாதாரங்கள் இலங்கையின்வேறு எந்தப் பெருங்கற்கால மையங்களிலும் இதுரை கண்டுபிடிக்கப் பட்டதாகத் தெரியவில்லை. இந்த அகழ்வாய்வின் போது முதலாவது ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட ஆய்வுக்குழியில் இருந்து இப்பிரதேசத்திற்கு அந்நியமான வெண்மையான கற்கள் கண்டுபிடிக்கப்பட்டன. அக்கற்களில் சில வடிவங்கள் செயற்கையாகச் செதுக்கப்பட்டிருந்தன. அக்கற்களை ஆய்வுசெய்த தமிழக ஆய்வாளர்கள் அவற்றில் செதுக்கப்பட்டுள்ள உருவம் நாக பாம்பைப் பிரதிபலிப்பதாகக் கூறுகின்றனர். மேலும் முதலாம், இரண்டாம் ஆய்வுக்குழிகளில் இருந்து பல்வேறு அளவுகளில், பல வடிவங்களில் சுடுமண் நாகச் சிற்பங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் பெரிய அளவிலான நாகச் சிற்பங்கள் சில சாதாரணமாகப் படுத்த நிலையில் வடிவமைக்கப்பட்டுள்ளன. ஏனைய நாகச் சிற்பங்கள் வாயைப் பிளந்து படமெடுப்பது போன்ற தோற்றத்தில் செதுக்கப்பட்டிருந்தன. ஐந்து தலைகொண்ட சிறிய நாகச் சிற்பங்கள் படமெடுத்து ஆடுவது போன்ற தோற்றத்தில் காணப்படுகின்றன. இவை மண் சட்டியில் வைத்து வழிபடப்பட்டவையாக இருக்கலாம். சில சிறிய நாகச் சிற்பங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பீடத்துடன் காணப்படுகின்றன. இச்சிற்பங்களின் கீழ்ப்பகுதில் காணப்படும் அரைவட்ட வளைவு இச்சிற்பங்கள் பிற தெய்வங்களுடன் இணைந்திருந்ததைக் காட்டுகின்றன. இந்த அம்சம் பிற்கால நாக வழிபாட்டு மரபை நினைவுபடுத்துவதாக உள்ளது.

பெருங்கற்காலப் பண்பாட்டிற்கும் நாக இன மக்களுக்கும் இடையிலான தொடர்பை மேலும் அடையாளப்படுத்துவதில் 2016 - 2017 காலப்பகுதியில் நாகபடுவான் என்ற இடத்தில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வுகள் மேலும் முக்கியத்துவம் பெறுகின்றன. இவ்விடம் கட்டுக்கரைக்கு வடக்கே ஏறத்தாழ 50 கிலோ மீற்றர் தொலைவில் பூநகரிப்பிராந்தியத்தின் காட்டுப் பகுதியிலுள்ள சிறிய கிராமமாகும். இங்கே நாகபடுவான் என்ற இடப்பெயரே நாக மக்களோடு தொடர்புடையதாகக் காணப்படுகின்றது. இப்பெயர் நாகர்களின் குளம் என்ற பொருளிலேயே பயன்படுத்தப்பட்டுள்ளது. படுவம், படுவான் என்பது பழமையான தமிழ்ச்சொல். இது சங்க இலக்கியத்தில் ஆழமான குளம், பெரிய குளம் என்ற பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதனால் நாகர்களின் குளம் என்ற பொருளைக் கொண்ட இடப்பெயரே இன்றும் மாற்றம் அடையாது நாகபடுவான் என்ற பண்டைய தமிழ்ச் சொல்லில் அழைக்கப்பட்டு வருகின்றது. கலாநிதி இரகுபதி நாகபடுவான் என்ற இடப்பெயர் ஆதியில் இங்கு நாகத்தைக் குலமரபாகக் கொண்ட மக்கள் வாழ்ந்ததன் காரணமாகத் தோன்றியது எனக் கூறுகிறார்.

நாகபடுவானில் 4x3 மீற்றர் நீள அகலத்தில் ஆறு ஆய்வுக்குழிகள் ஏற்படுத்தப்பட்டு அவற்றின் இயற்கை மண் அடையாளம் காணும்வரை அகழ்வு செய்யப்பட்டது. இங்கு வாழ்ந்த தொடக்ககால மக்கள் பெருங்கற்காலப் பண்பாட்டிற்குரியவர்கள் என்பதை 4ஆம் 5ஆம் ஆய்வுக்குழிகளில் கண்டுபிடிக்கப்பட்ட பெருங்கற்கால ஈமத் தாழிகளின் எச்சங்கள் உறுதிசெய்கின்றன. அவற்றுள் 2ஆம், 3ஆம் ஆய்வுக்குழிகளில் கண்டுபிடிக்கப்பட்ட சான்றாதாரங்களில் 90 வீதமானவை நாக வழிபாட்டுடன் தொடர்புடையவையாகக் காணப்பட்டன. அக்குழிகளில் இருந்து களிமண், குருமணல், உமி அல்லது வைக்கோல் என்பன கலந்து செய்யப்பட்டு பின்னர் நெருப்பினால் சுடப்பட்ட பலவகையான நாகவழிபாட்டுச் சின்னங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் ஆண் பெண் சிலைகள், அவற்றின் பீடங்கள், நாகக் கற்கள், பல அளவுகளில் வடிவமைக்கப்பட்ட நாகச் சிற்பங்கள் என்பன அதிக எண்ணிக்கையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் ஆண், பெண் சிலைகள் நாக, நாகினி தெய்வங்களின் சிலைகளாகக் கருதப்படுகின்றன.

இங்கு கண்டுபிடிக்கப்பட்ட இரண்டு சான்றாதாரங்கள் பெருங்கற்காலப் பண்பாட்டிற்கும் நாக மக்களுக்கும் இடையிலான தொடர்பை ஆராய்வதில் அதிமுக்கியத்துவம் வாய்ந்ததாகக் காணப்படுகின்றன. அவற்றுள் மூன்றாவது ஆய்வுக்குழி அகழ்வாய்வின் போது கண்டுபிக்கப்பட்ட மண் சட்டிகளின் விளிப்புப் பகுதியில் நான்கு திசைகளை நோக்கியவாறு நாகபாம்புகள் படமெடுத்த நிலையில் இருக்க, அவற்றின் வால் பகுதிகள் சட்டிக்குள் இணைந்து சட்டியின் நடுமையத்தில் ஒரு வளையமாகக் காணப்படுகின்றது. இம்மரபு தற்கால நாக வழிபாட்டில் செப்புத்தட்டத்தில் அல்லது மண்பாத்திரத்தில் நாகபாம்புகளை வைத்து வழிபடுதல் அல்லது நாகதோசம் நீங்குவதற்காக அதனை ஆலயங்களுக்கு கொடுக்கும் மரபை நினைவுபடுத்துவதாக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளது. இவற்றில் இருந்து நாகதோசம் நீங்குவதற்கு நாகபாம்பை மண் சட்டியில் வைத்து வழிபடுதல் அல்லது ஆலயங்களுக்கு கொடுக்கும் மரபு இலங்கையில் பெருங்கற்காலப் பணபாட்டிலிருந்து தோன்றியதெனக் கூறலாம்.

இவ்வாய்வுக்குழியின் இன்னொரு இடத்தில் கவிழ்க்கப்பட்ட நிலையில் பெரிய பானையும், பானையின் மேற்பகுதியின் மையத்தில் நீண்ட வாய்ப்பகுதியும், அதைச் சுற்றி மூடிய நிலையில் நான்கு சிறு கலசங்களும் காணப்படுகின்றன. பானையின் மூன்று திசைகளிலும் தெய்வங்கள் அமர்ந்திருக்கும் பீடங்கள் காணப்படுகின்றன. அவற்றில் அமர்ந்துள்ள தெய்வத்தின் இடது கால் பானையை முட்டியவாறு உள்ளது. நான்காவது திசையில் சட்டியின் விளிம்பில் படமெடுத்த நாக பாம்பு காணப்படுகிறது. இவை நாக வழிபாட்டின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுகின்றன. இப்பானையில் செய்யப்பட்ட துவாரமும், அதைச் சுற்றிக் கவிழ்ந்த நிலையில் வைக்கப்பட்டிருக்கும் சிறிய கலசங்களும் மேலும் முக்கியத்துவம் வாய்ந்ததாக் காணப்படுகின்றன. இதனால் இப்பானைக்குள் இருக்கக் கூடிய சின்னங்களை கண்டறியும் நோக்கில் தமிழகத் தொல்லியல் அறிஞர் வை.சுப்பராயலு அவர்களின் ஆலோசனையுடன் ஆராய்ந்த போது அதற்குள் அழகான நாகபாம்புச் சிலையைக் கண்டுபிடிக்க முடிந்தது. இதிலிருந்து நிலத்தில் நாட்டப்பட்ட நாகபாம்புச் சிலையை அரைவட்ட வடிவில் செய்யப்பட்ட பானையால் மூடி அதை அக்கால மக்கள் வழிபட்டனர் என்பது தெரியவந்துள்ளது. இம்மரபே பிற்காலத்தில் பாம்புப் புற்று வழிபாடு தோன்றக் காரணமாக இருந்துள்ளது. இவ்வழிபாடு பற்றிப் பழந்தமிழ் இலக்கியங்களிலும் பல ஆதாரங்கள் காணப்படுகின்றன. இதன் முக்கியத்துவம் தொடர்பாக கலாநிதி பொ.இரகுபதி கூறும்போது "பானையின் விளிம்பைச் சுற்றி கவிழ்ந்த வடிவில் உள்ள சிறிய கலசங்களை பாம்புப் புற்றில் வரும் சிறிய துவாரங்களாகவும், பானையின் வாய்ப்பகுதி பாம்புப் புற்றிலிருந்து பாம்பு வெளியேறும் வழியாகவும் உள்ளன. பிற்காலத்தில் பாம்புப் புற்றை நாக தெய்வத்தின் ஆலயமாகக் கொண்டு படையல் செய்து வழிபடும் மரபு தோன்றுவதற்கு முன்னோடியாக இருந்த பூர்வீக வழிபாட்டு மரபையே நாகபடுவானில் கண்டுபிடிக்கப்பட்ட வழிபாட்டு மையம் உறுதிப்படுத்துவதாகக் கொள்ள முடிகின்றது" எனக் குறிப்பிடுகின்றார்.

ஆகவே இலங்கைக்கான பெருங்கற்காலப் பண்பாட்டை அறிமுகப்படுத்தியவர்கள் நாக இனக்குழு என அறிஞர்கள் கூறிய கருத்துக்களும்,ஊகங்களும் நம்பத்தகுந்த தொல்லியல் ஆதாரங்கள் கொண்டு உறுதிப்படுத்துவதில் கட்டுக்கரை மற்றும் நாகபடுவான் தொல்லியல் ஆய்வுகள் வரலாற்றில் அதிக முக்கியத்துவம் பெறுகின்றன எனலாம்.

### நாகரும் தமிழரும்

பௌத்த மதம் அரச மதமாக ஏற்றுக் கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து இலங்கை வரலாற்றை வாய்மொழிக் கதைகளாகப் பேணும் மரபும் தோற்றம் பெற்றது. இக்கதைகளை அடிப்படையாகக் கொண்டே பாளி வரலாற்று இலக்கியங்கள் தோற்றம் பெற்றன. இவ்விலக்கியங்கள் பௌத்த மதத்தை, பின்பற்றிய மக்களை, அம்மதத்திற்கு தொண்டாற்றிய மன்னர்கள் ஆகியோரின் வரலாற்றை முதன்மைப் படுத்தி எழுந்ததினால் அவ்விலக்கியங் களில் தமிழர், வரலாற்றையோ, பண்பாட்டையோ அறிவதற்கு அவை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரிதும் உதவவில்லை. இலங்கை சுதந்திரமடைந்ததைத் தொடர்ந்து எழுந்த வரலாற்று ஆய்வுகளில் விஜயன் வருகையைத் தொடர்ந்து இலங்கையில் ஏற்பட்ட மக்கள் குடியேற்றம், பௌத்த மதம், எழுத்து, மொழி, கலை, பண்பாடு என்பவற்றைச் சிங்கள மக்களின் வரலாறாகவே பார்க்கப்பட்டன. அவற்றில் விஜயன் வருகைக்கு முன்னர் வாழ்ந்த யக்ஷ, நாக மக்கள் பற்றியோ, இலங்கை நாகரிகத்திற்கு வித்திட்ட பெருங்கற்காலப் பண்பாடு பற்றியோ அல்லது பிற்கால வரலாற்றுடன் அம்மக்களுக்குள்ள தொடர்புகள் பற்றியோ ஆராய்ந்து பார்ப்பதில் அக்கறை காட்டப்படவில்லை. அவ்வாறு ஆராய்ந்துரைக்கப்பட்டிருந்தால் இலங்கைத் தமிழரின் பூர்வீக வரலாறும், பண்பாடும் யக்ஷ, நாக மக்களுடன் சிறப்பாக பெருங்கற்காலப் பண்பாட்டை இலங்கைக்கு அறிமுகப்படுத்திய நாக இன மக்களுடன் தொடங்கியது என்ற உண்மை துலக்கம் பெற்றிருக்கும். அவற்றைப் பின்வரும் சான்றாதாரங்களின் அடிப்படையில் எடுத்துக்காட்டலாம்.

பேராசிரியர் இந்திரபாலா தென்னிந்தியாவிலிருந்து பெருங்கற்காலப் பண்பாட்டை அறிமுகப்படுத்திய நாக இனக்குழுக்கள் அநுராதபுரத்திலும், தென்னிலங்கையின் ஏனைய பிராந்தியங்களிலும் பிராகிருத மொழி தழுவிய பேரினக் குழுவாக உருவாகிய போது, ஏனையோர் வடக்கில் தமிழ் இனக்குழுவுடன் கலந்து கொண்டனர் எனக் குறிப்பிடுகிறார் (Indrapala 2005:172-73). இக்கூற்று மேலும் விரிவாக ஆராய்ந்து பார்க்கப்படவேண்டும். பேராசிரியர் கே.எம்.டி. சில்வா கி.பி. 7ஆம் நூற்றாண்டு அளவில் ஏற்பட்ட பக்தி இயக்கத்தின் செல்வாக்கால் இலங்கையில் இந்து-பௌத்தம் என்ற சமய வேறுபாடுகள் ஏற்பட்டு அது தமிழ் சிங்கள இன முரண்பாட்டுக்கு வழிவகுத்த போது இரு இனமக்களும் தமது தனித்துவத்தைப் பேணுவதில் அக்கறை கொண்டனர் எனக் கூறுகின்றார். இந்நிலையில் இனம், மொழி, மதம், பண்பாடு என்பவற்றால் தமிழகத்துடன் ஒன்றுபட்ட இலங்கைத் தமிழர்கள் தமிழகத்திற்கு அண்மையிலுள்ள வடக்கு-கிழக்கு மாகாணங்களை தமக்குப் பாதுகாப்பான பிராந்தியம் எனக் கருதினர். ஆயினும் இப்பக்தியியக்கத்திற்கு முன்னர் இங்கு வாழ்ந்த நாக இனக்குழுக்களின் ஒரு பிரிவினர் பௌத்த மதத்தையும், அம்மத மொழியான பிராகிருதத்தையும ஏற்றுக் கொள்வதற்கு முன்பாகவே அவ்வினக் குழுக்கள் வடக்கில் மட்டுமல்ல கிழக்கிலும், தென்னிலங்கையின் பல வட்டாரங்களிலும் தமிழ் மொழி பேசும் நாகர்களாகவே வாழ்ந்துள்ளனர் என்பதற்கு ஆதாரங்கள் காணப்படுகின்றன. இதனால் இலங்கையில் தமிழ் மொழியின் தோற்றகாலம் பெருங்கற்காலப் பண்பாட்டின் முதிர்ச்சி நிலையில் உருவானதெனக் கூறலாம்.

தென்னாசியாவில் தோன்றிய முதலாவது எழுத்து வடிவம் பிராமி என அழைக்கப்படுகின்றது. வடஇந்தியாவில் அசோக மன்னனது ஆட்சிக்காலத்தில் இருந்து கல்வெட்டுக்களை எழுதுவதற்கு பிராமி எழுத்துப் பயன்படுத்தப்பட்டதால் இதற்கு அசோக பிராமி அல்லது வடபிராமி எனப் பெயரிடப்பட்டுள்ளது. இவ்வெழுத்தே கி.மு. 3ஆம் நூற்றாண்டிலிருந்து பௌத்தமதம் பரவிய தென்னாசியா, தென்கிழக்காசிய நாடுகள் பலவற்றின் தொடக்ககால எழுத்தாக இருந்ததெனக் கூறப்படுகின்றது. ஆனால் இற்றைக்கு ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் சிங்கள எழுத்தின் தோற்றம், வளர்ச்சி பற்றி ஆராய்ந்த பெர்ணாந்தோ, சத்தமங்கல கருணாரத்ன, ஆரிய அபயசிங்கா போன்ற அறிஞர்கள் பௌத்த மதத்துடன் வடபிராமி எழுத்து இலங்கைக்கு அறிமுகமாவதற்கு முன்னர் இங்கு திராவிட (தமிழ்) எழுத்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறை பயன்பாட்டில் இருந்ததாகக் குறிப்பிட்டுள்ளனர். அண்மையில் அநுராதபுரத்திலும், தமிழகத்தில் ஆதிச்சநல்லூரிலும் கண்டுபிடிக்கப்பட்ட பெருங்கற்காலமட்பாண்ட பிராமிச் சாசனங்கள் பற்றிய நவீன காலக்கணிப்புகள் வடபிராமி எழுத்திற்கு 300 ஆண்டுகளுக்கு முற்பட்டதெனக் கணித்துள்ளன. இப்புதிய காலக்கணிப்பு களால் வட இந்தியாவிற்குரிய பிராமி எழுத்து தமிழகத்திலிருந்து அல்லது இலங்கையிலிருந்து சென்றிருக்க வேண்டும் என்ற வலுவான புதிய கருத்துக்களும் முன்வைக்கப்பட்டு வருகின்றன. இக்கருத்து மாற்றங்கள் இலங்கையின் தொடக்ககால எழுத்தையும், தமிழ் மொழியையும் இலங்கையில் வாழ்ந்த நாக இன மக்களுடன் தொடர்புபடுத்திப் பார்ப்பதற்கு வழிவகுத்துள்ளன.

தென்னாசியாவில் பௌத்த மதம் பரவிய எல்லா நாடுகளிலும் பிராகிருதமே கி.பி. 4ஆம் நூற்றாண்டுவரை கல்வெட்டு மொழியாக இருந்துள்ளது. ஆனால் தமிழகத்தில் பௌத்த மதம் பரவிய போதும் அதன் கல்வெட்டு மொழி தமிழாக இருந்ததுடன் தமிழ் மொழிக்கே சிறப்பான எழுத்து வடிவங்களையும் கொண்டிருந்தன. இதனால் இக்கல்வெட்டுக்கள் தமிழ்ப் பிராமிக் கல்வெட்டுக்கள் என அழைக்கப்படுகின்றது. அதேவேளை தமிழகத்திலும் இலங்கையிலும் பிராமி எழுத்துக்கள் கல்லில் எழுதப்படுவதற்கு முன்னரே அவ்வெழுத்துக்களை மட்பாண்டங்களில் எழுதும் மரபு இருந்துள்ளது.இம்மரபு இருநாடுகளுக்கும் உரிய தனிப்பண்பாகக் காணப்படுகின்றது. இது பெருங்கற்காலப் பண்பாட்டின் முதிர்ச்சி நிலையில் தோன்றிய மரபாகும். தமிழகத்தில் இதுவரை நூற்றுக்கு மேற்பட்ட பெருங்கற்கால மையங்களில் இருந்து பிராமி எழுத்துப் பொறித்த மட்பாண்டச் சாசனங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. அச்சாசனங்களில் மட்பாண்டத்தை செய்தவர்களின் அல்லது அவற்றைப் பயன்படுத்தியவரின் பெயர்களே பெரும்பாலும் காணப்படுகின்றன. இலங்கையில் கந்தரோடை, சாட்டி, பூநகரி, இரணைமடு, ஈழவூர், கட்டுக்கரை, அநுராதபும், அம்பாந்தோட்டை, அண்மையில் மட்டக்களப்பு ஆகிய இடங்களிலும் பிராமி எழுத்துப் பொறித்த மட்பாண்டச் சாசனங்கள் கண்டு பிடிக்கப் பட்டுள்ளன. இதனால் இலங்கைக்குப் பெருங்கற்காலப் பண்பாட்டை அறிமுகப்படுத்தியவர்கள் நாக இனக்குழு என்பதை ஏற்றுக் கொள்ளும் போது அப்பண்பாட்டு மட்பாண்டங்களில் பொறிக்கப்பட்ட தொடக்ககால எழுத்தையும், மொழியையும் அவ்வினக் குழுவுடன் தோன்றியதெனக் கூறுவதே பொருத்தமாகும். இதன் மூலம் பெருங்கற்காலப் பண்பாட்டின் முதிர்ச்சி நிலையில் எழுத்து வாசனையுடைய சமூகம் இலங்கையில் தோன்றி யிருந்ததையும் எடுத்துக்காட்டுகின்றன.

அண்மையில் மட்டக்களப்பில் நாகன், ணாகன், வண்ணக்கன், தம்பன் முதலான பெயர்கள் பொறித்த பிராமிச் சாசனங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் வண்ணக்கன் என்ற பெயர் மட்டக்களப்பு சமுதாயத்தில் செல்வாக்குப் பெற்றிருக்கும் வண்ணக்கருக்கு 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட வரலாறு உண்டு என்பதற்கு சான்றாகும். நாகன், ணாகன் என்ற பெயர் பொறித்த சாசனங்கள் பெருங்கற்காலப் பண்பாட்டை அறிமுகப்படுத்தியவர்கள் நாக இனக்குழு என்பதற்கும், அவ்வினம் மட்டக்களப்பில் பண்டுதொட்டு வாழ்ந்து வருகின்றனர் என்பதற்கும் சான்றுகளாகக் காணப்படுகின்றன. 1999 ஆம் ஆண்டு தென்னிலங்கையில் அக்குறுகொட என்ற இடத்தில் பிராமி எழுத்துப் பொறித்த பல


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாணயங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன (Bopearachchi 1999:51-60). அவை சிற்றரசர்களால் அல்லது குறுநிலத் தலைவர்களால் தமிழ் மற்றும் பிராகிருத மொழிகளில் வெளியிடப்பட்டவையாகும். அவற்றுள் இரு நாணயங்களில் நாக என்ற பெயர் பொறிக்கப்பட்டுள்ளது. ஒரு நாணயத்தில் தமிழில் 'திஷபுர சடநாகராசன்' என்ற வாசகம் பொறிக்கப் பட்டுள்ளது (Pushparatna அ 2002: 5-6). இதன் பொருள் திஷபுரத்தில் ஆட்சிபுரிந்த சடநாகராசனால் வெளியிடப்பட்ட நாணயம் என்ற கருத்தைத் தருகின்றது. இதிலிருந்து நாகச் சிற்றரசனின் ஆட்சி தென்னிலங்கையில் இருந்தமையும், அவன் ஆட்சிக்கு உட்பட்ட மக்கள் தமிழர்களாக இருந்துள்ளனர் என்பதும் உறுதிப்படுத்தப் படுகின்றது. இதற்கு மேலும் சான்றாக சமகால அரசியல் வரலாறு கூறும் மகாவம்சத்தில் துட்டகாமினி எல்லாளன் என்ற தமிழ் மன்னனை வெற்றி கொள்வதற்கு முன்னர் தென்னிலங்கையில் 32 தமிழ்ச் சிற்றரசர்களை வெற்றி கொள்ளவேண்டியிருந்ததாகக் கூறப்பட்டதையும் இங்கு சிறப்பாக கவனத்தில் கொள்ளத்தக்கது.

பௌத்த மதத்தின் அறிமுகத்தைத் தொடர்ந்து இலங்கையில் தோன்றிய புதிய பண்பாட்டில் பெருங்கற்காலப் பண்பாட்டு அம்சங்களும் இணைந்து கொண்டுள்ளன. அவற்றுள் தமிழ் மொழி, தமிழ்ப்பிராமி எழுத்து என்பன சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. பௌத்த மதத்துடன் அம்மத மொழியான பிராகிருதத்தை எழுதுவதற்கு தேவையான 40 வடபிராமி எழுத்துக்களும் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டன. ஆயினும் தொடக்ககாலப் பிராமிக் கல்வெட்டுக்களில் தமிழ்ப் பிராமி எழுத்துக்களுடன் தமிழ் மொழியில் அமைந்த தனிநபர்களின் பெயர்களும் காணப்படுகின்றன. அவற்றுள்மகன், மகள், மருமகன், மருமான், மருகன், சகலன் முதலான குடும்ப உறவு முறைப் பெயர்களும், வேள், ஆய் முதலான பட்டப்பெயர்களும், அடி, கல், நாடு, ஆவி, வாவி, காடு முதலான இடப்பெயர்களின் பின்னொட்டுச் சொற்களும்,பரதவ சமூகம் பற்றியும் கூறப்பட்டுள்ளன. அப்பெயர்களுக்குள் நாகச்சிற்றரசர்கள் பற்றிக் கூறப்பட்டிருப் பதுடன் பிராகிருத மொழியில் நாஹ என எழுதப்படவேண்டிய இப்பெயர் சில கல்வெட்டுக்களில் நாக, ணாக என தமிழ் மயப்படுத்தியும் எழுதப்பட்டுள்ளன. இத்தமிழ்ப் பெயர்களுக்குள் குடும்ப உறவு முறை சார்ந்த உறவுமுறைப் பெயர்கள் அக்காலத்தில் குறிப்பட்ட சில இடங்களில் தமிழர்கள் ஒரு குழுவாக அல்லது குடும்பமாக வாழ்ந்ததை உறுதிப்படுத்து கின்றன. மேலும் இலங்கையில் கண்டுபிடிக்கப்பட்ட ஐந்து பிராமிக் கல்வெட்டுகள் வரலாற்றுத் தொடக்க காலத்தில் வாழ்ந்த வணிகர்கள் பற்றிக் கூறுகின்றன. அவற்றுள் அநுராதபுரத்தில் கண்பிடிக்கப்பட்ட ஒரு கல்வெட்டைத் தவிர ஏனைய நான்கு கல்வெட்டுக்களும் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் கண்டு பிடிக்கப்பட்டவை. இக்கல்வெட்டுக்கள் வணிகர்களை தமிழ் வணிகர் என தனித்து அடையாளப்படுத்திக் கூறியிருப்பதன் மூலம் தமிழர்கள் இற்றைக்கு 2200 ஆண்டுகளுக்கு முன்னரே மொழியால் ஒரு இனக்குழுவாக இலங்கையில் வாழத் தொடங்கிவிட்டனர் என்பதைக் காட்டுகின்றன. இதற்கான உருவாக்கம் பெருங்கற்காலப் பண்பாட்டிலிருந்து ஏற்பட்டதெனக் கூறலாம்.

### பெருங்கற்காலப் பண்பாடும் தற்காலத் தமிழர் பண்பாடும்

தமிழ் சிங்கள மக்களின் பண்பாட்டு வேறுபாடுகள் மொழிகளின் வேறுபாட்டால் தோன்றியதெனக் கூறும் அறிஞர்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலர் இனத்தால் அவர்களின் மூதாதை யினர் இயக்கர், நாகர்களின் வழித்தோன்றல்கள் எனக் கூறுகின்றனர். ஆயினும் அம்மக்களின் பண்பாட்டுடன் சிங்கள மக்களுக்குள்ள தொடர்புகளும், நினைவுகளும் பௌத்த மதத்தின் வருகையோடு தோன்றிய புதிய பண்பாட்டால் மறைக்கப்பட்டது அல்லது மறக்கப்பட்டன என்றே கூறலாம். ஆனால் இலங்கைத் தமிழர்களைப் பொறுத்தவரை அப்பண்பாட்டு அம்சங்கள் சிறப்பாகப் பெருங்கற்காலப் பண்பாட்டின் மரபுகள் சில தற்காலம்வரை தொடர்ந்து நிலைத் திருப்பதைக் காணமுடிகின்றன.

பெருங்கற்கால மக்கள் பிராமி எழுத்தைப் பயன்படுத்த முன்னர் தொடர்பு மொழியாக குறியீடுகளை தமது மட்பாண்டங்களில் பொறித்துள்ளனர். கட்டுக்கரைப் பெருங்கற்கால மக்கள் மட்பாண்டங்களில் மட்டுமன்றி எருதின் சுடுமண் உருவங்களின் வயிற்றுப் பகுதியிலும் இவற்றைப் பொறித்துள்ளனர். அவற்றுள் சூலம், வேல் முதலான குறியீடுகள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன. இவ்வடிவிலான குறியீடுகள் பிற்காலத்தில் தமிழர்கள் வெளியிட்ட நாணயங்களிலும், கல்வெட்டுக் களிலும் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன. தற்காலத்தில் அவ்வடிவி லான குறியீடுகள் பல தமிழர்களின் ஆடைகளிலும், மாடுகளிலும், மட்டக் களப்பில் நாளாந்த பாவனைப் பொருட்க ளிலும் பயன்படுத்தப் பட்டு வருகின்றன. தற்காலத்தில் தனிநபர், குடும்பம், சமூகம், ஊர் என்பனவற்றை அடையாளப்படுத்த தமிழ் அல்லது ஆங்கில எழுத்துடன் குறியீடுகளையும் பயன்படுத்தும் முறை காணப்படுகின்றது. இதற்கு குறியீடுகளைப் பயன்படுத்தும் முறை பண்டுதொட்டு தமது மூதாதையின ரால் பயன்படுத்தப்பட்டு வந்த மரபு என அவற்றைப் பயன்படுத்தும் மக்கள் கூறுவது இங்கு நோக்கத்தக்கது.

பெருங்கற்காலப் பண்பாட்டில் இறந்தவர் களின் எலும்புகளைப் பானையில் (தாழி) வைத்து நிவேதனப் பொருட்களுடன் அடக்கம் செய்யும் மரபு காணப்பட்டது. சங்ககால மன்னர்கள் உயிருடன் இருக்கும் போதே அவர்கள் தம்மை அடக்கம் செய்வதற்குரிய பானையைச் செய்து வைத்துள்ளனர். இது இறந்தவருக்கும் பானைக்கும் உள்ள தொடர்பைக் காட்டுகின்றது. தற்காலத் தமிழர்களின் மரணக்கிரியையில் இறந்தவரது உடல் எரிக்கப்பட்ட பின்னர் எரிந்த சாம்பலையும், எஞ்சியிருந்த எலும்புகளையும் கிரியை செய்வதற்காக பானையிலிட்டு வீட்டின் பின்புறத்தில் தொங்கவிடும் மரபு காணப்படுகின்றது. வடஇலங்கையில் இரணைமடு, நெடுந்தீவு முதலான ஊர்களில் இறந்த ஒருவரை பானையில் தூங்குகின்றார், உறியில் தொங்குகின்றார் எனக் கூறும் மரபு தற்காலத்திலும் காணப்படுகின்றது.

பெருங்கற்காலப் பண்பாட்டு மக்கள் இறந்தவர்களுக்கு மறுபிறப்புண்டு என்ற நம்பிக்கையில் இறந்தவரின் ஈமச் சின்னத்தைச்சுற்றி அவர் வாழ்ந்த காலத்தில் பயன்படுத்திய உணவு களையும், பிறபயன்பாட்டுப் பொருட் களையும் சிறிய மட்பாண்டங்களில் வைத்து அடக்கம் செய்யும் மரபு காணப்பட்டது. இதற்கு கட்டுக்கரையில் கண்டு பிடிக்கப்பட்ட இரு ஈமச் சின்னங்களும் சான்றாகும். தற்கால இலங்கைத் தமிழரிடையே இறந்தவருக் காக நாடத்தப்படும் சடங்கில் பலவகை உணவுகளையும், இறந்தவர் பயன்படுத்திய சில பொருட்களையும் வைத்து கிரியை செய்யும் மரபு இன்றும் காணப்படுகின்றது. பெருங்கற்காலப் பண்பாட்டின் பிற்காலப் பகுதியில் சுடுமண் நாணயங்களுடன், வெள்ளி, செப்பு நாணயங்களும் பயன்பாட்டிற்கு வந்துள்ளதை இலங்கை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்னிந்தியப் பெருங்கற்காலப் பண்பாட்டு மையங்களில் கண்டுபிடிக்கப்பட்ட நாணயங்கள் உறுதிசெய்கின்றன. கட்டுக்கரை ஆய்வில் இவ்வகை நாணயங்கள் அகழ்வு செய்யப்பட்ட இடங்களைவிட மேலாய்வு செய்யப்பட்ட இடங்களிலேயே கிடைத்துள்ளன. இந்நாணயங்கள் பெருங்கற்கால ஈமச்சின்ன மையங்களில் இருந்து கண்டுபிடிக்கப் பட்டிருப்பதை நோக்கும் போது தற்கால இலங்கைத் தமிழரின் மரணக்கிரியைச் சடங்கின் இறுதியில்சுடுகாட்டில் வாய்க்கரிசி போடும் போது நாணயங்களையும் சேர்த்து வாய்க்கரிசி போடும் மரபை நினைவுபடுத்துவதாக உள்ளது.

கட்டுக்கரை, நாகபடுவான் அகழ்வாய்வுகளில் களிமண், மணல், உமி, வைக்கோல், சுதை என்பன கலந்து செய்யப்பட்டு பின்னர் நெருப்பில் சுடப்பட்ட ஆண், பெண் சிலைகள், சிற்பங்கள், பலவகையான கலைச்சின்னங்கள் என்பன கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவை பெருங்கற்கால மக்களின் கலைமரபையும், அழகியலையும், தொழில் நுட்பத் திறனையும் எடுத்துக்காட்டுகின்றன. இவைபோன்ற முழுவடிவிலான பெரிய சிலைகள், சிற்பங்கள் இதுவரை தென்னிந்திய இலங்கைப் பெருங்கற்காலப் பண்பாட்டு மையங்களில் கண்டுபிடிக்கப் பட்டதாகத் தெரியவில்லை. இவற்றுள் பல சிலைகள் பீடங்களுடன் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அப்பீடங்கள் சிலைகளை ஊர்வலமாக எடுத்துச் செல்லும் வகையில் வடிவமைக்கப் பட்டுள்ளன. இதனால்இக்கலை வடிவங்கள் பெருங்கற்காலப் பண்பாட்டு மக்களால் வழிபட்ட நாட்டுப்புறத் தெய்வங்களாகவும், கலைப்பொருட்களாக இருக்கவேண்டும். இக்கலைவடிவங்களில் காணப்படும் காதணிகள், கழுத்துமாலைகள், அட்டியல்கள், கைவளையல்கள், காற்சலங்கைகள், ஒட்டியாணங்கள், பொட்டுகள் (வர்ணங்கள்) கிரீடங்கள், தலைப்பாகைகள், ஆடைகளின் வடிவமைப்புகள் என்பன மண்ணில் தெளிவாகச் செதுக்கப்பட்டுள்ளன. இவற்றின் தொழிநுட்பங்கள், பொருள் விளக்கம், கலைமரபு என்பவற்றை கலைவல்லுனர்கள் ஆராய்ந்து பார்ப்பதன் மூலம் பிற்காலத் தமிழரிடையே தோன்றி வளர்ந்த நாட்டுப்புறத் தெய்வங்களும், கலைவடிவங்களும் பெருங்கற்காலப் பண்பாட்டிலிருந்து தோன்றி வளர்ந்தவை என்ற உண்மை தெரியவரலாம்.

### முடிவுரை

இலங்கையில் வாழ்ந்த இயக்க, நாக மக்கள் பற்றிய அதிலும் குறிப்பாக நாக மக்கள் பற்றிய ஆழமான ஆய்வுகள் இலங்கைத் தமிழரின் வரலாறும், பண்பாடும் அம்மக்களில் இருந்து தொடங்கவேண்டும் என்ற புதிய செய்திகளைச் சொல்வதாக உள்ளன. அவற்றை வெளிச்சம் போட்டுக் காட்டுவதில் கட்டுக்கரைத் தொல்லியல் ஆய்வுகளுக்கு முக்கிய இடமுண்டு. இலங்கைத் தமிழரை இதிகாச, புராணங்களை ஆதாரங்களாகக் காட்டி நாக இனக்குழுக்களுடன் தொடர்புபடுத்தி ஆராயும் மரபு நீண்டகாலமாக இருந்து வருகின்றது. பாளி இலக்கியங்களையும், பெருங்கற்காலப் பண்பாட்டையும் தொடர்புபடுத்தி அப்பண்பாட்டை நாகர்களே அறிமுகப்படுத்தினர் என்ற கருத்தும் தற்காலத்தில் முன்வைக்கப்பட்டு வருகின்றன. இந்நிலையில் இந்நாக மக்களை வடஇந்தியாவிலிருந்து வந்தவர்கள் என வாதிடுவோரும் உள்ளனர். ஆயினும் கட்டுக்கரை, நாகபடுவான் தொல்லியல் ஆய்வுகளில் பரவலாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ள நாகவழிபாட்டுச் சின்னங்கள் நாகத்தை குலமரபுத் தெய்வமாகக் கொண்ட பெருங்கற்கால மக்கள் வாழ்ந்ததை உறுதிப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுத்தியுள்ளன. வடஇந்தியாவிலிருந்து பௌத்தமதத்துடன் வடபிராமி எழுத்தும், பிராகிருத மொழியும் அறிமுகமாவதற்கு முன்னர் இங்கு வாழ்ந்த பெருங்கற்கால மக்கள் தமிழ் எழுத்தையும், தமிழ் மொழியையும் பயன்படுத்தி இருந்தனர் என்பதற்கு நம்பத்தகுந்த சாசன ஆதாரங்கள் கிடைத்துள்ளன. இவ்வாதாரங்கள் நாகருடன் தமிழ் மொழியும், தமிழ் எழுத்தும் (தமிழ்ப் பிராமி எழுத்து) இலங்கையில் தோற்று விக்கப்பட்டதைக் காட்டுகின்றன. இவற்றிலிருந்து இலங்கைத் தமிழரின் வரலாறும், பண்பாடும் பெருங்கற்காலப் பண்பாட்டை அறிமுகப்படுத்திய நாக இனக்குழுவிலிருந்து தொடங்கியதெனக் கூறமுடியும்.

ஆதிகாலத்தில் நாக என்ற பெயருக்குரிய மக்கள் இலங்கையின் பல வட்டாரங்களில் வாழ்ந்துள்ளனர். ஆயினும் வரலாற்று மூலங்கள் அநுராதபுரத்திற்கு வடக்கே திருகோணமலை உள்ளிட்ட வடபிராந்தியத்தையே நாக மக்களுடன் தொடர்புபடுத்தி அதைத் தனியொரு பிராந்தியமாக அடையாளப்படுத்திக் கூறுகின்றன. பாளி மொழியில் நாகதீபம் என அழைக்கப்பட்ட இப்பெயர் தமிழில் நாகநாடு என அழைக்கப்பட்டுள்ளது. இப்பெயர்களே கி.பி.13ஆம் நூற்றாண்டில் பெருநிலப்பரப்பு வன்னி என்ற பெயரையும், 15ஆம் நூற்றாண்டில் குடாநாடு யாழ்பாணயன்பட்டினம் என்ற பெயரையும் பெறுவதற்கு முன்னர் பயன்பாட்டில் இருந்துள்ளன. இப்பெயர்களுக்குரிய பிராந்தியத்தையே 14 ஆம் நூற்றாண்டில் எழுந்த நம்பொத்த என்ற சிங்கள இலக்கியமும் தமிழ்ப்பட்டினம் எனக் குறிப்பிடுகின்றது.

நாக என்ற பெயர் பண்டையகால இலங்கையில் பல இன மக்களும் தனிநபர் பெயராகப் பயன்படுத்தியுள்ளனர். ஆனால் காலப்போக்கில் அப்பெயர்பல இன மக்களிடம் மறைந்து போக வடக்கு-கிழக்கு இலங்கையில் வாழ்ந்து வரும் தமிழ் மக்களிடையே செல்வாக்குப் பெற்ற பெயராகக் காணப்படுகின்றது. இதற்கு நாகன், நாகி, நாகதேவன், நாகராசன், நாகம்மாள், நாகவண்ணன், நாகநாதன், நாகமுத்து முதலான தனிநபர் பெயர்களையும், நாகர்கோயில், நாகமுனை, நாகபடுவான், நாகதேவன்துறை, நாகமலை, நாகதாழ்வு முதலான இடப்பெயர் களையும், ஊர்கள் தோறும் காணப்படும் நாகவழிபாட்டு ஆலயங்களையும் உதாரணங்களாகக் குறிப்பிடலாம். இப்பெயர்கள் இலங்கைத் தமிழரின் மூதாதையினர் நாக இனக்குழுவின் வழித்தோன்றல்கள் என்ற நீண்டகால வரலாற்று நினைவுகள் தமிழர் மத்தியில் இன்றும் நிலைத்திருப்பதைக் காட்டுகின்றன.




கட்டுக்கரை குளத்தின் சில பகுதிகள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உசாத்துணை நூல்கள்**

இந்திரபாலா, கா., 2006, இலங்கையில் தமிழர்- ஓர் இனக்குழு ஆக்கம் பெற்ற வரலாறு, குமரன் புத்தக இல்லம், கொழும்பு.

இரகுபதி, பொ., 2006, வல்லியக்கனும் வல்லிபுர நாதரும், புலரி மறுபிரசுரம், யாழ்ப்பாணம்.

சிற்றம்பலம், சி.க., 1996, ஈழத்து இந்து சமய வரலாறு, பாகம்.1, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளியீடு, கொழும்பு.

சேனக பண்டாரநாயக்கா.,1985, (தமிழாக்கம்) 'இலங்கை மக்கள் வசிப்பிடமதல், தேசிய பிரச்சனை, வரலாறு, இனம் தொடர்பான சில கேள்விகள்' இலங்கையில் இனத்துவமும் சமூகமாற்றமும், சமூக விஞ்ஞான மன்றம், கொழும்பு:1-23.

பத்மநாதன், சி., 2016, இலங்கைத் தமிழர் வரலாறு: கிழக்கிலங்கையில் நாகரும் தமிழும் (கி.மு.250-கி.பி.300), இந்துசமய கலாச்சார அலுவல்கள் திணைக்களம், இந்துமத அலுவல்கள் அமைச்சு, கொழும்பு.

புஷ்பரட்ணம், ப., 1999,'வடஇலங்கைச் சமூகவழக்கில் பெருங்கற்காலக் குறியீடுகள்' வளர்தமிழியல் அறிவியல், அனைத்திந்திய அறிவியியல் தமிழ்க் கழகம், தஞ்சாவூர்.

புஷ்பரட்ணம், ப., 1999, 'தென்னிலங்கையில் கிடைத்த தமிழ் நாணயங்கள் - ஒரு வரலாற்று நோக்கு' நாவாவின் ஆராய்ச்சி, இதழ்.49, சென்னை:55-70.

புஷ்பரட்ணம், ப., 2007, இலங்கைத் தமிழர்- ஒரு சுருக்க வரலாறு, தமிழ்க் கல்விச் சேவை சுவிற்சர்லாந்து, மலேசியா.

Conigham,Robin.,2002, "Beyond and Before the Imperial Frontiers: ERLY Histoic Sri Lanka and the Origions of Indian Ocean Trade" Man and Environment. Journal of the Indian Society for Prehistoric and Quaternary Studies;Vol.XXVII, No.1:99-107.

Deraniyagala, S.U,1992, The Prehistory of Sri Lanka: An Ecologygical Perspective, Department of Archaeological Survey, Colombo.

Mahadevan, I., 1966, Corpus of the Tamil-Brahmi Inscriptions, Reprint of Seminar on Inscriptions, Department of Archaeology Government of Tamil Nadu, Madras.

Mahavamsa, 1950, (e.d) Geiger,W., The Ceylon Government Information Department, Colombo.

Paranavitana,S,1970, Inscription of Ceylon: Early Brahmi Inscrip¬tions,The Department of Archaeology Ceylon,Colombo,.

Pushparatnam,P. 2002, Naka Dynasty as Gleaned from the Archaeological Evidences in Sri Lanka" Jaffna Science Association Tenth Annual Session:1-34.

Pushparatnam, P. 2000,Tamil Brahmi Graffiti from Northern Sri Lanka" Studies in Indian Epigraphy, Vol.XXVI,Maysore.

Rajan,K., 2015, Early Writing System, A Journey from Graffiti o Brahmi, Published by Pandya Nadu Centre for Historical Research,Chennai.

Ragupathy, P., 1991, The Language of the Early Brahmi Inscription in Sri Lanka, [Unpublished].

Seneviratne,S.,1984, The Archaeology of the Megalithic-Black and Red Ware Complex in Sri Lanka in Ancient Ceylon, Journal of the Archaeological Survey of Sri Lanka, 5:237-307.

Sitrampalam, S.K, 1990,Proto Historic Sri Lanka: An Inter¬disciplinary Perspective in Journal of the Institute of Asian Stud¬ies, VIII [1]: 1-8.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறக்கைகளின் தொலைவில்...



-தரங்கிணி (பஸ் ரீனா)

என் நீண்ட அலகால்
இறக்கைகளை கோதுகின்றேன்
அவை ...அழகாய்...
அடர்த்தியாய்....
மென்மையாய்....என்
இறக்கைகள் இன்னும் வளரவில்லை...

அந்தோ....
என்ன சத்தம் ...?
தொலை வானில்....
கூட்டமாய்....
கும்மாளமாய்....
அவர்களும் பறவைகள்....
எனக்கும் தவிப்பு....
திரும்பி பார்கிறேன்-என்
இறக்கைகள் இன்னும் வளரவில்லை....

தொலைவில்
பச்சை குழைத்த காடு.....
சல சலத்த ஓசை....
கூ....கூ...கூ...கீ...கீ..கீ...
அக்கரையில்....
என்ன கச்சேரி....?
தேடல்...
தாகம்...
ஈர்ப்பு....
ஆர்வம்....
திரும்பி பார்கிறேன்-என்
இறக்கைகள் வளரவில்லை...

இப்போ...என்
இறக்கைகள்...
நீண்டு வளர்ந்து விட்டது...
நானும் அவர்களை போல
அவர்களோடு இணைந்தே
இறகுகளை
விரித்து வீசுகின்றேன்.....
காற்றை கிளைந்தது...என்
இறக்கைகள்....

இழுக்கும் மூச்சின் குளிர்
உடலெல்லாம் ஊர்கிறது....
இப்போ....என்
இருப்பிடம் சிறு புள்ளியாய்....

ஆ! ஆங்கே...
என்ன அற்புதம்...
பச்சை நிறமும்
நிறைந்த கனியும்
வித்தை காட்டும்
விலங்கு கூட்டமும்....
எல்லாம்
புதுமை...
அழகு....
அந்த சத்தம்
ஓ....
பாறை மேடையில்
நீர் ஆட்டம்
வளைந்து....
நெளிந்து....
சுழிந்து.....
நெஞ்சை பூரிக்கிறது
கண் நிறைத்த காட்சி
கனவோடு மீண்டும்
இருப்பிடம் நோக்கி
தாழ பறக்கிறேன்....
முறைப்புக்கள்.....
கூச்சல்கள்....
ஓ.....
அந்த பறவைகள்
விதிவிலக்கானவர்கள்..
சுதந்திரமானவர்கள்......
நான்.........
விமர்சிக்கப் படுகின்றேன்
நீ பெண்...பறவை...
மற்றவர் என்ன நினைப்பார்கள்...
ஒவ்வொரு இறகும்
பிடுங்கப்படுவது போல...
திரும்பிப் பார்கிறேன்
இப்போ இறகுகள்
புண்ணாகியது போல....
உயிர்பை தொலைத்த
அந்த பறத்தல் இல்லாத
இறக்கைகள் பாரமானதாக....

ஓ.....
துளு துளுத்த காற்றாய்-என்
குரல் மீட்டுகின்றது....
ஈனஸ்வரமாய்.....
விதிவிலக்கானவர்க்கு கேட்காது
அவர்கள்...
சுதந்திரமான தொலைவுகளில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் நாட்டார் பாடல்களில் இருந்து வழக்கொழிந்து போகாத வழிநடைச்சிந்துக்களில் சில



கலைமாமணி சே. மாசிலாமணி
ஆவணம், நானாட்டான்

கிராமப்புற மக்களிடையே மலர்ந்து மணம் வீசும் ஆடல் பாடல் கதைப்பாட்டு விடுகதை பழமொழி நொடி போன்றவைகளை நாட்டார் இலக்கியம் என்று கூறுகின்றோம். நாட்டுப்புறப் பாடல்கள் அல்லது நாட்டார் பாடல்கள் முன்னைப் பழைமைக்கும் பழைமையாய், பின்னைப் புதுமைக்கும் புதுமையாய் விளங்குகின்றன. வாயில் பிறந்து செவிகளில் உலவிகாற்றில் மிதந்து கருத்தில் இனிப்பவை இப்பாடல்கள். இவை என்றுபிறந்தது, எவரால் பிறந்தது எனஎடுத்துச் சொல்ல இயலாத பண்பும் பாங்கும் பெற்றவை.

நாட்டார் பாடல்கள் கள்ளம் கடபடமற்ற வெள்ளை உள்ளங்களின் உணர்ச்சி வெளிப்பாடே ஆகும். எளிமையும் இனிமையும் இசையும் உணர்ச்சியும் உண்மையும் ஒருங்கிணைந்து இருக்கும். இப்பாடல்கள் படிப்பறிவு குறைந்த கிராமத்து ஏழை மக்களால் உள்ளத்தில் உள்ளதை உள்ளவாறே அவர்கள் வாழும் கிராமத்தின் மண் வாசனைச் சொற்களைக் கொண்டு பாடப்பட்ட இலக்கியக் கருவூலங்கள் ஆகும். நாட்டார் பாடல்களில் தாலாட்டு, குழந்தைப்பாடல்கள், காதல்ப்பாடல்கள், தூதுவிடும் பாடல்கள், பிரார்த்தனைப் பாடல்கள், தத்துவப் பாடல்கள், சத்தியப்பாடல்கள், களிகம்பு (பொல்லடி) பாடல்கள், திரைக்கவிகள், பதிகங்கள், வழிநடைச்சிந்து போன்ற உருப்படிகள் உண்டு. மன்னார் மாவட்டத்திலுள்ள பலபுலவர்கள் வழிநடைச்சிந்துகளை எழுதிவைத் திருந்தார்கள். நானாட்டான் கிழக்கு சுண்டுக்குழியில் தலுகாதுடையார் மரபில் சமரமணவாளன் சந்ததியில் தந்தை விறாசு மொத்தம் தாய் செபமாலை அம்மையார் தம்பதியர்க்கு 10.03.1910இல் மகனாகப் பிறந்தவர் கபிரியேற் புலவர் (1910 – 1976) அவர்கள் எனமன்னார் மாதோட்ட தமிழ் புலவர் சரித்திரம் புத்தகத்தை ஆக்கிய திரு பெஞ்சமின் செல்வம் அவர்கள் குறிப்பிட்டுள்ளார். புலவரும் அவரது மனைவியும் குடும்பமும் முருங்கன் பிட்டியிலிருந்து துவரங்கேணி அந்தோனியார் ஆலயம் சென்று காணிக்கை செலுத்தியதாக இவ்வழிநடைச் சிந்து அமைந்துள்ளது.

**துவரங்கேணிஅந்தோனியார் ஆலயம் செல்லும் வழிநடைச்சிந்து**
**இராகம்: சங்கராபரணம்**
**தாளம்: ஆதி(மிஸ்ரநடை)**
அந்தோனியாரைத் துதிப்போம் வா - துவரங்கேணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயத்திற்கேநடப்போம் வா – எந்தன்
சந்தணமடமயிலேதார் குழலே நீ சுருதி
சந்திரப் பட்டாடை தன்னை தையலரே நீயுடுத்தி (அந்தோனியாரை..)

வண்டுமொய்த்தணைய கூந்தலை வடிவாக சீவி
கண்டுகண் மருட்டுகின்ற – கல்
நகைதனையெடுத்து காதலியே நீயுமன்பாய்
கழுத்தினிலே தானணிவாய் (அந்தோனியாரை..)

பொங்குசென்னெல்தானேமலியும் புகழ் முருகன் மகிழ்வுடனேதானறிகுவாய்
இதுவுமொரு அங்குசலமோனப்புவின் அலங்காரக் கடையதுபார்
ஆத்தியதேத்தண்ணி இப்போ
ஆயிழையேநீகுடிப்பாய் (அந்தோனியாரை..)

நீதிமன்னர் தான் விளங்கும் - நிறைந்தவாடி
வீடுகள் இதோபாரும் அதற்கடுக்கஆதிசதனைப் துதிக்கும்
வேதக்கோவில் தானறிவாய் ஆரணங்கே
துள்ளிநடந்தோடிவாரும் நீருமிப்போ (அந்தோனியாரை..)

கம்பிரோட்டுதான் இதோபாரும் - கருத்தாய் நீரும்
காளையைநடத்திவாருமேஎன் தேவியாரே
கெட்டியாய் நடப்பீரென்றுவண்டில் வசுக்கோச்சிவிட்டு
கொஞ்சுகிளிமாதரசே கூட என்னோடோடிவாரும்(அந்தோனியாரை..)

செங்கல்நிறமானமண்ணேபார் - இதற்குமுன்னர்
செம்மண்தீவுஎன்றபெயராம்
ஈதறிவாய் செங்கமலவாவிசூழ்
சிறந்தகட்டுக்கரைபார் (அந்தோனியாரை..)

அந்தமுள்ளசிந்தவெளியார் பிரேராவுக்கு
அளந்திருக்குதீதறிவாயேஅதிசயமாய்
அந்தோபாரும் கோரமோட்டைஆகியநல்கஞ்சித்தாழ்வு
அண்டிவரும் பனிரண்டாம் கட்டையிது வண்டறிவாய் (அந்தோனியாரை..)

தேன்கழுகுவான்பயிர்களும் சிறந்தெழுந்த
சிங்கோஅப்புவீடிதோபாரும் இடைக்கிடையே
செட்டிகறுத்தார்கமமும் செல்வன் றெசிற்றார் வயலும் - பத்தாங்கட்டை
பார்த்தறிவாய் பாரியேநடந்துவாரும் (அந்தோனியாரை..)

தத்துவம் மிகுந்தமன்னனாம் அனந்தம்
தன்னுறுதிகொண்டகாணியாம் - இதற்குமுன்னம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிட்டிசம் எழுதும் பிலாக்கொட்டைதோட்டம் எட்டிப்பார்
கடைத்தெருவைஏகுவோம் ஒன்பதாங்கட்டை (அந்தோனியாரை..)

கண்டுகொள் கல்மோட்டை இதுவே
கனநீதிகதித்தபியசேனாகடைபார்
ஈதன் வழியேசென்றிடமுத்துக்கடை
கருதினிலேஎன்றும் நின்றுகொண்டே
இருக்கும் நேசமுள்ளகடைபார் (அந்தோனியாரை..)

மாந்தைதெற்கிலேசிறந்தவூர் - உயிலங்குளம்
வங்காலைத்தெருவிதோபார் - வரிசையுறு
வாடாதசென்னல் கட்குஏராளமாய் நீர் கொடுக்கும்
வாகனசுப்பிறின்ரன் வீடுதானிங்கே இதைப்பார் (அந்தோனியாரை..)

எட்டிநடந்தோடிவாருமே - என் தேவியாரே
எட்டாங்கட்டைஎண்டறிகுவாய் - கருத்தில் நீயும்
தட்டொடுசறடுகீழ் அட்டியல் பதக்கன்மாலை
சந்திரவன சமூகதையலரே பார்த்துக்கொள்ளும் (அந்தோனியாரை..)

கணவன்குளம் தானிதுவே–காதலியேநீ
காணுவாய் நொச்சிகுளமீதாம்
இன்னம் வருகுதீதோ ஆளிகண்டல்
மண்டுக்கண்டான் அங்கேபார் துவரங்கேணி
அற்புதஅந்தோனியாரின் ஆலயம் தெரியுதுபார் (அந்தோனியாரை..)

ஆரமுதேசென்றாலயத்துள்ளேகியே இருமுழந்தாளிட்டுமே
சிலுவைவரைந்து தேவனையே போற்றிக்கொண்டுபோன
காணிக்கையதனில் அடுத்தாரில் வைத்துப்பந்தவினை
தீதகற்றிப்பாதுகார் அந்தோனியாரே. (அந்தோனியாரை..)

மன்னார் மாதோட்ட கிறிஸ்தவர்களுக்கு மட்டுமல்ல பிறமதத்தினருக்குக்கூட துவரங்கேணி அந்தோனியாரில் ஒரு விசேடபக்தி உண்டு. இக்கோவிலுக்கு எப்போதும் விசேடமாக செவ்வாய் கிழமைகளில் கால்நடையாகவும் மாட்டு வண்டில்களிலும் அக்காலத்தில் வந்து கோயில் காத்து மன்றாடி கஞ்சிகாய்ச்சி தேவையானோர் தங்கள் தீராதநோய்கள் தீரபதிகங்கள் பாடிகாணிக்கைகள் (நேர்த்திசெலுத்தி) பிணிநீங்கி இல்லம் செல்வார்கள்.

கபிரியேற்புலவர் என அழைக்கப்படுகின்ற சுண்டிக்குளிப்புலவர் தனது ஊரில் இருந்து புறப்பட்டு சிறுக்கண்டல் ஒலுமோட்டை முருங்கன் குளக்கட்டு, முருங்கன்கமம், முருங்கன்பிட்டி, கிறிஸ்துராசாகோயில், கோதாகடை, கிராமக்கோடு நீதவான் இல்லம், ஆஸ்பத்திரிமுச்சந்தி, 14ஆம் கட்டைபோன்ற இடங்களைத் தாண்டியே தனது வழிநடைச்சிந்தை ஆரம்பித்துள்ளார். முருங்கன்பிட்டியிலிருந்து துவரங்கேணி வரை பத்திற்கும் மேற்பட்ட கிராமங்களின் பெயரையும் அவைகளின் மறக்க முடியாத


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்புகளையும் பதியவைத்துள்ளார். 14ஆம் கட்டை (முச்சந்தி) கம்பிறோட் தண்டவாளப்பாதை தொடங்கி செம்மண்தீவு கோரமோட்டைகஞ்சித்தாழ்வு 12ஆம் கட்டைசெட்டிகறுத்தார்கமம், 10ஆம் கட்டை, 9ஆம் கட்டை, கல்மோட்டை உயிலங்குளம், வங்காலை வீதி, கணவன்குளம், நொச்சிகுளம், ஆலிக்கண்டல், மண்டுக்குண்டான் ஆகியவை ஆகும். புலவர் இச்சிந்தில் தனது மனைவியை பதினொரு தடவை பல்வேறு பதங்களால் குறிப்பிட்டுள்ளார். சிந்திலேமடமயில், தார்குழல், தையலர், காதலி, ஆயிழை, ஆரணங்கு, தேவி, கொஞ்சுகிளி, பாரியார், மாதரசே, ஆரமுதே என்று உள்ளது.

அடுத்து அகத்திமுறிப்பு கிராமத்தில் வாழ்ந்த மிகப்பழம் புலவர் மாணாள்வச்ச புலவர் என்றபெயருடையவராகும். இவரது வாரிசுகளான அகத்திமுறிப்பைச் சேர்ந்த எம். சி. சாகுல் ஹமீத், எம். சி.அ மானுல்லாஹ், அஷெஷெய்க், எம். சி. அன்சார் ஆவார். மாணாள்வச்ச புலவரின் வழிநடைச்சிந்தின் முழு வடிவமும் எழுத்துருப் பெற்ற பிரதியொன்று கிராமத்து மற்று மொருபெரும் புலவர் காலம் சென்ற கே. எம். ஜமால்தின் அவர்களிடமிருந்து கிடைத்தது. நீங்களும் படித்துசுவைத்து இன்புறுவதற்காக அதன் முழுமையை இதில் உள்ளடக்க முடியாததால் அவற்றை சுருக்கமாகத் தந்துள்ளேன் என்று கலாபூஷணம் அகத்தி முறிப்பான் நித்திலம் முத்தில் பக்கம் 43இல் பதியவைத்துள்ளார். மேலும் மன்னார் மதவாச்சிபாதையில் உள்ள ஆண்டியா புளியங்குளத்தில் வாலைமஸ்தான் தர்கா உள்ளது. 15 கிராமங்களிலுள்ள முசலி பிரதேச மக்கள் தாங்கள் இறைவனால் பெற்றுக்கொண்ட நன்மைகளுக்கு நன்றி கூற வாலைமஸ்தான் தர்காவுக்குதங்கள் குடும்பங்களுடன் கால்நடையாக சென்றதாக இச்சிந்தில் குறிப்பிடப் பட்டுள்ளது. கொண்டச்சி, இலகரிக்குளம், முசலிகெட்டார், கூளாங்குளம், பண்டாரவெளி, நேத்தன்வெளி, இலந்தைக்குளம், புதுவெளி, புன்னச்சி பொற்கேணி, அகத்திமுறிப்பு, வேப்பங்குளம், மதுரமடுவெளி, வேப்பமோட்டை, நரிகலச்சான், பிச்சவாணியன்குளம், போன்ற கிராமத்து ஆண்கள், பெண்கள் ஒன்றுசேர்ந்து அரிசிகடாய் எடுத்துக்கொண்டு சின்னப் பிள்ளைகளுக்கு சீப்புப்பணியாரமும். ஆம்பம் பெருவிளாங்கா, தேன்பணியாரமும் கொண்டு போவதாக பாடல் கூறுகின்றது.

முகமதுசமாலத்தீன் புலவர் (1910 – 1965) முசலிதெற்கு சிலாவத்துறை என்னும் நகரில் வசித்த முகம்மதராவுத்தர் என்பவரின் பத்திரனாக 1910இல் பிறந்தவர். வழிநடைச்சிந்து, கும்மி, மனைக்காண்டம், நபிகள் பேரால் முனா ஜந்துகளும் பாடினார் என்று அறியவந்த போதும் அவைகளிலொன்றும் கிடைக்கவில்லை என மாதோட்டப்புலவர் சரித்திரத்தில் பக்கம் 61இல் திருபெஞ்கமின் செல்வம் பதியவைத்துள்ளார்.

**வாலை மஸ்தான் தர்ஹாவுக்குசெல்லும் வழி நடைச்சிந்து**

தரிசித்துவருவோம் புறப்படுங்கள்
தரித்துவருவோம்
பரிசுத் நவநீதர் பலதேசம் புகழ் நாதர்
பாங்குடன் புகழ்கள் விண்ணோங்கிய தவராஜர்
மருமொய்த மலர் வெற்றி மலர மாலையணி மாற்றி
வாலை மஸ்தானொலி காலைவைத்தே கண்ணில்
தரிசித்துவருவோம்.............

 Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org 

கொண்டச்சி இலக்கரிக்குளத்தில் முசலிகட்டர்
கூளாங்குளம் முசலிவாருவெளியாருடன்
பண்டாரவெளிமேத்தன் வெளியாரிலந்தைக்குளம்
அஞ்சுகண்மொழிமாதர் பாங்குடனேதங்கள்
பாலரைஎடுத்து . வர்ணவெள்ளைச்சீலைகள் உடுத்தி
மணிகள் போன்று
உண்டரிகத்தாடமரைக்காயரூராரும்
புதுவெளிபுள்ளச்சிபொற்கேனிபூவையும்
முண்டகத்திருமாதர் என்றும் நின்றிலங்கிட
முழுச்செல்வம் சிறப்புறஅகத்திமுறிப்பிலுள்ளோரும்
முழுதுமே கூடி - அரிசிகடாய் பலதுமேதேடிஎடுத்துகொண்டு
கொண்டலுறையும் பொளிர் கருங்காலித்தான் வேப்பங்குளத்தார்
இத்திக்குளகோதையர் ஆகிய
கண்டுமொழிமடந்த் பிச்சைவாணியன்குள
கன்னியராடவேகாணிக்கைகளும் கொண்டு
கனகங்கள் சூடிசாகிபுபாதம்காணவேநாடி
மனதிற்கொண்டுபெண்டில் பிள்ளைகளும்
புருசர் மாறுமாக
புன்னகைவறுமைநீங்கிபுவியிலகற்றிவாழும்
அண்டர் புகழ்ந்திடும் அற்புதக்கடலான
அரசர் வாலைமஸ்தான் நெய்நார் பாதம் கண்டு
தரிசித்துவருவோம் .............

தாலிமணிசவடிகாதில் பனி மூக்குத்தி
தனத்தில் நவுக்கைகளும் விரல் கை மோதிரமும்
கோருதருசுவளைகொடுங்கைமருதோண்டியும்
கொண்டைக்கிசைந்தகுஞ்சந் தளபமலர்
கோர்வையும் வாய்ந்தேபரிமளம் பொன்னிர்களும்தேர்ந்தே
அழகிலங்கு பீலி கொலுசு தண்டைபாடகஞ்சிலம்புகள்
பிறங்கைபிறங்கால் மீதுசலங்கைகலகலவென
காலில் விரலிலிட்டபிலிமுழந்தாங்கியும்
கதிரஒளிரிலங்கஒளிரஅழகிலங்க
கவி மிகப்பொழிந்தேஅன்னமஞ்சல் இவனுறநடந்தே
உடுத்திருந்த
சேலைபளபளவெனதெருவைமாரெல்லோரும்
சேயர் பசிக்கருந்தவாயல்தனிக்கினிய
சீலமுடன் தன்பலதேட்டமுனருண்டு
சீப்பபனியாரமும் ஆப்பம் பெருவிளாங்கா
தேன் பன்யாரம் மிகுந்தவர்க்கதான் செய்தயாரும்
எடுத்துகொண்ட
சாலவர்ணப் பொடிதன்னிலேகட்டி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தையாலிஎடுத்துகொண்டுதலைவர்மாருடனேயே
பாலர் தடைசுமந்துபதவியுடன் நடந்து
பக்தியுடன் வாலை மஸ்தான் ஒளிபொற்றாலை
தரிசித்துவருவோம்............

மதுரமடுவெளியில் வகுத்தபலஓராரும்
வாகுபெறவே கூடி பாகோடிலையருந்தி
ஒருவைஒருவையாரும் அருவைஅருவையாரும்
ஒன்றுபெறவே கூடி கண்டு உறவுபாடி
ஒளியல் நடந்துவருவதுபொற்டறாளியன்கடந்து
நகர் முழுதும் வெயில் எழுந்துவருகுமுன்னே
வெளியாக வேப்பமோட்டைவளியை கடந்து கன்று
நரிகளைச்சகனணடி புலிக்குபுறம் விலகி
நாதர் வாளை மஸ்தான் ஒளிகாலைவைத்தேகண்ணல்
தரிசித்துவருவோம்.............

வழக்கொளிந்துபோகும் வழிநடைச் சிந்துகளைத் தேடிகண்டுபிடித்து ஆவணப்படுத்த வேண்டியது எமது பணியும் பொறுப்பாகும். பழமைக்கும் பழமையான மன்னார் நாட்டார் பாடல்களும் தொகுக்கப்பட்டு மக்களால் சுவைக்கப்பட வேண்டும் என கலைத்தாயின் சார்பில் தாழ்மையுடன் கேட்டுநிற்கின்றேன்.

**உசாத்துணைத்நூல்கள்**

01. நித்திலம் முத்து 03
02. மன்னார்மாதோட்டதமிழ்புலவர் சரித்திரம்
03. கிழக்கிழங்கை நாட்டார் பாடல்கள்



கலைஞர்களுக்கான ஓய்வூதியத் திட்டத்தின் பத்திரம் வழங்கல் நிகழ்வு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 'கலைப் புயல் ஓய்ந்தது'

## கலைத்தவசி குழந்தை செபமாலை அவர்கள் பற்றிய மனப்பதிவு

(நினைவஞ்சலியின்போது ஆற்றிய அஞ்சலியுரை)



திரு. எஸ். டேவிட் (அதிபர் சேவை தரம் 1)
(ஆய்வாளர்),
ஓய்வுநிலைக் கல்வி அதிகாரி, முருங்கன்.

அமரர் கலைத்தவசி குழந்தை செபமாலை அவர்கள் 2022 ஜனவரி 08ஆம் திகதி இறைபதம் அடைந்து, அவரின் அடக்கச்சடங்கு 11ஆம் திகதி நடைபெற்றது.

இன்றைக்கு அவரது 08ஆம் நாள் அஞ்சலி நிகழ்வு நடைபெறுகின்றது. இன்றைய அஞ்சலி நிகழ்வு வித்தியாசமானது. அன்றைய நாளின் பரிணாமமும் வேறுபட்டது. அடக்கச்சடங்கு அன்று சிலபேருடைய இரங்கல் உரைகள் நேரம் போதாமையால் தவிர்க்கப்பட்டன. இன்று, அவற்றை ஈடுசெய்வதற்காக அவருடைய மருமகன் தம்பி திரு. ப. மனோகரன் 08ஆம் நாள் நினைவஞ்சலி நிகழ்வுக்கு வரும்படியும் உரையாற்றும் படியும் என்னைக் கேட்டுக்கொண்டார்.

இன்றைக்கு வேறு இடத்துக்குச் செல்ல இருந்த நான், அப்பயணத்தைத் தவிர்த்து இந்நிகழ்விற்கு வந்திருக்கின்றேன். இன்றைய நாள், நம் முருங்கன் வரலாற்றில் உண்மையில் ஒரு முக்கியமான நாள்! மன்னார் மாவட்டத்திலும் இலங்கையிலும் தவிர்க்கமுடியாத முன்னிலையில் விளங்கிய ஒரு கலைஞன்தான் கலைத்தவசி செபமாலை குழந்தை அவர்கள். இவருக்கு மன்/ உயிலங்குளம் றோ. க. பாடசாலை சார்பாக எழுதிய ஓர் அஞ்சலிக் குறிப்பில் ஒரு வசனம் இருந்தது: 'கலைப்புயல் ஓய்ந்தது' என! உண்மையில் அவ்வஞ்சலிக் குறிப்பு மிகச் சிறப்பாக எழுதப்பட்டிருந்தது.

அது உண்மையிலும் உண்மைதான். அவருடைய வாழ்க்கைக் கட்டமைப்பு நன்றாக ஒழுங்கமைக்கப்பட்ட வகையில் இருந்ததை - இருப்பதைப் பார்க்கின்றேன். இவ்வொழுங்கமைக்கப்பட்ட அவரது வாழ்க்கை நான்கு தூண்களில் எழும்பப்பட்டிருந்தது.

ஒன்று, அவர் சார்ந்த முருங்கன் மத்தி சார்ந்த மக்களை ஆழ்ந்து மையப்படுத்தி இருக்கின்றது.

இரண்டு, ஆன்மீகத்தில் மையப படுத்தி கட்டியெழுப்பியிருந்தமை. சமூக கட்டமைப்பின் ஊடாக அவருடைய வளர்ச்சியும், அவ்வாறு அந்த கட்டமைப்பினுடைய ஒழுங்கமைப்பின் ஊடாக அதனுடைய வளர்ச்சியும் அதன் முன்னேற்றமும் தொடர்ந்து வளர்ந்து கொண்டிருக்கின்ற அந்தக் கட்டமைப் பினுடைய பரிணாம வளர்ச்சியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்று, அவரை வாழ்வித்த அவரது கல்விப்பணி. அவர் ஆற்றிய கல்விப்பணி என்ற கட்டமைப்பை நாங்கள் ஒவ்வொரு பாடசாலைக்கும் மாதிரியாகக் கொடுக்கலாம். கல்விப்பணியை நல்ல வகையில் செய்து நற்பெயருடன் ஓய்வு பெற்றுக்கொண்டார்.

நான்காவது விடயம், மிகப் பெரிய விடயம் என்னவென்றால், இயல்பாக அவரது குருதியில் ஊறிய, அவரது இயக்கத்தில் இருந்த அவருடைய ஆற்றலை மையப்படுத்திய செயற்பாடு. இது, அவருடைய புகழுக்கும், பெருமைக்கும், மேன்மைக்கும், வாழ்வுக்கும் வழிவகுத்த ஓர் அம்சமாக அமைந்தது. மக்கள் கூடுகின்ற காரணம் இதுதான். அது கலை என்கின்ற அம்சம்தான். குழந்தை மாஸ்ரர் நாடகம் போட்டாரென்றால் சனம் கூடிவரும். அவருடைய ஆற்றலைக் கண்டு சனம் கூடிவந்தது. இன்றைய அஞ்சலி நிகழ்வும் அதையே பிரதிபலிக்கின்றது.

அவருடைய அடக்கச் சடங்கு நாளில் திருப்பலியில் பங்கெடுத்திருப்பீர்கள். அவர் இறைபதம் அடைந்து நான்காவது நாள் அடக்கச்சடங்கு இடம்பெற்றது. நான்கு நாள் இல்லாமல் இறந்த மறுநாள் அடக்கச்சடங்கு நடந்திருந்தால் நான்கு ஆலயங்கள் தேவைப்பட்டிருக்கும். அதுவும் பென்னம்பெரிய ஆலயங்கள் தேவைப் பட்டிருக்கும். இதனைக் கற்பனை செய்து பார்த்தேன்! நான்கு நாள்களும் மக்கள் திரள்திரளாக வந்து தமது இறுதி மரியாதையைச் செலுத்தினார்கள். தமது அன்பையும் ஆதரவையும் அபிமானத்தை யும் பெருந்திரளான மக்கள் அவரின் இறுதி நிகழ்வில் வெளிப்படுத்தியதைக் காணமுடிந்தது.

இவ்வளவு சனம் அவரை ஈர்த்திருக்கின்றது. நிறையப்பேரை அவர் ஈர்த்திருக்கின்றார். பயங்கர தொற்றுக்காலத்திலும் இத்தனை மக்கள் திரள்திரளாக வந்து தங்கள் அன்பை வெளிப்படுத்துவதில் இருந்து அவரின் தமிழ்த் தொண்டையும், கலைத்தொண்டையும் நாம் மதிப்பிடலாம். அவர் தம் குடும்பத்தைப்போல, கத்தோலிக்க மதத்தையும் தமிழ்மொழி யையும் தமிழ்மொழி ஊடாக தமிழ்க் கலையையும் நேசித்தார். தமிழ், அவருடைய உயிர்மூச்சாக இருந்தது. அவருடைய பிள்ளைகளைப் பாருங்கள்! முழுப்பேருக்கும் தமிழ்ப் பெயர்கள்தான். அவருக்கும் மூன்று தமிழரசர்கள் இருக்கின்றார்கள் என்று சொல்வார்கள். சுற்றாடலில் 'குழந்தை' என்பது அவரது செல்லப்பெயர். அவருக்கு 'தம்பிராசா' என்று இன்னொரு பெயரும் உண்டு. 'செபமாலை' என்பது அவரது பெற்றோர் வைத்த பெயர். பிள்ளைகள் எல்லாருக்கும் தமிழ்ப்பெயர்தான்: ஆனந்தராசா, இன்பராசா, அன்புராசா, திருமகள், மலர்விழி, கயல்விழி. பேரப்பிள்ளைகளுக்கும் தமிழ்ப் பெயர்கள்தான். கத்தோலிக்கப் பெயர் ஒன்றுமில்லை. அந்த அளவுக்கு தாய்மொழியை நேசித்த நல்ல கத்தோலிக்க குடிமகனாக வாழ்ந்தார்.

முன்னாள் மேதகு ஆயர் இராயப்பு யோசேப்பு ஆண்டகையின் பாடசாலை சக மாணவன். புகழுக்கான சந்தர்ப்பங்களை அவர் தேடிப் போகவில்லை. அவருடைய நல்ல அணுகுமுறையால் அவருடைய ஆற்றலால் அவருடைய விடாமுயற்சியால் சந்தர்ப்பங்கள் தேடிவந்தன. அவர் உருவாக்கி, வடிவமைத்து, ஒழுங்கமைத்து, வழிநடத்திய முருங்கன் முத்தமிழ்க் கலாமன்றம் ஐம்பதாண்டு கடந்தும் வாழ்ந்துகொண்டிருக்கிறது, இன்னும் வாழும்.

எனக்கு முன்பேசிய அவருடைய மூத்தமகன் தன் அநுபவத்தைப் பகிர்ந்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தப் பேச்சு முற்றுப்பெறவில்லை! முடித்து வைக்கவுமில்லை! அவருடைய வீட்டிக்கு முன் பெரிய மருத மரம் நின்று விழுந்ததுபற்றிக் கூறினார். ஆனால் கதையை முடிக்கவில்லை. அவர் அதற்கிடையில் அழுதுவிட்டார். அழுகைக்கு முன்னால் அந்தக் கதை மௌனித்துவிட்டது. அந்தக் கதை ஏன் முற்றுப்பெறவில்லை என நான் பின்னர் யோசித்துப் பார்த்தேன். அந்தப் பெரிய மரத்தைப்போல ஒரு பெருவாழ்வை அவர் வாழ்ந்திருக்கின்றார். அந்த மரமும் வீழ்ந்தது, அவரது ஆவியும் பிரிந்தது! ஆனால், அவரது வாரிசுகளின் வளர்ச்சி தொடர்கின்றது.

அவர் தொடங்கி வைத்த ஒவ்வொரு விடயங்களும் படிப்படியாக முன்னெடுக்கப் படுகின்றது. அந்த மரம் வீழ்ந்தாலும் அதற்கு அருகில் நிறைய இளைய மரங்கள் நிரைவகுத்து நிற்கின்றன. இதேபோல அவருடைய பிள்ளைகள் எல்லாம் ஒவ்வொரு துறைகளிலும் கல்விமூலம் முன்னேறி நற்பெயரைக் காத்து வருகின்றமைக்கு நான் சான்றுபகர முடியும். அவரது கல்விச்சேவையையும் கலைச்சேவையையும் அவரது குடும்பமாக ஆற்றிய பணிகளையும் இந்த யாகப்பர் ஆலயம் சார்ந்த மக்களை வழிப்படுத்தியதையும் மறக்கமுடியாது. நல்ல நண்பனாக, சகோதரனாக, ஆசிரியராக, அதிபராக பல்வேறு பரிணாமாங்களை நாம் அவரில் காணமுடியும்.

இரண்டாம் உலகப்போர் காலத்தில் அவர் பிறப்பு நிகழ்ந்திருக்கின்றது. இந்த தொற்றுக்காலத்தில் ஜனவரி எட்டாம் திகதியில் இறந்திருக்கின்றார். மார்ச் எட்டாம் திகதி பிறந்திருக்கின்றார். இன்று அவர் இறந்து எட்டாம் நாள். எல்லாம் எட்டாம் திகதிதான். எல்லாமே எட்டுத்தான்! அந்தவகையில் அவரைபற்றிய மதிப்பீடுகளில் நிறைய சுவாரஸ்யங்கள் உள்ளன.

இதனைவிட முக்கியமானது 'கலைத்தவசி' என்ற நூல் வெளியீட்டில் பல கோணங்களில் எழுதப்பட்ட ஆய்வுக் கட்டுரைகள் எல்லாம் புத்தகமாக வந்தது. அன்றைய நிகழ்விலும் அவரைப்பற்றி நிறையவே பல கோணங்களிலிருந்து பேசப்பட்டது. இன்றும் பேசப்படுகிறது. இனியும் பேசப்படும். இன்றைய அஞ்சலி உரைகளில் ஒவ்வொருவரின் அநுபவப் பகிர்வும் ஒவ்வொரு கட்டுரை மாதிரி இருக்கின்றது. அவ்வாறு அமைந்ததில் ஆச்சரியப்படுவதற்கில்லை!

குழந்தை மாஸ்ரரின் கூத்து மேடையைப்போல அவருடைய இறுதி நிகழ்வும் அஞ்சலியோடும் பாடல்களோடும் நடந்தது. எட்டாம் நாள் நிகழ்வும் அவ்வாறுதான் இருக்கின்றது. வித்தியாசமான நிகழ்வுதான்! நிறையபேர் பாராட்டி இருக்கலாம், சிலர் விமர்சித்தும் இருக்கலாம். அவையெல்லாம் முக்கியமல்ல. குழந்தை மாஸ்ரர் 'இலக்கை' முன்வைத்து செயற்பட்டார். அந்தவகையில் தன்னுடைய குடும்பத்தையும் பிள்ளைகளையும் உணர்ந்து செயற்பட்டார். தான் சார்ந்த சமூகத்தையும் கலைஞர்களையும் உருவாக்கி சமூகத்திலும் நாட்டிலும் வெவ்வேறு மட்டங்களில் நற்பெயர் கிடைக்க வழிசெய்திருக்கின்றார்.

இவரைப்பற்றி நிறையவே ஆய்வு செய்யலாம். பல்கலைக்கழகத்தில் இவரைப் பற்றிய ஆய்வுக்கட்டுரைகள் எழுதப் பட்டுள்ளன, இன்னும் எழுதப்படும். அவருடைய கலைத்துறைசார் பரிணா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மங்கள் வீரியமான வீச்சுக்களாக உள்ளன. இத்தனைக்கும் அவரது வாழ்வு சிறிய வாழ்வாக ஆரம்பித்து தனது திறமை மூலமாக சூரியனைப்போல பிரகாசித்து இருக்கின்றார். அவர் பிள்ளைகள் வளரும் மட்டும் இல்லத்தின் கட்டமைப்பில் நீண்டகாலமாக ஒரு மாற்றமும் செய்யவில்லை. பிள்ளைகள் வளர வளர எல்லாம் மெல்ல மெல்ல கலை ஒழுங்குபடுத்தப்பட்டதுபோல அவரது இல்லமும் புதிய வடிவம் பெற்றது. யாரோடும் முரண்படாமல், பகைக்காமல், பக்குவமான அணுகுமுறையூடாக தன்னுடைய வாழ்வை அமைத்துக் கொண்டார். யாரையும் மனம் நோகின்ற அளவுக்கு நடந்து கொள்ளமாட்டார். இவரது உயரிய பண்புகள் எல்லாருக்கும் நல்ல முன்மாதிரியாக இருக்கின்றது.

கலைத்தவசி என்ற பெயர் இவருக்கு பொருத்தமானதுதான். கலைக்காகவே வாழ்ந்தவர். கலையைத் தவமாக கொண்டவர். இதனால்தான் கலைத்தவசி என்ற பட்டம் இவருக்குக் கிடைத்தது. நிறைய பட்டங்கள் இருந்தாலும் 'கலைத்தவசி' என்ற பட்டத்துக்கு எப்பட்டமும் நிகரில்லை என நினைக்கின்றேன்.

எந்தவொரு காலத்திலும் தன்னை ஒரு சோர்வான மனிதனாக காட்டிக்கொள்ள மாட்டார். எவ்வளவோ சவால்களை, பிரச்சினைகளை சந்தித்துக் கடைசியாக தன்னுடைய இறுதிப்பயணத்தையும் தொடர்கின்றார். நிறைவாக, அவரது குடும்பத்தை இறைவன் ஆற்றுப்படுத்த, அமைதிப்படுத்த வேண்டும் என வேண்டி விடைபெறுகிறேன்.

---



# வடக்கின் முதுசம் பனைமரம்...



கவிஞர் பொற்கேணி முனஃபர்
பொற்கேணி - மன்னார்.

*பனைமரமாம் பனைமரம் பயன்தரும் பனைமரம்
சினைகளாம் ஒவ்வொன்றும் சிறப்புத்தரும் பனைமரம்
வினையகற்றி வாழ்விலே வீரியம்தரும் பனைமரம்
மனைசிறக்கும் பொருட்களை மகிழ்வாய் தரும் பனைமரம்!*

*அடிமுதலாம் நுனிவரை அளவில்லாத நன்மையாம்
குடிசைவேயும் ஓலையால் கொடியவெப்பம் தண்மையாம்
குடிக்கின்ற பதநீரால் குளிருடம்பு மேன்மையாம்
இடிதாங்கியாய் நின்றுமே இன்னல்கள் தீர்திடும்!*

*மழைநீரின் வேகத்தின் மண்ணரிப்பைத் தடுத்திடும்
நுளைகின்ற தாகத்தினை நுங்குமே கொடுத்திடும்
விலைகளின்றி விளைகின்ற விருட்சமாம் வடக்கிலே
குலைகள்நிறை பனம்பழம் கொடுக்கின்ற பனைமரம்!*

*வெல்லங்கள் கரும்பட்டி விரும்பியுண்ணும் கற்கண்டு
இல்லங்கள் கரும்பாக இனித்திடும் பனம்பணாட்டு
செல்லங்கள் விரும்பியே சுவைத்திடும் ஒவ்வொன்றும்
உள்ளங்கள் அரும்பிடவே உவந்தளிக்கும் பனைமரம்!*

*இணங்காது பெற்றோரை இடும்பைகள் செய்துமே
சினங்கொண்டு திரிகின்ற சிறுவர்கள் முதற்கொண்டு
பனங்கிழங்கு தருவதானால் பார்த்தோடி மகிழ்ந்துமே
சுணங்காமல் அருகமரச் சுகமளிக்கும் பனைமரம்!*

*வரட்சியிலும் வளர்ந்திடும் வாரிப்பயன் தந்திடும்
திரட்சியான நன்மைகள் தினம் நமக்கு சிந்திடும்
புரட்சியான மரங்களாம் புவிகண்ட உண்மைகள்
சிறப்புமிகு திறன்களின் சிந்தைகவர் பனைமரம்!*

*கலைமிகுந்த பொருட்களை கரியபனை ஈந்திடும்
விலையுயர்ந்த பயன்களை விதவிதமாய் சேர்த்திடும்
நிலைகுலையும் புயலிலும் நிமிர்ந்துமே நின்றிடும்
சிலைபோல காலமெல்லாம் செழித்திடும் பனைமரம்!*

*எழுதப்படிக்க முன்னோர்கள் ஏடுகளாய்ப் பயன்படுத்தி
விழுதுளை பிள்ளைகள் வியந்திட படிப்பித்தனர்
உழுதுமுடிக்க ஏர்க்கலப்பை உதிரிப்பாகமாய் கொண்டு
பழுதுபடாத வாழ்வினில் பயன்தந்த பனைமரம்!*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாற்றம் கோரும் மரபுக்கலைகள்



தேசியக்கலைஞர்
எஸ். ஏ. உதயன் - மன்னார்

வரப்பிரசாதங்களாய் வாய்த்த வளங்ளை இன்று நாம் கொஞ்சம் கொஞ்சமாக இழந்து வருகின்றோமா..? நம் மண்ணின் பண்பாட்டு மூலங்களை நாமே மாற்றத்துக்குள்ளாக்கி மனித வாழ்வின் பெறுமதியை அர்த்தமற்றதாக்கி விடுகிறோமா..? தலைமுறைகடந்து வாழ வேண்டிய ஒழுக்க விழுமியங்களுக்கு நாம் முற்றுப் புள்ளி வைக்க நினைக்கிறோமா..? என்ற கேள்விகளுக்குள் நம் சமூகம் இன்று சிக்கியிருப்பதை நாம் உணருகிறவர்களாய் இருக்கிறோம்.

தொன்று தொட்டு அறிவார்ந்த செயற் பாடுகளிலும் கலை கலாசார செழுமை யிலும் புறவுலகுக்கு அடையாளப்படுத்திக் கொண்டிருந்த மன்னாரின் ஆற்றல்கள் மீது எழுப்பப் படுகின்ற கேள்விகளாகவே இவை இருக்கின்றன.

கால மாற்றத்திற்கேற்ப நாங்களும் மாறுகின்றோம் என்று சாதாரணமாகக் கடந்து போக முடியாது. ஏனென்றால் நம்மிடையே குடிகொண்டு இருப்பது நம் முன்னனோர் களால் கட்டியெழுப்பப்பட்ட இனிதான வாழ்வு நெறி என்பதை நாம் மறந்து விடக்கூடாது. முன்னொரு காலத்தில் நாட்டுக் கூத்து, உடக்குப்பாஸ், பெரிய நாடகங்கள் என்று ஆடிக்களித்திருந்த கலைகளையும் சடங்குகளையும் இல்லாதொழித்துவிட்டு வெறும் இயந்திரமயமாக்கப்பட்ட உணர்வும் உணர்ச்சியுமற்ற வேலைச் சுழற்சியில் நாம் வீழ்ந்து கொண்டிருக்கிறோம் என்பதைக் குறித்த உள்ளார்ந்த பயமே இந்தக்கட்டுரை.

இளைஞர்களும் யுவதிகளும் அனுபவம் மிகுந்த முதிர்ந்தோரின் வழிநடத்தலில் நடந்து வந்த வாழ்வியல் கலைக் கோலங்களை இன்று எண்ணிப்பார்க்கும் போது அத்தகைய காலம் திரும்பி வராதா என்ற ஏக்கம் நமக்கு எற்படுகின்றதே..! கடற்கரைவெளிகளில் அர்த்த வரிகளாய் ஏற்ற இறக்கத்துடன் மீனவர்கள் பாடுகின்ற அந்த அம்பாச்சத்தம் இப்போது இல்லாமல் போய் விடுவது கடற்கரை வெளிகளின் இசைந்த இயற்கையையையே நையாண்டி பண்ணுவதைப்போல இருக்கின்றது.

மீன்பிடிப்பவர்கள் தமது கடற்கலத்தை கடலில் தள்ள வொரு பாட்டு, வலை வலைக்கவென ஒரு பாட்டு, வலையை இழக்கவொரு பாட்டு, மடியைத் திறக்கவொரு பாட்டு என்றுவகைப்படுத்திப் பாடுகின்ற அந்த அழகிய அம்பாவுக்கு இப்போது என்னவாயிற்று.

**பேசாலை ஏழுகட்ட - ஓவேல**
**பேசிப்போவோம் வாடி பொட்ட.. - ஓவேல**
**செம்மலை ஏறிநின்னு - ஓவேல**
**தட்டுப்பாயை விரிச்சபொண்ணு - ஓவேல**
**வாய்வயிறா நிக்கிறாளே..- ஓவேல**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அடி மண்ணடாடி சொல்லக்**
**கேட்டு- ஓவேல**
**ஊத்தங்கரைப் பாட்டை ஈங்கு- ஓவேல**
**கை நெகிழவைச்சோமடி.. - ஓவேல**
**மாதாவேமீன் பாட்டத் தான் - ஓவேல**
**கூட்டித்தாரும் ஆண்டவரே ஓவேல.**

என்று பாடுகின்ற அம்பாப் பாடல் உள்ள இடத்தில் இப்போது

**எக்காய் தெக்காய் துனாய்..அல்லப்பியா..** என்ற சிங்களத் தெறிப்புகள் நுழைய வேண்டிய தேவை ஏன் வந்தது.? கொச்சையான தூசணங்களும், சினிமா பாட்டு எச்சங்களும் அந்த உழைக்கும் மாந்தரின் வாய்களிலில் இருந்து அசுத்தப்பட்டு வருவது குறித்த கவலை இன்னும் மேலோங்குகிறது.

மீனவர்களின் வாழ்வாதாரத்தோடு இசைந்து மேலெழும்பிய அந்த தெம்மாங்கு நாட்டார் பாடற் கலைக்கு முடிவு காலமா இது..? ஆம்.. நாம் நிச்சயமாக கடற்கரை வெளிகளின் வசந்தங்களை இழந்து வருகிறோம்.

முன்பெல்லாம் தொழில் முடிந்தால் ஆலயங்களிலும், கலாசார மண்டபங் களிலும் கூடுகின்ற இளைஞர்கள் இப்போது கைப்பேசியோடும், மதுக் கடைகளோடும் சங்கமித்து விடுகின்ற அவலம் கூடிக்கொண்டே போகிறது. மாதத்துக்கொரு தடவை நடத்துகின்ற நாடகங்கள் எங்கே..? இனிமையாய் இசைபடித்து மகிழுகின்ற கூட்டங்கள் எங்கே..? சிறுவர்களை யழைத்து வந்து எதிர் கால நம்பிக்கையூட்டும் விளையாட்டுக்கள் எங்கே..? வினோதங்கள் எங்கே..? என்று நம் சுற்றத்திலும் முற்றத்திலும் எழுகின்ற கேள்விகளுக்கு விடையளிக்க வேண்டிய கடப்பாடு நம் தலை முறைக்கு உண்டு.

முன்பெல்லாம் பாடசாலை மாணவ மன்றங்களிலேயே நாடகமும், விவாத அரங்குகளும், கவிதா மஞ்சரிகளும் களைகட்டி விளையும்பயிர் முளையிலேயே தெரிந்து விடும். இப்போது அறிவியல் பெருக்கமென கணனிபற்றி மட்டும்தானே மாணவர்கள் உரையாடுகின்றனர். அரிதாரம் இட்டு மேடையில் தோன்றி பார்ப்பவரை வசீகரிக்கும் நாடகங்கள் இல்லாது போய் விட்டனவே..

வாசாப்பு படித்தால் ஊரின் பஞ்சம் தீர்ந்து விடும், நோய் நொடிகள் அகன்றுவிடும், செல்வம் பெருகும், வாழ்க்கையில் இனிமை மலரும் என்ற அந்த அடிப்படையான நம்பிக்கையைக் கைவிட்டு நாமே இழுத்து மாய்கிறோம் என்று வாழ்க்கையை சுமையாக எண்ணிக் கொண்டு தான்தோன்றிகளாய் வாழும் இந்த தலைமுறையை நாம் நெறிப்படுத்த வேண்டாமா..?

வாசாப்பு படிக்கின்ற காலத்தில் நாளெல்லாம் திருவிழா போல உள்ளம் துள்ளுமே.. இது நாடகம் படிப்போருக்கு மட்டுமல்ல..இந்த ஊர் மக்களுக்கே பொருந்தி இருந்த அந்தப் பொன்னான நாட்கள் இப்போது எங்கே..?

ஒவ்வொரு நாளும் நாள் முடிகின்றதே என்ற கவலை தோன்றும் போது அடுத்தநாளை எதிர் பார்க்கும் இனிமை தானாகத் தோன்றி விடுகின்ற மாயத்தை என்னவென்று சொல்லுவது.?

ஒரு இளைஞனின் ஆளுமை அவனது சமூக நடத்தைகளிலும் கலை கலாசாரப் பங்களிப்புக்களிலும்தான் உள்ளது என்று ஆதூரமாய்ப் பேசி அவனை நாயகனாகவே பார்க்கும் ஒரு சுவையான யதார்த்தம் நம்மை விட்டுக் கடந்து போகின்றதே.. நான் நன்றாகப்பாடினேனா..நன்றாக நடித்தேனா.. இந்த வேசத்தில் நான் அழகாக இருந்தேனா.. என்று கேட்டுத்திரியும் நாயக மதிப்பு இப்போதுள்ள இளைஞர்களிடம் இல்லாமல் போய்விட்டதே..?

கலையையும் பண்பாட்டுக்கோலங்களையும் தூக்கி எறிந்து விட்டு உழைப்பு பணம் என்று வாழ்க்கையின் இனிமையைத் தொலைத்துவிட்டு நாயாகப் பேயாக அலைவதில் என்ன இருக்கப்போகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கையைக் கட்டப்பணம் தேவைதான்.. அதற்காக மானம் மரியாதை இழந்து அடுத்தவரைக் கொல்லும் போதைப் பொருட்களோடு இணைத்துக் கொள்வதெல்லாம் ஒரு வாழ்க்கையா.. ? ஆடிப்பாடி அக மகிழுகின்ற இளமைப் பருவத்தில் எந்த நாட்களிலும் பரபரத்துக்கொண்டு நிம்மதியற்று என்ன நடக்கும் ஏது நடக்கும் என்று அலைபாய்கின்ற தொழில்களைத்தானே இக்கால இளைஞர்கள் பணமீட்டும் தெரிவுகளாகக் கொள்கிறார்கள்.

தகாத இடங்களில் தகாத நேரங்களில் நம் இளைஞர்கள் நிற்கிறார்களென்ற கவலை ஒவ்வொருநாளும் நம்மைத் தொற்றிக்கொள்கிறதே.. அது வேண்டாம் என்று சிந்திக்கத் தலைப்படுவதின் நியாயங்கள் மற்றவர்களுக்குத் தெரிய வேண்டும்.

முற்காலங்களில் ஒரு கலைநிகழ்வை முன்னெடுப்பதென்றால் அதில் கலந்து கொள்ளும் கலைஞர்களுக்குப் பஞ்சமென்பதில்லை. ஆனால் இக்காலத்தில் வருந்தியழைத்தும் ஆட்கள் வருவதில்லை. அப்போது பக்க வாத்தியங்கள் இசைக்கருவிகளை மீட்டுவதற்கு பல இளைஞர்கள் தயாராய் இருந்தார்கள். இப்போது அப்படியில்லை. சங்கீதம் வாய்ப்பாட்டுத் தெரிந்தவர்கள் இல்லையே.. இசைக்கருவிகளை மீட்டக்கூடிய இசைக்கலைஞர்கள் இங்கு இல்லையே.. ஒப்புக்குச் சப்பாணியாக அரைகுறை கலைஞர்களை வைத்துத் தானே ஒரு கலை நிகழ்ச்சியை ஒப்பேற்ற வேண்டியிருக்கிறது. இசைக்கருவிகள் மீட்டப் பயிற்சி சாலைகளும் இங்கு இல்லை.. அப்படி ஒன்றிரண்டு தோன்றினாலும் அப் பயிலகங்களுக்குச் சென்று பயில விரும்பும் பிள்ளைகளும் இல்லையென்பது எத்தனை கவலையான விடயம்.

நாடகப்பிரதி யொன்றை சுயமாக ஆக்கும் திறனுள்ளவர்கள் இப்போது குறைந்து கொண்டே போகிறார்கள். நாடகத்தின் நெறியாள்கைக்கலையை முன்வந்து பயிலுவோர் எத்தனை பேர்..அவ்வாறு முன்வருவோரை ஊக்குவிக்கும் சக்தி இப்போது யார் கையில் இருக்கிறது..? நாடக ஒப்பனைக்கலை ஏன் இத்தனை மந்தமாக இருக்கிறது..? பழைய பெரிய நாடகங்களை நேசித்து அதனை மேடை ஏற்ற முன்வருவோர் இப்போது என்ன செய்து கொண்டிருக்கிறார்கள்..? இவ்வாறு எழுகின்ற கேள்விகளுக்கு பொருத்தமான பதிலிறுத்தல் யாரிடம் இருந்து வரவேண்டும் என்பதில் இருக்கும் பிரச்சினையையும் நாம் ஆராய வேண்டும்.

உள்நாட்டு யுத்தகாலப்பகுதியில் ஏற்பட்ட கலைச்செயற்பாடுகளுக்கான பின்னடைவுகள், இளையோரின் மனநிலை மாற்றங்கள், வாழ்வாதாரத்தை மட்டுமே மையப்படுத்தக்கூடிய சூழல் போன்றனவும் குறிப்பாக இந்தியாவிற்கான அகதி யோட்டத்தில் இங்கு கவனத்திலிருந்த நாடகப்பிரதிகள், ஓலைச்சுவடிகள் என்பன அழிவுக்குட்படுத்தப்பட்டிருந்தன. இக்காலத்தில் தொன்மை மரபுக்கலையின் காப்பாளர்களாக இருந்து வந்த சில அண்ணாவியார்கள் இயற்கையெய்தியதும் நடந்தன.

அவர்களின் நீண்டகால ஓய்வும் இடப் பெயர்வுகளும் அவர்களால் புதிய தலைமுறைக்கான நாடகப் பயிற்சிகளை வழங்க முடியாமல் போனதும் கூட புதிய தலை முறையினரின் மரபுக் கலைளை வளர்த்தெடுக்க வேண்டிய கடப்பாடுகளில் இருந்து அவர்கள் தவறியதையும் நாம் காரணங்களாகப் பார்க்கலாம்.

ஆனால் மீள் திரும்புகைக்கான காலம் நம் கையில் வந்து ஏறத்தாள பத்து வருடங்கள் ஆகியும் புதிய கலை கலாசாரத்துக்கான முன்னெடுப்புக்கள் பொய்த்துப் போய்விடுவது கவலைக் குரியதாகும். விடுதலைப்போராட்டத்தின் பின்னான நாட்களில் முன்பு கூறப்பட்ட கலை முன்னெடுப்புக்களுக்கான தடை ஓரளவு நீக்கப்பட்டன என நினைக்கும் போது இலத்திரனியல் யுகம் மரபுக் கலைக்கான முனைகளை சீர்மைப்படுத்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியாவண்ணம் இரசனைப் பொது வெளியில் புதிதாகத் தோன்றியிருப்பதை நாம் குறித்துரைக்க வேண்டியுள்ளது.

இளந்தலைமுறையினரிடையே காணப்படும் தொடு திரை அலைபேசியில் காணப்படும் அறிவியல் வசதிகளில் ஈடுபாடு கொண்டள்ளவர்களால் நாளும் பொழுதும் ஈடுபட முடிந்தளவு மரபுக்கலைகலாசார நடவடிக்கைகளில் உட்புகு முடியாதிருக் கின்றது.

சிறியோர்கள் மட்டுமல்ல பெரியோர்களும் கூட தொலைக்காட்சிகளுக்குள் தொலைந்து போயிருப்பதை நாம் என்னவென்று சொல்லுவது..? தொலைக்காட்சி நிறுவனங்கள் தமது அலைவரிசைகளில் தவழ விடும் நிகழ்ச்சிகளின் மூலம் சுயாதீன மக்கள் கலையில் இருந்து அவர்களைத் தூர அகற்றிவிட்டு விடுகின்ற ஒரு துயரம் நடைபெற்றுக்கொண்டுதான் இருக்கின்றது. ஒரு நாட்டின் மக்களை கலை கலாசாரமென்று உண்மையும் யதார்த்த முமான தன்மையில் வளர்த்தெடுக்க வேண்டிய தேவையை வேறு விதமாகக் கையாளும் போக்கினை வேண்டுமென்றே தன்னார்வ நிறுவனங்கள் என்று கூறிக்கொண்டு முன் கிளம்பும் அமைப்புக்கள் மூலமாக ஒரு மறைவான நிகழ்ச்சிநிரல் நடை முறையிலிருப்பதாகவும் கூட நாம் சிந்திக்க வேண்டியுள்ளது.

தன்னார்வ நிறுவனங்களால் முன்வைக்கப்படும் செயற்திட்டங்களில் மரபுக்கலைகளை வளர்த்தெடுக்க வேண்டும் என்பதான கருத்திட்டஙகள் எதுவுமில்லை என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். ஆயின் அவர்களால் இலட்சக்கணக்கில் செலவிட்டு நடாத்தப் படுகின்ற சமூகச்செயற்பாடுகள் பௌதீக முறையிலானவைகளாகவும் சில நீர்க்குமிழி போன்ற நிலையற்றவைகளாகவும் அமைந்துவிடுவதையும் நாம் நோக்க முடியும்.

பிந்திய அவதானிப்பில் நாட்டின் கலை கலாசாரம் என்று தென்பகுதிகளிலும் பெரும்பான்மையினரின் பிரதேசங்களிலும் அரசாங்கத்தினால் கலாசார மத்திய நிலையங்கள் அமைக்கப்பட்டு அங்கு அவர்களின் கலை கலாசார வளர்ச்சிக்கான ஒன்றிணைப்புக்களைவெகு சிறப்பாக நடாத்தி வருகின்றமையை நாம் காணலாம். அந்நிலையங்களுக்கு தேவையான இசைஉபகரணங்களையும் அவற்றைக் கற்பிக்கும் ஆசிரியர்களையும் அவர்களுக்கான ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளையும் வழங்குவதோடு முறையான தொடர் தேர்ச்சியான பயிற்சிகளையும் மாணவர்களுக்கு வழங்கி தென்னிலங்கை கலையினை வளர்தெடுத்து வருவது போல வடகிழக்கில் நிறுவனமயப் படுத்தப்பட்ட செயற்பாடுகளை அரசாங்கம் முன்னெடுத்து வருவதில்லை என்று குற்றச்சாட்டுதல்களும் எம்மிடையே உண்டு.

நாம் நாற்பது வருடங்களாக விடுதலைப் போராட்டத்தில் இருந்த போது தென்னிலங்கைக் கலைஞர்கள் தம்மை ஒரு சிறந்த கலைச் செயற்பாட்டுக்குள் உள் நிறுத்தி உலக கலைகளை தன்னகத்தில் அறிமுகம் செய்து கொண்டார்கள் என்பதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். இதனை தேசியக் கலைவிழாக்களில் அவர்களால் மேடையேற்றப்படும் கலை நிகழ்வுகளின் தரம், நேர்த்தி என்பவற்றில் இருந்து புரிந்து கொள்ளலாம்.

சிங்களத்தில் மனமே, சிங்கபாகு போன்ற கலாநிதி சரத் சந்திராவின் நாடகங்களை சிங்களத் தேசிய கலை வடிவமாக ஏற்படுத்த அவர்களால் முடிந்தமை போன்று தமிழ்த்தேசியக் கலைவடிவமாக நாம் இன்றுவரைநமக்குள் இருக்கும் எக்கலை வடிவத்தையும் அங்கீகரித்து செயற்படுத்த முடியாமல் இருப்பதற்கான காரணத்தையும் நாம் கவனிக்க வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்தேசியக்கலை வடிவமாகத் திகழக்கூடிய தகைமை தமிழர்களால் தொன்று தொட்டு ஆடப்பட்டு வருகின்ற நாட்டுக்கூத்துக்களுக்கே உண்டு என நாம் நெஞ்சு நிமிர்த்திச் சொல்ல முடியும் என்ற போதிலும் நாம் அக் கலைவடிவத்தை பாகுபடுத்திவடமோடி, தென்மோடி, வடபாங்கு, தென்பாங்கு, சிந்து நடை, மாதோட்டப்பாங்கு, வாசாப்பு என்று வெவ்வேறு வியாக்கியானங்களோடு பிரதேசமயப்படுத்திப் பார்ப்பதனால் அக்கலை ஒரு முகப்படுத்த முடியாத அளவு சிதறிப் போயிருப்பதை நாம் கருத்தில் கொள்ள வேண்டும்.

அவற்றை ஒருங்கிணைப்பதில் அண்ணாவிமார்கள் நாட்டுக்கூத்து ஆடும் கலைஞர்கள், அவை பற்றிக்கருத்து தெரிவிக்கும் பேராசிரியர்கள் என்போர் தமக்குள் ஒன்றுபடாமல் மனபேதம் கொண்டிருப்பது தவறானதாகும். ஈழத்தின் நாட்டுக்கூத்துக்களை ஒரேமுகப் பார்வையாக கணித்து அவற்றில் உள்ள முரண்பாடுகளை அகற்றி ஒரு சீர்மையான தமிழ்தேசிய அரங்கியல் கலை வடிவமாக ஏற்படுத்திஅதனை அளிக்கைசெய்யும் பொறுப்பை பல்கலைக்கழக மட்டத்தில் நிறுவனமயப்படுத்துவதே சிறந்ததாக அமையும். அவ்வாறான ஒரு முன்னகர்த்தல் மாணவர்களின் செயற்பாடாக பரிமளிப்பதுடன் அதனை பாடசாலை கற்றல் ஒழுங்கில் உள்வாங்கப்பட்டு சமூகக் கலையாக மாற்றம் பெறுவதும் எல்லோரும் அக்கலைபற்றிய நுண்ணறிதலை முன்வைக்க உதவுபவையாகவும் அமையும்.

கடந்த காலத்தின் இயலாமையையை அசைபோடாமல் அதனை மனதை விட்டு அகற்றிவிட்டு முடிந்தளவு மீளுருவாக்க செயற்பாடுகளில் உள்ளூரின் ஆற்றலாளர்களை முன்னழைத்து அவர்களின் சாதி, மத, அரசியல், பொருளாதார முரண்களை மனதிற் கொள்ளாது கலைக்கான ஒன்றுபடுத்தல் ஒன்றை நிறுவுதல் நலமாயிருக்கும்.

சமூகத்தில் மரபுக்கலையைக் கற்றவரும் நடாத்துபவரும் பெறுமதிமிக்கோராக மற்றவர்களால் கணிக்கப்பட வேண்டும். சாதாரணமாக இக்கலையினை நேசித்து அதனை ஆற்றுகை செய்பவர்களை அத் தேவைக்கு மட்டும் பயன்படுத்துவதுடன் அவர்களின் பொருளாதார நிலைப்பாட்டில் ஊக்குவிப்பு அற்றவர்களாகவும் காணப்படுவதை ஒரு சமூகத்துரோகமெனக் கருதி அக்கலைஞர்கள் மீதான வாஞ்சையை சமூக கௌரவமாக ஏற்படுத்தல் வேண்டும்.

வயோதிப நிலையை அடையும் மரபுக்கலை கலைஞர்களுக்கான தாபரிப்பினை அரசாங்கம் ஒரு சமூகக் கடமையாகப் பிரகனப்படுத்தல் வேண்டும். ஒரு மரபுக்கலைஞரின் மரணத்தின்பின் அவருக்கான மரியாதையை அரசாங்கமே முன்னின்று நடாத்துதல் வேண்டும். இதனை வலிந்து செயற்படுத்த வேண்டும்.

இவ்வாறான முன் மொழிவுகளை ஆராய்ந்து நமது மக்கள் கலையாக விளங்கும் மரபுக் கலைகளுக்கு மீண்டும் புது இரத்தம் பாய்ச்சுதலும், மரபுக் கலைஞர்களை பொதுநிகழ்வுகளுக்கு கௌரவமாக அழைத்து மரியாதை கொடுப்பது போன்ற நற் பண்புகளை வெளிப்படுத்துவதும், அவர்களுக்கு உரிய சமூக அந்தஸ்தை வழங்குவதும் மீண்டும் நம் கிராமங்களில் கலைப் பண்பாடு துளிர்க்க காரணமாக இருக்கும் என்பதை உறுதியாகக் கூற முடியும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்தரிப்புத்துறையிலுள்ள டோரிக் பங்களா

## ஒரு வரலாற்றுப் பார்வை

அருட்கலாநிதி அ. கி. றூபன் பெர்னாண்டோ,
இயக்குனர்,
புனித யோசேவ் வாஸ் இறையியல் கல்லூரி, மன்னார்.

மன்னார் தீவிற்கு தெற்கே சுமார் 40 கிலோமீட்டர் தொலைவில், 'அரிப்பு' என்றும் முத்து மீன்பிடித் தொழிலின் தளமாக இக்கிராமம் விளங்கியதால் 'முத்தரிப்புத்துறை' என்றும் அழைக்கப்படுகின்ற இக்கடலோரக் கிராமத்தின் கிழக்குப் பக்கமாக அமைக்கப்பட்டுள்ள 'டோரிக் பங்களா'(Doric Bungalow) இலங்கையின் முதல் பிரித்தானிய ஆளுநராக விளங்கிய கௌரவ பிரடெரிக் நோர்த் அவர்களின் ஓய்வு இல்லமாக இருந்தது. ஆளுநரின் இந்த ஓய்வு இல்லம் 'தி டோரிக்' என்றும் அழைக்கப்படுகிறது.[1]

கி. பி. 1798 இல், கௌரவ பிரடெரிக் நோர்த் இலங்கைக்கு வந்தார். ஆங்கிலேயர்களால் முத்து மீன்பிடி வணிகம் கையகப்படுத்தப்பட்ட அடுத்த ஆண்டுகளில் அவர் அரிப்புக்கு சில முறை விஜயம் செய்தார். இவ்விடம் முத்து மீன்பிடியின் மையமாக வளர்ந்தது. ஆளுநர் அந்த இடத்திற்கு அடிக்கடி சென்று கொண்டிருந்த போது, அங்கே ஒரு பங்களா கட்டும் எண்ணம் தோன்றியிருக்கலாம். பங்குனி 22, கி. பி. 1802 இன் 'இலங்கை அரசாங்க வர்த்தமானி' யின் படி, அதே ஆண்டு பங்குனி 18 அன்று ஆளுநர் அவர்களே டோரிக் கட்டிடத்திற்கு அடிக்கல் நாட்டினார். அதிலிருந்து கட்டுமானத்தை முழுமையாக முடிக்க கிட்டத்தட்ட இரண்டு ஆண்டுகள் ஆனது. அதிகாரப்பூர்வ பதிவுகளின்படி கி. பி. 1804 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் (பெப்ரவரி 11) கிட்டத்தட்ட இந்தக் ஓய்வு இல்லம் தயாராக இருந்ததாகக் கூறப்படுகின்றது.[2]

கி. பி. 1804 ஆம் ஆண்டு முத்து மீன்பிடியின் போது ஆளுநர் தனது புதிய கோடைகால இல்லத்தில் முதல் முறையாக தங்க முடிந்தது. ஏனெனில், அவர் மாசி தொடக்கத்தில் இருந்து சித்திரை தொடக்கம் வரை இரண்டு மாதங்கள் அரிப்புவில் இருந்தார். அந்த நேரத்தில், சிலாவத்துறைக்கு தெற்கே உள்ள ஒரு சிறிய கிராமமான கொண்டச்சிப் பகுதியில் காணப்பட்ட அரசாங்க முந்திரி தோட்டங்களினால் கிடைக்கப் பெற்ற முந்திரி வர்த்தகத்தையும் கண்காணிக்கவும் இந்த டோரிக் பங்களா தளமாக விளங்கிற்று.

[1] G. Ariyaratna, "The Doric Bungalow in Arippu East", 15 March 2013. Retrieved from *'Ceylon Today'*.

[2] D. Wisumperuma, "The Doric at Arippu: Its Date and Identification", 2005. Retrieved from *'Journal of the Royal Asiatic Society of Sri Lanka'*.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### டோரிக் பங்களாவின் கட்டுமானம் மற்றும் புதிரான வடிவமைப்பின் நோக்கம்

கி.பி. 1801 தொடக்கம் கி.பி. 1804 க்கு இடையில் 19 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கட்டப்பட்ட ஒரு அரண்மனையை ஒத்த வடிவம் கொண்ட இந்த ஓய்வு இல்லம், இலங்கையின் முத்துக் குளித்தல் மீன்பிடித் துறையின் மறுமலர்ச்சிக்கு உதவும் என்ற வகையிலே அப்போதைய ஆளுநரான கௌரவ பிரடெரிக் நோர்த் அவர்களால் திட்டமிடப்பட்டு கட்டப்பட்டது.[3] இந்தக் கட்டிடம் இரண்டு மாடிகளைக் கொண்டதாக அமைக்கப்பட்டது. அத்தோடு, இந்த இரண்டு மாடிகளும் பண்டைய கிரேக்க டோரிக் வரிசையின் உருவத்தில் நெடுவரிசைகள் கொண்டதாக வடிவமைக்கப்பட்டுள்ளதால் இந்த வீட்டை "தி டோரிக்" என்றும் அழைக்கத் தொடங்கினார்கள். இரண்டு மாடி கட்டிடமும் செங்கற்களால் கட்டப்பட்டது. இந்தக் கட்டிடத்தின் இன்னுமொரு சிறப்பு என்னவெனில் கட்டிடத்தின் முகப்பில் சுண்ணாம்பு பூச்சு கொண்டு அலங்கரிக்கப்பட்டது. மேலும், வெளிப்புற சுவர்கள் எரிந்த சிப்பி ஓடுகளிலிருந்து கிடைத்த சுண்ணாம்பு மூலம் அலங்கரிக்கப்பட்டு பின்னர் அது பளிங்கு போன்ற தோற்றத்தை அளித்தது.

### டோரிக் பங்களாவின் சிறப்பு அம்சங்கள்

கட்டிடத்தின் தரைதளத்தில் நான்கு சிறிய படுக்கையறைகள் இருந்தன. ஒவ்வொரு படுக்கையறையும் அதன் ஒவ்வொரு மூலையில் காணப்பட்டன. ஒரு பெரிய படிக்கட்டு மையமாக அமைக்கப்பட்டு, இந்த வீட்டினுள்ளே ஓர் அறையிலிருந்து இன்னுமோர் அறைக்கு செல்லவும், கீழ் மற்றும் மேல் தளங்களை இணைக்கவும் ஏதுவாக இருந்தது. மேல் தளத்தில் இரண்டு அறைகள் இருந்தன. அதில் ஒன்று குறைந்தது இருபது பேர் அமரக்கூடிய சாப்பாட்டு அறையாகப் (Dining Hall) பயன்படுத்தப்பட்டது. மற்றொன்று ஆளுநரின் படுக்கை அறையாக நியமிக்கப்பட்டது. ஆளுநரின் வசிப்பிடமாக பயன்படுத்தப்பட்ட பின்னர், இக்கட்டிடம் மற்ற அதிகாரிகள் மற்றும் அரசாங்க முகவர்களின் பயன்பாட்டிற்காக, குறிப்பாக முத்து மீன்பிடி மேற்பார்வைக்காக ஒப்படைக்கப்பட்டது.[4]

கி.பி. 1797 மற்றும் கி. பி. 1804 க்கு இடையில் கொழும்பில் உள்ள பிரித்தானிய இராணுவபடைத் தளத்தில் இணைக்கப்பட்டு பணியாற்றிவந்த ஒரு மதகுருவான அருட்திரு ஜேம்ஸ் கார்டினர் (கி. பி. 1775 - கி. பி. 1836) கி. பி. 1807 இல் எழுதிய 'ஏ டிஸ்க்ரிப்ஷன் ஆ.'.ப் சிலோன்' (A Description of Ceylon) என்ற வரலாற்று நூலில் ஆளுநரால் திட்டமிடப்பட்ட இந்த ஓய்வு இல்லம் பற்றிய விளக்கமான விவரத்தைக் குறிப்பிடுகின்றார்.[5]

*'இலங்கையின் மேற்குக் கடற்கரையில் உள்ள அரிபோவில் (Aripo) உள்ள ஆளுநரின் மாளிகை, முத்து மீன்பிடித்த இடத்திலிருந்து வடக்கே இரண்டு மைல் தொலைவில் அமைந்துள்ளது. இது சந்தேகத்திற்கு இடமின்றி தீவின் மிக*

---

[3] N. Chandrasena, "An Ancient Village, a ruin by the sea and Stories of Pearls from Taprobane", 4 March 2012. Retrieved from '*The Sunday Times*'.

[4] Royal Asiatic Society of Great Britain and Ireland, "*Journal of the Ceylon Branch of the Royal Asiatic Society*", (Colombo: Apothecaries Company, 1955), 4-7.

[5] J. Cordiner, "*A Description of Ceylon*", Volume 1, (Longman Publication, 1807), 37.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகான கட்டிடமாகும். மேலும், இந்தக் கட்டிடம் மாத்திரமே கட்டிடக்கலைக்கு அமைவாக திட்டமிடப்பட்ட ஒரேயொரு கட்டிடமாகும். வீடு அற்புதமான தோற்றத்தில் இருந்தாலும், அது சிறிய பரிமாணங்களைக் கொண்டது. உட்புற இடவசதிகள் வெளிப்புறக் கட்டமைப்பின் ஆடம்பரம் மற்றும் நேர்த்தியுடன் முற்றிலும் ஒத்துப்போவதில்லை. தரை தளத்தில் நான்கு சிறிய படுக்கையறைகள் உள்ளன. ஒவ்வொரு மூலையிலும் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. விசாலமான படிக்கட்டுகள் அமைந்த பாதை மையத்தை இணைக்கிறது. மேலும், இரண்டுக்கு நான்கு என்ற நல்ல போதுமான விகிதாசார அளவைக் கொண்ட அறைகள் கட்டிடத்தின் கிழக்கிலிருந்து மேற்காக நீடிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பக்கமும் அழகான தூண்களால் அலங்கரிக்கப் பட்டுள்ளன. இதில் ஒன்று சாப்பாட்டு அறையாகப் பயன்படுத்தப்படுகிறது. இந்த அறையிலே இருபது பேர் கொண்ட குழுவை உள்ளடக்கலாம். மற்றொன்று ஆளுநரின் படுக்கையறை. அதன் ஒரு முனையில் ஒரு முறுக்கு படிக்கட்டு துண்டிக்கப்பட்டு, மொட்டை மாடிக்கு மேலே செல்கிறது."

மேலும், அவர் வரைந்த வரைபடத்துடன் கட்டுமானம் பற்றிய விரிவான விவரத்தையும் வழங்குகிறார். முன் மற்றும் பின்புற போர்டிகோக்களில் டோரிக் நெடுவரிசைகள் உயர்ந்து வருவதை இவ்வரைபடம் காட்டுகிறது.

அருட்திரு ஜேம்ஸ் கார்டினர் குறிப்பிடும் இக்கட்டிடத்தின் தளவமைப்புத் திட்டத்தினை இப்போதும் காணலாம். அவரது எழுத்துக்களின் படி, தரை தளத்தில் நான்கு சிறிய படுக்கையறைகள் மற்றும் மையத்தில் மேல்நோக்கிய படிக்கட்டுகள் இருந்தன.[6] விகிதாச்சார அளவில் போதுமான இரண்டு அறைகள் மேல் தளத்தில் இருந்தன. மேல் தளம் இல்லையென்றாலும், தரைத்தளத் திட்டம் தற்போதுள்ள இடிபாடுகளின் மத்தியிலும் அவர் குறிப்பிட்ட திட்டத்தைப் போலவே உள்ளது. கட்டிடத்தின் மேல் தளத்தில் ஒரு மாடி கூரை இருந்துள்ளது. அங்கிருந்து முழு பகுதியையும் பார்க்க முடிந்துள்ளது. எனவே, கடலில் இடம்பெற்ற மீன்பிடி நடவடிக்கைகளை பார்க்க இது ஒரு சிறந்த இடமாக விளங்கியிருக்கிறது. தற்போதும், தற்போதுள்ள இடிபாடுகளின் நிலையிலும், உச்சியில் இருந்து, இக்கட்டிடத்தைச் சுற்றியுள்ள அனைத்து பகுதிகளையும் கவனிக்க முடியும்.

### டோரிக் பங்களா குறித்த தவறான புரிதல்

20 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் இருந்து இந்த இடத்தை அண்மித்துள்ள மக்கள் மத்தியிலும், ஏன் சில பத்திரிகையாளர்கள் மற்றும் எழுத்தாளர்களாலும் 'டோரிக் பங்களா' ஒரு 'டச்சுக் கோட்டை' என்று தவறாக விளக்கம் கொடுக்கப்பட்டு வருகின்றது. இந்த தவறான அடையாளம் சில காரணங்களால் என்பது தெரிகின்றது. அதாவது, அரிப்புவில் டச்சுக் கோட்டை இருப்பதைப் பற்றிப் பலர் அறிந்திருந்தாலும், அவர்களில் பெரும்பாலானோர் அப்பகுதியில் பிரித்தானிய ஆளுநரின் மாளிகை இருப்பதை அறியாதவர்களாகவே காணப்படுகின்றனர். இன்றும் பலர் இந்தக் கட்டிடம் 'அல்லி' என்ற உள்ளூர் புராண

---

[6] E. Littell, "Museum of Foreign Literature, Science and Art: Journal of an Excursion in Ceylon", 1836, p. 28. Retrieved from *'United States Journal'*.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராணியின் அரண்மனை 'அல்லி ராணி கோட்டே' என்று அழைக்கின்றனர். ஆனால், ராணியின் இருப்பு எந்த வரலாற்று அல்லது தொல்பொருள் ஆதாரங்களாலும் இதுவரையிலும் நிரூபிக்கப்படவில்லை. இன்னும் சிலர் 'டோரிக் பங்களா' ஒரு 'போர்த்துகேய மாளிகை' யாகவும் 'இளவரசி டோனா கத்தரீனா பாதுகாக்கப்பட்ட ராணியின் அரண்மனை' யாகவும் குறிப்பிடுகின்றனர்.[7] ஆனால் இந்தக் கட்டிடம் குறித்த இவ்வாறான புரிதல்கள் வரலாற்று சான்றாதாரங்களோடு பார்க்கின்ற போது தவறானவை என்பதை விளங்கிக்கொள்ள வேண்டும்.

### டோரிக் டவர் (அரிப்புக் கோபுரம்)

டோரிக் பங்களாவிலிருந்து சில நூறு மீட்டர் தொலைவில் உள்ள அரிப்பு கோபுரம் (அரிப்பு டவர், டோரிக் டவர்) எந்த விதமான உபயோகமும் இல்லாத ஒரு விசித்திரமான சீமெந்து கோபுரமாக இன்னும் காட்சியளிக்கின்றது. இந்த சதுர கோபுரத்தின் மேற்பகுதி ஒரு பிரமிடு வடிவில் சுருங்கி நிற்கிறது. காணக்கூடிய அறிகுறிகள் இருந்தபோதிலும், இந்த கோபுரம் ஒரு வகையான ஒளி மாளிகை என்று நம்பப்படுகிறது. அதன் உச்சியில் எரியும் நெருப்பு முத்து பாத்திரங்களை முத்து மீன்பிடியின் போது தரையிறக்க வழிகாட்டியதாய் நம்பப்படுகின்றது.

### டோரிக் பங்களாவின் தற்போதைய நிலை

இந்த கட்டிடத்தின் மீது இயற்கையின் அழிவுகளை காலம் காட்டியுள்ளது. கடல் காற்று, கடுமையான சூழ்நிலைகள், மண்ணரிப்பு, முத்து மீன்வளர்ப்பு முடிவுக்கு வந்தபோது இக்கட்டிடத்தை தொடர்ந்து பராமரிக்காமை, பழமையினை பேணும் பண்பற்ற அரசு தரப்பினரின் அசமந்த போக்கிலான அலட்சியம் போன்றவற்றால், கி. பி. 1900 களின் முற்பகுதியில், மேல் தளம் இல்லாமல் போய்விட்டது.[8] தொடர்ந்து, கி. பி. 1980 களில், கடலோரப் பகுதிக்கு பின்புற போர்டிகோ கடல் அரிப்புக்கு இரையாக்கப்பட்டது. மீதமுள்ள சுவர்கள் தொடர்ந்து காற்றினால் அரிக்கப்பட்டு மழையால் கழுவப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அண்மைய காலங்களில் இக்கட்டிடத்தின் வடக்குப் பகுதியும் பலத்த சேதங்களுக்கு உள்ளாகி இடிந்து விழுந்துள்ளதை அவதானிக்கலாம். இவ்வாறாக இடிபாடுகளின் மத்தியிலே, இக்கட்டிடத்தின் எதிர்காலம் இன்று பெரிய கேள்விக்குறியாகவே காணப்படுகின்றது. மோசமான வானிலை மற்றும் பராமரிப்பு இல்லாததால், அது தற்போது பெரும்பாலும் இடிந்து கிடக்கிறது. பாதுகாக்கப்பட்ட தொல்பொருள் நினைவுச்சின்னமாக அறிவிக்கப்பட்ட இந்த டோரிக் பங்களாவை புனரமைக்க பலமுறை முன்மொழியப்பட்ட போதிலும், எந்தப் பணியும் இதுவரை காத்திரமாக மேற்கொள்ளப்படவில்லை.



பண்டைய தோற்றம்

[7] D. Wisumperuma, "The Doric at Arippu: Its Date and Identification", 2005. Retrieved from *'Journal of the Royal Asiatic Society of Sri Lanka'*.

[8] D. Wisumperuma, "The Doric at Arippu: Its Date and Identification", 2005. Retrieved from *'Journal of the Royal Asiatic Society of Sri Lanka'*.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்துக்குளிப்பால் உலகைக் கவர்ந்த சிலாவத்துறை



எஸ். எம். அன்சார்
சிலாவத்துறை

"முத்துக்குளிக்கும் துறை" எனும் பொருள் தரும் சிலாவத்துறை, இற்றைக்கு இரண்டாயிரம் வருடங்களுக்கு மேல் பழைமை வாய்ந்த சரித்திரப் பிரசித்தி பெற்ற வரலாறுகள் பல கொண்ட ஊராகும். இலங்கையின் நுழைவாயிலாக மட்டுமல்லாமல் பழைய உலக நாகரீகங்களைத் தன்பால் ஈர்த்தெடுக்கக கூடிய வளங்கள் கொண்ட இடமாகவும் வரலாற்றில் மிளிர்ந்திருக்கின்றது. இவ்வரலாற்றுச் சிறப்புக்களில் முதன்மை வகிக்கக்கூடியது முத்துக்குளிப்பாகும். முற்காலத்தில் முத்துச்சலாபம் என அழைக்கப்பட்டு பின் சிலாபத்துறை என உச்சரிக்கப்பட்டு காலக்கிரமத்தில் சிலாவத்துறை என அது மருவியது. ஆயினும் மீன்பிடித் தொழிலுக்காக சிலாவத்துறை வரும் தென்பகுதி சிங்கள மீனவர்கள் முத்துச்சலாபம் என்றே இன்றும் அழைக்கின்றனர்.

முத்துக்குளிப்பு ஏறக்குறைய 2000 தொடக்கம் 3000 ஆண்டுகள் பழைமையானதொன்று என்றும், அது உலகிலேயே மிகப் பழைமையான கைத்தொழில் நடவடிக்கையாகக் காணப்பட்டதென்றும் பழைய வரலாற்றறிஞரான Van(1888) என்பவர் குறிப்பிடுகின்றார். கிறிஸ்து காலத்திலிருந்து 1887 ஆம் ஆண்டு வரை முத்துக் குளிப்பதற்கு சர்வதேச முக்கியத்துவம் கொண்ட பிரதேசமாக சிலாவத்துறை காணப்பட்டதாக வுறலயெஅ(1902) என்பவர் கூறுகின்றார்.

எகிப்திய எழிலரசி கிளியோபேட்ராவின் மணிமகுடத்தை அலங்கரித்த முத்து சிலாவத்துறை முத்து. ரோமாபுரிப் பேரரசன் கயஸ் குளோடியஸின் ராணி உலோலா என்பவள், 3 இலட்சம் தங்க நாணயம் மதிப்புள்ள நம் முத்துக்களை வைத் திருந்ததாக வரலாறு கூறிக் கொண்டிருக் கிறது. கிரேக்கர், உரோமர், அராபியர், பாரசீகர், ஐரோப்பியர், இந்தியர், சீனர் போன்றோர் சிலாவத்துறை முத்துக் குளிப்புடன் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டிருந்தனர். உலகின் ஏனைய முத்துக்குளிப்பைவிட இலங்கையின் சிலாவத்துறை முத்துக்குளிப்பே மிகப் பழைமையானது எனக் குறிப்பிடும் ஏயெ என்பவர், ஆதிகால முத்துக்குளிப்புப் பற்றிய விபரங்கள் கிடைக்கப்பெறவில்லை எனவும் 1889 ஆம் ஆண்டு, சிலாவத் துறையில் நடைபெற்ற முத்துக்குளிப்புப் பற்றி அவர் குறிப்பிடுகையில், பெப்ரவரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாத ஆரம்பத்தில் அரச அதிகாரிகள் முத்துக் குளிப்பவர்களுக்கான அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பர் எனவும் மார்ச் மாத ஆரம்பத்தில் முத்துக்குளிப்பு ஆரம்பமாகும் என்றும் கூறியுள்ளார்.

'... until 1889 the fishery headquarters were located in Silavatturai "The Port of The Pearl Fishery" in normal times a lonely place on the coast south of Mannar, But, in January of the years that a fishery had been proclaimed, a temporary town constructed of timber and Cadjan began to arise miraculously from the wind swept sands. Moreover, the official buildings, which included a court, police station, customs post, prison and hospital, were built along established thorough fares known by such names as Main Street, Tank Street and New Street...?
(The Sunday Times Plus - 18th May 1997)

முத்துக்குளிப்பு இடைநிறுத்தப்பட்ட 1960ஆம் ஆண்டுக்கு சில வருடங்களுக்கு முன், சிலாவத்துறை முத்துத் தொட்டியில் பணிபுரிந்த மன்னார் மஹ்ரூபு என்பவர், 1990ஆம் ஆண்டு தென்னிந்தியாவின் கீழக்கரையில் நடைபெற்ற அனைத்துலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய 5ஆம் மாநாட்டு மலரில் வரைந்த கட்டுரையில் "சிலாபத்துறையே பெரும் வணிகர்கள் கூடும் முத்துச்சந்தை, அங்கேதான் வள்ளல் ஹபீபு மரைக்காயரின் முத்து சேகரிக்கும் தொட்டியும் அலுவலகமும் இருந்தது.

முத்துக் குளித்துக்கொண்டு வரப்படும் சிப்பிகள் தொகையில் அரசுக்குக் கொடுக்க வேண்டியவை கொடுத்து மற்றவை அங்கேயே விற்கப்படும். முத்து வணிகத்திற்காக பல பகுதியிலிருந்தும் வந்த சிறிய வணிகர்கள், சிப்பிகளை வாங்கி அங்கேயே அதை சோதித்து கிடைக்கும் முத்துக்களை எடுத்து வியாபாரிகள் கைமாறிக்கொள்வார்கள்" எனத் தொடர்ந்து எழுதியுள்ளார்.

முத்துக்குளிப்புத் தொழிலில் ஈடுபடுவோரின் மருத்துவ தேவைகளை நிறைவு செய்வதற்காக பிரித்தானிய காலனித்துவ அரசு, சிலாவத்துறையில் முத்துக்குளிப்பு நடைபெற்ற இடத்தில் வைத்தியமனை ஒன்றை நிறுவியது. வைத்திய தேவைகளைப் பூர்த்தி செய்து வந்த நிலையில் 1918ஆம் ஆண்டு ஏற்பட்ட கொள்ளை நோயை அடுத்து, அவ்வைத்தியமனை தீயிட்டுக் கொளுத்தப்பட்டதாகவும் பின் தற்போதைய இடத்தில் வைத்தியமனை கட்டப்பட்டதா கவும் அறியமுடிகிறது. மன்னார் மாவட்டத்தில் இரண்டாவது தொன்மையான அம்மருத்துவமனை அபிவிருத்தியடையாமல் இருப்பது கவலை தரும் விடயமாகும்.

முத்து வணிகத்தில் ஈடுபடும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வணிகர்களின் நன்மை கருதி பிரித்தானிய காலனித்துவ அரசு, சிலாவத்துறையில் 1921ஆம் ஆண்டு உப தபாலகம் ஒன்றை நிறுவியது. வட மாகாணத்தின் முதலாவது உப தபாலகம் மாத்திரமின்றி, முழு இலங்கைக்குமான முதலாவது உப தபாலகமாக அது விளங்கியது. பின் மூதூர், ஆனைமடு, திவுலப்பிட்டிய, அக்மீமன, கிரியெல்ல போன்ற இடங்களிலும் ஆரம்பித்து வைக்கப்பட்டன. அன்று உப தபாலகங்களாக ஆரம்பிக்கப்பட்டவை, இன்று தபாலகங்களாகத் தரம் உயர்ந்திருப்பதோடு பாரிய கட்டிடங்களிலே தனது சேவையைத் தொடர்கின்றன. ஆயினும் சிலாவத்துறைத் தபாலகம் எதுவித அடிப்படை வசதிகளுமற்ற நிலையில் சேவையைத் தொடர்வது துரதிஷ்டவசமானதாகும்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆனதன் பின் வட மாகாணத்திற்கான முதல் விஜயமாக சிலாவத்துறைக்கு 1982.10.02 அன்று வந்த துசு ஜயவர்தனவிடம் சிலாவத்துறை மக்கள் வைத்த ஒரே ஒரு கோரிக்கை, முத்துக்குளிப்புக் கைத்தொழில் இடைநிறுத்தப்பட்டதன் பின் தளர்ச்சியுற்றுக் காணப்படும் சிலாவத்துறை வளர்ச்சி யடைய முத்துக்குளிப்பு மீள ஆரம்பிக் கப்பட வேண்டும் என்பதாகும். இதன் வரலாறு தனக்குத் தெரியுமென கூறிய அவர், ஜப்பானிய அரசின் உதவியுடன் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு மீண்டும் தொடங்கப்பட்டதாயினும் முத்துச்சிப்பிகள் வளரும் பார்கள் அழிவுற்று இருந்ததால் அம்முயற்சி கைகூடவில்லை.

30.04.2009 ஆம் ஆண்டு இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்தும் "வடக்கின் வசந்தம்" என்னும் திட்டத்தை முதன்முதலில் சிலாவத்துறை மண்ணி லிருந்து ஆரம்பித்து வைத்து உரை யாற்றிய செயலணித்தலைவர் பசில் ராஜபக்ஷ," வடக்கையும் தெற்கையும் இணைக்கும் பிரதான நகராக எதிர்காலத்தில் சிலாவத்துறைதான் கழப்போகிறது" என்றார். அதற்கு கட்டியம் கூறுமாற்போல் அரிப்பு, மன்னார், சங்குப்பிட்டி போன்ற பாலங்கள் போடப்பட்டு புத்தளம் யாழ்ப்பாணம் கரையோர பாதையாக அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்ட போதும் அது முற்றுப் பெறாமல் உள்ளது.

சிலாவத்துறை மக்களின் கனவு எப்போது நனவாகும் என்ற ஏக்கத்தோடு பல்லாண்டு காலம் கலகலப்பாகவும், செழிப்பாகவும் பல துறைகளில் முன்னேற்றம் கண்டிருந்த சிலாவத்துறை, முகாரி ராகம் பாடியபடி வளர்ச்சியை எதிர்ப்பார்த்த வண்ணம் உறங்கிக் கொண்டிருக்கின்றது.

# கட்டளை...



சர்மிலா வினோதினி

*மரணநெடி மறக்காத இரவொன்றில்*
*மீண்டும் நீ தோன்றினாய்*
*நிலம், நீர், நெருப்பு, ஆகாயம், காற்று ஆகிய*
*ஐம்பெரும் பூதங்களாலும்*
*அணைக்க முடியாத பேராத்மாவாக பரந்து*
*விரிந்தாய்*
*நீண்டபெரும் உறங்குநிலை எரிமலையொன்றின்*
*வெடிப்பினால்*
*பிறந்த கரும்புகை மூட்டமென மனமெங்கும்*
*வியாபித்தாய்,*
*வெறிகொண்ட எரிமலையின் பெருஞ்சத்தத்தினால்*
*கலைக்கப்பட்டு*
*முற்றத்து வாகையில் வந்தமர்ந்த காக்கையென*
*நெஞ்சுக்குள் கரைந்து மீள் அதிர்வொன்றைப்*
*பிறப்பித்தாய்,*
*மனதின் மடியூறிப் பெருக்கெடுக்கும் நினைவுகளை*
*இரவின் சாலையெங்கும்*
*பவனி செல்லப்பணிக்கிறாய்,*
*வண்டலின் அடியில் சேமிக்கப்பட்டிருக்கும் நீரென*
*அடித்தும் இடித்தும்*
*பத்திரப்படுத்தியிருந்த நேசத்தை*
*மீண்டும் கிளறி மீள் இரத்தம் பாய்ச்சுகிறாய்,*
*இரத்தமும் சதையுமாக முடிந்துபோன உன்வாழ்வின்*
*முகத்தினைக்காட்டி மூர்க்கம் கொள்கிறாய்*
*ஓய்வற்ற காலங்களைக் கரங்களில் தந்தென்*
*பேனாவை நிமிர்த்துகிறாய்,*
*நம்பிக்கையீனங்களால் நசிந்துபோன நாட்களையும்*
*பெண்ணடிமை வாதங்களால் கிழிந்துபோன*
*கனவுகளையும்*
*அள்ளியெடுத்து மலையெனக் குவித்து பின் தீயிட்டு*
*எரிக்கிறாய்,*
*எரிந்த சாம்பலை உடலில் பூசி அகோரியாகி*
*அதிர்ந்து ஆரவாரமாய் கத்துகிறாய்*
*மங்கையிவள் என்றானபின் என்செய்யமுடியும் என்ற*
*பொய்மையினை உடைத்தெறிந்துன்*
*பேனாவை நிமிர்த்தி*
*அடுத்ததொரு சந்ததியின் அடிமைத்தடம்*
*அழியும்வரை*
*இம்மரண நெடி மறக்காமல்*
*ஓய்வற்று இயங்கென*
*ஆர்ப்பரித்து அடங்குகிறாய்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழமையும் செழுமையும் வாய்ந்த தொன்மைமிகு மன்னார் பரப்புக்கடந்தான் கர்த்தர் ஆலயம்



அருட்திரு. வே. றஞ்சன் சேவியர்
ஆயர் இல்லம், மன்னார்.

**1. முன்னுரை**

நெய்தல், மருதம், முல்லை நில அழகும் வளமும் நிறைந்த மாவட்டம் மன்னார் கடலால் சூழப்பட்ட மன்னார் தீவும் காடும் கழனியும் நிறைந்த மாவட்டமாகும். பெருநிலப்பரப்பும் எம் மாவட்டத்தின் பௌதீக சூழலை மேலும் அணி செய்கின்றன. கலைகளும் கல்வியும், இறை நம்பிக்கையும் இனிய பண்புகளும், பாரம்பரியத்தோடு கூடிய பண்பாடுகளும் எம் மாவட்டத்தில் விரவிக் கிடக்கின்றன. பல் சமயத்தவர்களும் மறையால் வேறுபட்டு பண்பு நலன்களால் ஒன்றுபட்டு வாழும் அழகு பன்மையில் ஒருமையை கிறிஸ்தவர்கள், இந்துக்கள், இலக்கணப்படுத்தி காட்டுகின்றது. பாதைகளில் ஒரே இலக்கை நோக்கிய இஸ்லாமியர்கள் பயணத்தினை என வெவ்வேறு மக்கள் மேற்கொள்ளும் அழகோ அழகு.

பௌதீக வளங்கள் மட்டுமின்றி கடவுள் மையப்படுத்திய ஓர் ஆன்மீக வாழ்க்கை முறையும் எம் மண்ணின் மற்றொரு முகவரி ஆகும். ஆங்காங்கே அமையப பெற்றுள்ள ஆன்மீக ஸ்தலங்களும் அக அமைதியையும் ஆற்றுப்படுத்தலையும் கொடுக்கக்கூடிய ஆலயங்களும் மக்களின் அடி மனதில் ஆழமாக வேரூன்றியுள்ள விசுவாச வாழ்விற்கு மேலும் வலுவூட்டு கின்றன. மன்னார் மண்ணின் பொக்கிஷங்களுள் அமைதியின் இல்லிடமான, வலிகள் சுமந்த எம் தேசத்தின் இன, மத, மொழி வேறுபாடு கடந்து அனைவரையும் ஈர்க்கின்ற உன்னதமான புண்ணிய ஸ்தலமாகிய மருதமடு திருத்தலத்தை நாம் மறந்துவிட முடியாது. மேலைத்தேய வாழ்க்கை முறையை போலன்றி எமது கீழைத்தேய வாழ்க்கை முறையானது அடிப்படையில் ஆழமான ஆன்மீக மரபு கொண்டது. அவ்வகையில் ஆன்மீகத்திலிருந்து அறுந்துபோன மன்னார் மக்களினுடைய வாழ்வை எண்ணிப்பார்க்க முடியாது. ஆன்மீக அடையாளம் கொண்ட கிறிஸ்தவர்கள் வாழும் மறைசாட்சியரின் மன்னார் அதிக விளைநிலமான மறைவட்டத்தில் மற்றுமொரு வரலாற்று சிறப்பும் தொன்மையும் வாய்ந்த ஆலயமே பரப்புக்கடந்தான் கர்த்தர் ஆலயமாகும். மன்னார் மாவட்டத்தின் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட, மன்னார் மறைமாவட்டத்தின் மடுக்கோட்டத்திலுள்ள ஆட்காட்டிவெளி பங்கின் ஓர் அருமையான திருத்தலம் இதுவாகும். இத்திருத்தலம் ஆண்டுதோறும் பல பக்கதர்களின் ஆன்மீக தாகத்ததை தணிப்பதோடு அகவிடுதலையும், அமைதியும் கொடுக்கும் ஸ்தலமாகவும் திகழ்கின்றது.

**2. மன்னாரும் கிறிஸ்தவமும்**

இலங்கை தேசத்தில் மன்னார் மண்ணிற்கென பல சிறப்புக்கள் உண்டு.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அவ்வாறான பல சிறப்புக்களில் ஏனைய மாவட்டங்களிலும் பார்க்க ஒரு மாவட்டத்தில் அதிகம் கிறிஸ்தவர்கள் வாழும் ஓர் மாவட்டம் மன்னார் என்பது பெருமைக்குரியது. மன்னாரின் முன்னோர்களின் விசுவாச வேட்கையால் தூண்டப்பெற்று இயேசு வழி வாழ பல மனிதர்கள் கிறிஸ்தவ நெறியை எமது மண்ணில் தழுவினார்கள். கிறிஸ்தவ விசுவாசத்திற்காக 600க்கும் அதிகமான கிறிஸ்தவர்கள் மறைசாட்சிய மரணத்தை தழுவிய சரித்திரம் இன்னும் பலரை கிறிஸ்துவின்பால் ஈர்த்தது.

இன்றும் இலங்கையில் மட்டுமின்றி சர்வதேச தளத்திலும் "மன்னார் மறைசாட்சிகள்" எனும் பெயரினால் மன்னாரை அடையாளப் படுத்துகின்ற ஓர் விசுவாச வீரச் செயலை எம் முன்னோர்கள் புரிந்துள்ளார்கள் என்பது மறுக்கப்பட முடியாத உண்மையாகும். கிறிஸ்தவம் என்பது மதம் எனும் குறுகிய பார்வையை கடந்து ஓர் வாழ்க்கை நெறியாக பலரால் உணரப்பட்டமையும் மன்னாரில் கிறிஸ்தவம் துளிர்க்க ஏதுவாகஅமைந்தது.

மன்னாரில் கிறிஸ்தவத்தின் அடையாளங்கள் எண்ணிலடங்காதவை. கிறிஸ்தவர்களால் மட்டுமன்றி ஏனைய சகோதர சகோதரிகளாலும் பெயர் குறிப்பிட்டு பேசப்படும் அளவிற்கு கிறிஸ்தவ தலைவர்கள் சாட்சிய வாழ்வு வாழ்ந்துள்ளார்கள். குறிப்பாக எம் மறைமாவட்டத்தின் மறைந்த முன்னைய ஆயர் அமரர் இராயப்பு யோசேப்பு ஆண்டகை கிறிஸ்துவின் சாட்சியாக, ஒடுக்கப்பட்டோரின் உரிமைக் குரலாக வாழ்ந்து பலருடைய இதயங்களிலும் இடம்பிடித்தவர். இவ்வாறான முன்னுதாரணமான வாழ்க்கை முறையும் மன்னாரில் கிறிஸ்தவம் வேரூன்ற காரணமாயிற்று எனலாம்.

கிறிஸ்தவமும், கிறிஸ்தவர்களும் துன்பப்படுத்தப்பட்ட ஒல்லாந்தர் காலத்தில் தனியொருவராக பாரத நாட்டிலிருந்து வந்து மன்னாரில் பாதம் பதித்து பலரது ஆன்மீகப் பட்டினி போக்கிய புனித யோசேப்வாஸ் போன்ற துறவிகளின் முன்னுதாரணமான அர்ப்பணிப்பு நிறைந்த வாழ்வும் மன்னார் மண்ணை விசுவாச இரத்தத்தால் நனைத்தது. கிறிஸ்தவம் திடீரென முளைத்த ஓர் புதுமை புதர் அல்ல. அது பலரது வாழ்வுமாற்றத்திற்கு வித்திட்ட ஓர் வாழ்க்கை நெறி. மன்னார் மண்ணின் வரலாற்றில் பல தருணங்களில் கிறிஸ்தவம் தண்ணீர் இல்லாத செடியாய் தவித்தும் இன்னும் சில வேளைகளில் தண்ணீரில் மூழ்கிய செடியாய் தத்தளித்தும் இருக்கிறது. இப்படியான வடுக்களையும் வலிகளையும் சுமந்த போதிலும் மன்னார் மண்ணில் கிறிஸ்தவம் விசாலமான விருட்சமாய் யாபித்திருக்கிறதென்றால் அதில் எம் முன்னோரின் சாட்சிய வாழ்வே காரணம் எனலாம்.

தோட்டவெளி பிரதேசத்தில் அமைந்துள்ள வேதசாட்சிகளின் இராக்கினி ஆலயம், உலகப் பரம்பலில் அறியப்படுகின்ற அருள்மிகுந்த மருதமடு திருத்தலம், பலரது இதயங்களின் காயங்களை ஆற்றுகின்ற பரப்புக்கடந்தான் கர்த்தர் ஆலயம் மன்னாரின் கிறிஸ்தவ விலாசத்தை விசாலமாக்கிக் கொண்டே செல்லலாம். என "அமைதியின் பூமி" என்று புனைபெயர் கொண்ட மருதமடு புண்ணிய ஸ்தலமானது உள்நாட்டிலும், வெளிநாட்டிலும், கிறிஸ்தவர்களுக்கும், ஏனையவர்களுக்கும் ஆன்மீக மறுமலர்ச்சியை கொடுக்கின்ற மண்ணாக இருப்பது மன்னார் மண்ணின் பெருமையை இன்னும் மெருகூட்டுகின்றது. மன்னார் மண்ணில் கிறிஸ்தவத்தின் வியாபிப்பிற்கு மற்றுமொரு காரணம் யாதெனில் அறம் செய்ய வாய்ப்புள்ள ஓர் வாழ்க்கையை கிறிஸ்தவம் தன் படிப்பினையாக கொண்டிருப்பதாகும். இந்த உலக வாழ்வில் வெற்றி பெறவும், இங்கேயே மோட்ஷ நலன்களை அனுபவிக்கவும் எம்முடைய முன்னோர்கள் கிறிஸ்தவத்தின்பால் வாழ்ந்து காட்டியிருக்கிறார்கள். அவ்வழியில் தமது பார்வைகளை பதிய வைத்த அனைவரும் கிறிஸ்து வழி வாழ்ந்து மன்னாரின் கிறிஸ்தவ நெறிக்கு இன்றும் அணிசேர்க்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**3. பரப்புக்கடந்தான் ஆலயத்தின் தொன்மை**

வாய்மொழி பாரம்பரியம் "கர்த்தர்" எனும் சொல்லாடலானது மேற்கத்தேய கிறிஸ்தவ ஓவியங்களில் கி.பி 15 தொடக்கம் கி.பி 17 வரையான நூற்றாண்டுகளில் சித்தரிக்கப்பட்ட ஓர் காருண்யம் நிறைந்த கிறிஸ்துவின் காட்சியாகும். அதாவது கிறிஸ்துவினுடைய பாடுகள் நிகழ்வுத் தொடரில் இயேசு உரோமை ஆளுநன் பிலாத்துவினால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் குற்றம் கண்டு கொள்ளாத பிலாத்து கிறிஸ்துவை "இதோ மனிதன்" (ecce homo) என்று மக்கள் கூட்டத்திற்கு அறிமுகம் செய்கிறான். அத்தருணத்தில் இயேசு தோற்றமளித்த காட்சியே "கர்த்தர்" எனும் பெயரினால் குறிக்கப்படுகிறது. அத்தருணத்தில் இயேசு செந்நிற மேலுடை அணிந்தவராய், தலையில் முள்முடி தரித்தவராய், மனித சாயலை இழந்தவராய் தோன்றினார். இந்த கர்த்தர் இயேசுவுக்கு கிறிஸ்தவத்தின் ஆரம்ப காலத்திலிருந்தே ஆராதனையும் பக்தி முயற்சிகளும் ஏறெடுக்கப்பட்டு வருகின்றன. அந்த வகையில் மன்னார் மறைமாவட்டத்திலும் இந்த பக்தி முயற்சி ஆழமாக வேரூன்றியுள்ளமையால் மன்னாரின் பல இடங்களில் தொன்மையான, பாரம்பரியம் நிறைந்த, அருட்சியான சூழல் கொண்ட கர்த்தர் ஆலயங்கள் காணப்படுகின்றன. அவற்றுள் பல மனிதர்களின் இதயம் கவர்ந்த மிகவும் பழமையும், செழுமையும் வாய்ந்த ஓர் ஆலயம் பரப்புக்கடந்தான் கர்த்தர் ஆலயமாகும்.

கர்த்தர் ஆலயங்கள் மக்களின் மனங்களில் ஆழ இடம்பிடித்தமைக்கு "இதோ மனிதன்" எனும் பிலாத்துவின் அறிமுகமும் ஓர் உயரிய காரணமாகும். அருட்பணி யாக்கோமே கொன்சால்வேஸ் அடிகளார் இயேசுவின் பாடுகளை தத்ரூபமாக சித்தரிக்கின்ற வியாகுல பிரசங்கங்களை எழுதினார். அதில் கர்த்தருடைய காட்சியை திரு விவிலியம் மற்றும் திரு பாரம்பரியம் தழுவி வர்ணிக்கின்ற போது இயேசு மனித சாயலே இல்லாதிருந்தார் என்பதை விலாவாரியாக கூறுகின்றார். மனித சாயலற்ற மனிதனில் இன்னுமொரு மனிதன் எதனைக் கண்டு "இதோ மனிதன்" என்று அறிமுகம் செய்தான் என்பது ஆழமான சிந்தனைக்குரியது. மனிதத்தை தொலைத்து சாவினை நோக்கி சவாரி செய்து கொண்டிருக்கிற போலி மனிதர்கள் முன்னிலையில் இயேசு மனிதருக்கு ஓர் இலக்கணம். அவருடைய புறத்தோற்றம் சிதைந்திருந்தாலும் மனித மாண்பும்.மனித நேயமும் சிறிதளவேனும் குறையவில்லை. அதனால்தான் இன்னல்களால் அல்லாடுகின்ற மனிதர்கள் கர்த்தர் இயேசுவை சந்தித்து தரிசனம் பெற்று அவரிடமிருந்து ஆறுதல் பெறுகிறார்கள். அந்த வரிசையில் பரப்புக்கடந்தான் கர்த்தர் ஆலயம் பிரசித்தி வாய்ந்தது.

புரப்புக்கடந்தான் கர்த்தர் ஆலயத்தின் வரலாறு தொடர்பான எழுத்து ஆவணங்கள் இல்லாவிட்டாலும் முன்னோர்கள் வழியாக கடத்தப்பட்டு வந்த வாய்மொழி பாரம்பரிய வரலாறு உண்டு. அதனை விட மேலாக 400க்கும் அதிகமான வருடங்களாக பல மனதர்கள் தேடி வந்து நம்பிக்கையோடு அருள்பெற்று செல்கின்றமை இந்த ஆலயத்தின் பழமைக்கும் செழுமைக்கும் உயர்வான சான்றாகும். முன்னோர்களின் வாய்மொழிப் பாரம்பரியத்தின்படி ஒல்லாந்தர் இலங்கையை ஆட்சி செய்த 17ம் நூற்றாண்டுகளில் பரப்புக்கடந்தானில் இருந்த ஆலயம் புனித அந்தோனியார் சிற்றாலயம் ஆகும். அந்த சிற்றாலயத்தில் பணிபுரிந்த ஒருவருக்கு (சங்கீர்த்தம்)



ஆலயத்தின் தற்போதய தோற்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனவில் ஒரு காட்சி கிடைத்தது. அதிலே அருகிலுள்ள அடர்ந்த காட்டிற்கு செல்லும்படியும் அங்கே ஒரு மரம் காண்பிக்கப்படும் என்றும் அந்த மரத்தை கொண்டு கர்த்தர் திருச்சுரூபம் ஒன்று வடிவமைத்து ஆலயத்தில் வைக்கும்படியும் கூறப்பட்டது.

கிடைத்த காட்சியின்படியே சங்கீர்த்தம் காட்டிற்கு சென்று மரத்தை கண்டு ஆட்களை கொண்டு அதனை வெட்டி இரண்டு ஏர்மாடுகளை கொண்டு அதனை ஏற்றிவரும் போது மடுப்பகுதியில் இருந்து மூன்று சிற்பிகள் அவ்வழியே வந்தார்கள் என்றும் அவர்களைக்கொண்டு ஏழு நாட்களில் கர்த்தர் சுரூபம் வடிக்கப்பட்டது என்பதும் பாரம்பரிய வரலாறு ஆகும்.

இத்தகைய பல நூறு ஆண்டுகள் பாரம்பரியம் கொண்ட மாபெரும் கல்வாரித் திருத்தலம் மன்னார் மண்ணுக்கு கிடைத்த ஓர் உன்னதமான ஆசீர்வாதமாகும். இந்த வருடம் கூட ஆயிரக்கணக்கான யாத்திரிகர்கள் இத்திருத்தல விழாவிற்கு வருகை தந்து கர்த்தரின் ஆசீரை பெற்றுச் சென்றார்கள்.

**4. ஆலயத்தின் பௌதீக சூழல்**

மன்னார் மாவட்டத்தின் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மருத, முல்லை நிலங்களால் சூழப்பட்ட ஓர் அழகிய கிராமம் பரப்புக்கடந்தான் ஆகும். இங்கு கத்தோலிக்கர்கள், இந்துக்கள் இஸ்லாமியர்கள் என பலரும் வசித்து வருகிறார்கள். பரப்புக்கடந்தான் என்ற பெயரை உச்சரித்ததுமே எல்லோருடைய கவனத்தையும் கவர்ந்திழுப்பது கர்த்தர் ஆலயமும் அதன் அற்புதமானதும், ரம்மியமானதுமான பௌதீகச் சூழலுமாகும். கத்தோலிக்க கிறிஸ்தவர்களின் வழிபாட்டு நாட்காட்டியில் கிறிஸ்தவ விசுவாசத்தின் மைய நிகழ்வாகிய பாஸ்கா என அழைக்கப்படும் கிறிஸ்துவின் பாடுகள், மரணம், உயிர்ப்பை நினைவுகூரும் ஆறு வாரங்களை கொண்ட தவக்காலம் எனும் சிறப்புக்காலம் உண்டு. இந்தஆறு வாரங்களின் ஆறாவது வெள்ளிக்கிழமை ஆண்டுதோறும் பரப்புக்கடந்தான் கர்த்தர் ஆலய திருவிழா கொண்டாடப்படுகின்றது. திருவிழா என்றாலே பரப்புக்கடந்தான் ஆலயத்தின் அருட்சியான தோற்றம் எல்லோருடைய நெஞ்சங்களிலும் இடம்பிடிக்கும். ஆலயத்தின் முற்புறமாக அமைந்துள்ள நீர்த்தடாகத்தை வருடிக்கொண்டு வீசும் ஈரக்காற்று பக்தர்களின் உடலினை குளிரச் செய்யும். சிலுவைப்பாதை தியானங்களின் போது ஆலயத்தின் வளாகத்திலுள்ள காருண்யம் நிறைந்த கர்த்தர் திருச்சுரூபம் மனித மனங்களின் மாற்றத்திற்கு வித்திடும். திருவிழா நாட்களில் வீதிகளின் இருமருங்கும் காணப்படும் கடைகள் சிறுவர்களின் கண்களை கவர்ந்திழுக்கும். மன்னாரிலிருந்து மட்டுமல்ல யாழ்ப்பாணம் முதல் கொழும்பு வரையான வெவ்வேறு இடங்களிலிருந்து திருயாத்திரிகர்களாகவும், பாத யாத்திரிகர்களாகவும் வரும் பக்தர்களின் ஆழமான நம்பிக்கை காண்போரை பிரம்மிக்க செய்யும். கால் நடையாக இளைத்து களைத்து வரும் யாத்திரிகர்கள் கர்த்தர் ஆலய வளாகத்திலுள்ள கிணற்றிலிருந்து தாகம் தீர்த்துக் கொள்கிற அழகு நீங்காத பிணிகளையும் நீக்கிப்போடும்.

திருவிழா நாளில் கர்த்தர் ஆலயத்தில் தாம் பெற்ற வரங்களுக்காக பக்தர்கள் தான தரும் செயல்களில் ஈடுபடுவது காண்போரின் நம்பிக்கையை இரட்டிப்பாக்கும். ஆலயத்தின் பௌதீக சூழலை அலங்கரிப்பதாய் உயர வளர்ந்திருக்கும் பழைய மரங்களும், கண்களை குளிர்மையாக்கும் பச்சை வயல்வெளிகளும் கோடி அழகாய் காட்சியுறும்.

இத்தனைக்கும் மேலாக பாரம்பரியமாக வறண்டிருக்கும் வானம் கர்த்தர் ஆலய திருவிழா நாளில் இங்கிதமாக அங்கு மழை பொழிவது ஓர் எழுதப்படாத விதி போன்றது. பச்சைகளை தின்றுவிட்ட பாலைகளாய் எம் தேசத்தில் புழுதியும் இரத்தமும் தீர்ந்து போய் அழுத வரிகளை மறந்து சிரிக்க துடிக்கும் பக்த கோடிகள் தூரம் வந்து பாரம் இறக்கி பித்து வீடு திரும்பும் அருள்மிகு பரப்புக்கடந்தான்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கர்த்தர் ஆலயத்தின் பௌதீக சூழல் கோடி கொடுத்தாலும் கிடைக்காது.

**5. அக அமைதிக்கு ஓர் அருமையான ஆலயம்**

வாழ்க்கை என்பது பிறப்பிலே தொடங்கி இறப்பிலே முடியும் பயணம் அல்ல. அது "நான்" என்பதில் தொடங்கி "நாம்" என்பதில் முடிய வேண்டிய இன்பமான சுற்றுலா. இந்த வாழ்வில் குறுகிய மனங்கள் குறுகிய பாதைகளை தேர்ந்தெடுக்கின்றன. மரணமில்லாத மரணத்தை கண்டு அஞ்சுவதால்தான் மனிதன் மன அமைதியை தொலைத்து விடுகிறான். நிரந்தர வாழ்வு மாளிகையின் தங்கச் சாவிதான் மரணம் என்பதை எப்போது மனிதன் புரிந்து கொள்கிறானோ அப்போது அவனுடைய மனம் அமைதி கொள்கிறது.

பரப்புக்கடந்தான் கர்த்தர் ஆலயத்தின் இயற்கையான, தனித்துவமான ஆன்மீக சூழல் இறுகிப்போன இதயங்களையும் இளகிட செய்யும். காருண்யம் நிறைந்த கர்த்தர் இயேசுவின் திருமுகம் பார்ப்பவர்கள் அகத்தில் அமைதியை அனுபவிக்கிறார்கள். "இதயதாகம் இருப்பார் வருக'' எனும் கர்த்தர் இயேசுவின் வாய்மொழியால் நலமடையும் மனிதர்களின் சான்றுகள் ஏராளம். கால் நடையாக கர்த்தர் நாமம் உச்சரித்துக்கொண்டு பரப்புக்கடந்தான் நோக்கி வருகிறவர்கள் இனம் புரியாத மன அமைதியை பல ஆண்டுகளாக உணர்கிறார்கள். அதனால்தான் சுட்டெரிக்கும் சூரியனையும் பொருட்படுத்தாது தங்கள் வாழ்விலே தொலைந்து போன நிம்மதியை தேடி அலை அலையாக ஆலயம் நாடி பயணிக்கிறார்கள். நோய்கள் அகன்றும், பேய்கள் நீங்கியும், துன்பங்கள் மறைந்தும், சாபங்கள் விலகியும் ஆறுதலான, சுபீட்சமான வாழ்வை மீளப்பெற்றுக் கொள்கிற ஓர் அனுபவத்தை இந்த திருத்தலத்தில் பலரும் பெறுகிறார்கள். பாவங்கள் நிறைந்த ஊதாரித்தனமான வாழ்வின் மூலம் நாளாந்தம் அமைதியை தொலைத்து கொண்டிருப்பவர்கள் மனமாற்றத்தினையும் இங்கு பெற்றுக்கொள் கிறார்கள். வாழ்வின் நீட்சியில் அர்த்தத்தை தொலைத்தவர்கள் தமது வாழ்வின் அர்த்தத்தை கண்டு கொள்கிறார்கள். எதிர்காலம் பற்றி ஏங்கிக்கொண்டிருப்ப வர்கள் வெளிச்சம் பெறுகிறார்கள். பாரம்பரியமாக நம்பிக்கையோடு கர்த்தர் ஆலயம் நாடி பல வரங்களை பெற்றவர்களின் அனுபவங்கள் கேட்போரை மெய்சிலிர்க்க வைக்கும். அதிகமான சத்தம் சந்தடி இல்லாத சுற்றுச் சூழலும் ஒருவரை அறியாமலேயே ஒட்டிக்கொள்ளும் அருட்சியான அனுபவமும் நிச்சயமாக மன அமைதியை நல்குவது உறுதி.

**6. முடிவாக**

ஆற்றின் நீரோட்டத்தில் அடித்து செல்லப்படும் மிதப்புக் கட்டைகளாக உலகத்தின் போக்கில் ஊறிப்போய் மீள முடியாத வடுக்களையும் வாதைகளையும் நாளாந்த உணவு போல அனுபவமாக்கிக் கொண்டிருக்கிற மனித வாழ்வு, மூக்குவரை மூழ்கிய பின்பு தற்போது மூச்சுவிட துடிக்கிறது. மன்னார் மண்ணின் ஆன்மீக வேர்களில் மெல்ல மெல்ல உலகை போலிகளின் அரிப்புகள் ஆரம்பமாகி விட்டன. பல காரணப் பட்டினிகளால் உண்டி சுருங்கிப் போன ஆன்மீக வாழ்வு மீளவும் புத்துணர்ச்சி பெற வேண்டியது காலத்தின் தேவையாக உணரப்படுகிறது. மனச்சாட்சியின் குரலுக்கு செவிமடுத்து துருப்பிடித்து போன நமது ஆன்மீக அக வாழ்விற்கு முலாம் பூச எத்தனிப்போம். அமைதியில் இருந்து ஆண்டவனை அனுபவிக்க ஓர் அரிய அக மற்றும் புற சூழல் கொண்ட ஆலயங்களுக்கு செல்லுவோம். பரப்புக்கடந்தான் கர்த்தர் ஆலயம் மனிதத்தை தொலைத்த வெற்று மனிதர்களுக்கு ஓர் ஔடத ஸ்தானம். இறை அமைதியை உள்ளும் புறமும் சுவைத்து வாழ்வில் இன்புற ஆலயம் தொழுவோம் சாலவும் நல்குவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னாரின் மகிமை பாடி...

கவிஞர் இமாம் ஹன்பல்

பல்லாயிரம் ஆண்டு
சொல்லுகின்ற வரலாறு
எல்லோரும் விரும்புகின்ற
நல்மன்னார் பதிக்குண்டு!

மாதவம் செய்தோமோ
மன்னார் மண்ணில் பிறப்பதற்கு
மகேசனவன் அருள்கொண்டு
மாண்புறும் எங்கள்பதி...!
முக்கனிகள் முதல் தொடங்கி
முழுக்கனியும் விளைந்திருக்கும்
மண்வளத்தால் சிறந்தோங்கும்
மன்னார் மாதலத்தில் வளம் பெருகும்...!

மறைந்திருக்கும் எண்ணெய்வளம்
குறையிலா கடல்வளமும்
நீர்வளத்தால் நிலம் சிறக்க
பார்புகழ் ஓங்கும் கட்டுக்கரைக்குளம்
சீரான வேளாண்மை விளைச்சலுடன்
பேராக முப்போகம் விளைந்திடுமே!
செந்நெல் வயலும் – அருவிகங்கை
நந்நீர்த்தடமும்
மன்னார் மாதலத்தின்
மகத்துவங்கள்...!

பாலைமுதிரை தேக்குடனே
மலைவேம்பும் தென்னைபனை
புளியை வீரை நாவலுடன்
விளாத்திசாளை கருங்காளி
ஆலம்மருதம் கொன்றையுடன்
ஆற்றோரம் கண்ணாமரம்
வேம்புடனே வேலமரம்
வரலாற்றுப் புகழ்மனக்கும்
பெருக்குமரமும் எம் பதியில்!

சிறுதானிய நிலக்கடலை
சிறந்தோங்கும் பயறு கௌவி
அவரை இனத்தாவரங்கள்
அழகு பொழில் பூமரங்கள்
கத்தரி வெண்டி மிளகாயுடன்
காட்டு மரவள்ளி வத்தாளையும்
பயிற்றை புடோல் பீர்க்கும்
பாகல் பூசணி சுரையுடனே
தேசி தோடை கொடித்தோடை
சத்துள்ள கிழங்குவகை ராசவள்ளி
முத்தாக விளையும் எம்மண்ணில்...!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்தரிப்புத்துறை முதல்
முத்துசிலாபத்துறையினிலும்
முத்துக்கள் குளித்தெடுப்பால்
முழு உலகும் மன்னாரின் ஒளிவீசும்
எலிசபத் மகாராணியின்
எழில் கிரீடம் சான்றுசொல்லும்...!

சூரை கொடுவா நெத்தலியும்
பாரை மணலை சிரயாமீன்
ஆடிக்கொய்யும் பூச்சக்கன்னி
தேடிவரும் மன்னா செங்கணி
சுறா மீனும் சுங்காமீனும்
ஓரா ஒட்டி நகரையுமே
சால சூட கல்வெட்டி
பாலவிள கணவாயுடன்
விரால் முரல் மதனமீனும்
இறால் நண்டு குட்டுறு
திருக்கை கட்டிகாளையுடன்
திரலிவாவல் சீலா கிளைக்கான்
சங்கு அட்டை வலம்புரியும் – எம்
பொங்கு கடல் திரவியங்கள்

மறைந்திருக்கும் எரிபொருளாம்
மறந்துபோன எம்பதியை
மறுபடியும் திரும்பிப் பார்க்கும்
மகத்துவம் நிறை மன்னாராம்...!

மடுமாதா ஆலயமும்
மாந்தை திருக்கேதீஸ்வரமும்
வரலாற்றுப் புகழ்மிக்க
வழிபாட்டு தலங்களிவை!
அல்லிராணி கோட்டை முதல்
ஒல்லாந்தர்கால கோட்டை
எமதூரின் வரலாற்றை
எங்கும் எடுத்துச்சொல்லும்

காலநிலை மாறுதலால்
வெளிநாட்டு பட்சியினம்
மன்னார் மண் தேடி
மகிழ்வுடனே விரைந்துவரும்...!

ஆயக்கலைகள் அத்தனையும்
தூயபதியில் துள்ளியாடும்
கலைமிளிரும் மாதலத்தில்
கவின் கலைகள் கைதட்டும்...!

வற்றாத நீரூற்றும்
வளம்நிறை பொற்பதியாம்
வந்தாரை வாழவைக்கும்
நற்பதியாம் நம் மன்னார்...!

---


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வங்காலை பறவைகள் சரணாலயம் ஓர் பார்வை

வீ. பிரதீபா,
சிரேஷ்ட விரிவுரையாளர்,
கலாநிதி. ஏ. எஸ். சூசை

## அறிமுகம்

இன்று ஏற்பட்டுள்ள நவீன தொழில் நுட்ப வளர்ச்சியும், அதன் காரணமாக மானிடச் செயற்பாடுகளில் ஏற்பட்டு வரும் மாற்றங்களும் பூகோள ரீதியில் சுற்றுச் சூழலுக்கு, குறிப்பாக உயிர் பல்வகைமைக்கு என்றுமில்லாதவாறு பாரிய அச்சுறுத்தலை ஏற்படுத்தி வருவது உணரப்பட்டுள்ளது. இதனால் உயிர்ப் பல்வகைமையைப் பேணுவதில் நாடுகள் அதிக அக்கறையும் கவனமும் செலுத்தி வருவதை அவதானிக்கலாம். இந்த வகையிலே பல நாடுகள் உயிர் பல்வகைமையினைப் பேணுவதற்காகவும்,கட்டுப் படுத்துவதற்காகவும் அந்தந்த நாடுகளிலே வன விலங்கு மற்றும் பறவைகள், காடுகள், பூங்காக்கள் என்பவற்றின் பாதுகாப்பு தொடர்பான அமைப்புக்களை உருவாக்கி அவைகளின் ஊடாக பாதுகாப்பு, மற்றும் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றன.இலங்கையும் இவ்வாறான செயற்பாடுகளில் கவனம்செலுத்தி வருகின்றமை முக்கியமானதாகும். இலங்கையைப் பொறுத்த வரையில் இங்கு ஏற்படுத்தப்பட்டுள்ள வன விலங்கு பறவைகள் சரணாலயங்கள், மற்றும் ஈரநிலங்கள், பூங்காக்கள், காடுகள் போன்றவை இந்நாட்டு உயிர்ப்பல்வகைமை யினைப் பேணுவதில் காத்திரமான பங்கினை வகித்துவருகின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகப் பார்க்கப்படுகிறது.

இலங்கையின் அமைவிடமும் அதன் பௌதிக இயல்புகளும் இந்நாட்டின் உயிர் பல்வகைமையின் செழுமைக்கு அடித்தளமாக அமைந்துள்ளது. இதன் காரணமாக இலங்கையில் காணப்படும் பல ஈரநிலங்கள் (Wetlands) சர்வதேசரீதியில் தனித்துவ மிக்கவையாக ‘ரம்ஸார்’, (Ramsar Convention 1971) உடன் படிக்கை மூலம் அடையாளம் காணப்பட்டு பாதுகாப்பதற்கான இடங்களாகப் பிரகடன்படுத்தப் பட்டுள்ளன. (ரம்ஸார் ஈரான் நாட்டிலுள்ள நகரம்).

இந்த வகையில் இலங்கையில் பிரகடனப்படுத்தப்பட்ட சில சரணாலயங்கள் வரிசையில் ஒன்றுதான் வங்காலைப் பறவைகள் சரணாலயம் ( Vankalai Bird Sanctuary) ஆகும். இச்சரணாலயமானது 8.09.2008 இல் இலங்கையில் ஓர் பறவைகள் சரணாலயமாக பாராளுமன்றில் வர்த்தமானி மூலம் பிரகடனப் படுத்தப்பட்டது. மேலும் இது 12.7.2?10 அன்று சுயஅளயச Information Sheet 1919 (RIS 1919) இல் சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்டும் உள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக் கட்டுரையில் இந்த பறவைகள் சரணாலயத்தின் பலம் (strength), பலவீனங்கள் (weakness), வாய்ப்புக்கள், (Opportunities), அச்சுறுத்தல்கள் (Threats) விருத்திக்கான ஆலோசனைகள் ஆகிய விடயங்கள் சுருக்கமாக நோக்கப்படுகின்றது.

### சரணாலயத்தின் அமைவிடமும் புவியியல் பின்னணியும்

வங்காலை பறவைகள் சரணாலயம் மன்னார் மாவட்டத்தின் மேற்கு கரையோரமாக மன்னார் தீவையும், பெருநிலப்பரப்பையும் இணைக்கின்ற ஈரநிலப் (wetlands) பகுதியை உள்ளடக்கி இட அமைவு பெற்றுள்ளது. வடக்கே பள்ளிமுனை, கிழக்கே திருக்கேதீஸ்வரம், தெற்கே வங்காலை, மேற்கே சவுத்பார் ஆகிய இடங்களை எல்லைகளாக இது கொண்டுள்ளது. வடமேற்குப்பகுதிமத்திய பகுதி மன்னார் பிரதேச செயலக பிரிவின் கீழும், வடகிழக்குப்பகுதி மாந்தை பிரதேச செயலக பிரிவின் கீழும், தென்கிழக்கு, தென்மேற்குப்பகுதி நானாட்டான் பிரதேச செயலக பிரிவின் கீழும் உள்ளடங்குகின்றன.

பலம் (strenghth) இச்சரணாலயத்தின் பரப்பளவு 4839 ஹெக்டேர் ஆகும். இப்பரந்த பகுதியின் மேற்கு ஓரமாக மன்னார் குடா கடல் (Gulf of Mannar), வடக்கே பாக்கு குடா கடல் (Palk straite) ஆகிய பாரம்பரிய நீர்ப் பரப்புகள் (Historical waters) என அழைக்கப்படும் இரு பெரும் கடல்கள் உள்ளன. இங்கு வடகீழ் (வாடை) மற்றும் தென்மேல் (சோளகம்) பருவப் பெயர்ச்சிக் காற்றுக்கள் வீசுகின்றபோது ஏற்படும் பருவக்காற்று நகர்வு (Monsoon drift) எனப்படும் நீரோட்டங்களின் செல்வாக்கிற்கு உள்ளாகின்றன. இதனால் மன்னார் தீவிற்கும் பெருநிலப்பரப்பிற்கும் இடையில் அமைந்துள்ள பரவைக்கடல் உயிரிகளின் வளர்ச்சிக்குத் தேவையான சத்துக்கள் வந்தடைகின்ற ஒரு பகுதியாக விளங்குகின்றது. அத்துடன் இப்பகுதி வற்றுப் பெருக்கு நிகழ்வின் தாக்கத்திற்கும் உட்படுவதினாலும் ஏரிகளில் சத்துப் பொருட்கள், கனியுப்புக்கள் புதுப்பிக்கப்பட ஏதுவாகவும் அமைகின்றன. தூரப்பிரதேசங்களில் இருந்து பறவைகள் பெருமளவில் இப்பகுதிக்கு வருவதற்கு இதுவே அடிப்படையாக உள்ளன.

சரணாலயத்தின் மத்தியிலே மேற் சொன்ன பரந்த வற்றுப் பெருக்கு மேடுகள் (வனையட கடயவள) கொண்ட பரவைக்கடலுடன், சிறிய தீவுகள், சதுப்பு நிலங்கள் உட்பட மன்னார் குடா கரையோரம் அமைந்த நீண்ட மணற்றிட்டுக்கள், உவர் ஏரிகள், மழைக்கால நீர் நிலைகள் போன்ற பௌதிக உறுப்புக்களும் இச்சரணாலயத் திற்குப் பலமாக அமைகின்றன. அத்துடன் பிரதேசத்திற்கு உரித்தான பல தாவர, விலங்கு உயிர்ப் பல்வகைமை கொண்டதாக அமைந்துள்ளமையும் சரணாலயத்தின் முனைப்பான பண்புகளாக உள்ளன. தாவரங்கள் என்றவகையில் அரை வறள் நிலத்துக்குரித்தான (wetlands) கண்டல் தாவரங்கள், (கன்ன மரம். புசநல அயபெசழளந, கண்டல் Mangrove, கிண்ணை Mangrove Apple ) உவரிகள் / உமிரி (Suaeda maritima) பெருக்கு ( Baobub) கள்ளி, முட்புதர்கள் கடற் புற்கள், கடல் தாழை, சாதாழை, இராவணன் மீசை (Spinifex littoreus) அடம்பன் கொடி போன்ற கடல் தாவரங்கள் பரம்பியுள்ளன. வருடத்தில் பெரும்பாலான காலப்பகுதி வரட்சி நிலவினாலும் வடகீழ் பருவமழை காலத்தில் குறிப்பாக நவம்பர் -டிசம்பர் மாதங்களில் கிடைக்கும் மழை காரணமாக சில பகுதிகள் நன்னீர் நிரம்பிக் காணப்படுவதால் பறவைகள் சஞ்சரிக்கின்ற சூழலைக் கொண்டதாக இந்த பகுதி விளங்குகிறது. தள்ளாடி, மாந்தை ஆகிய இடங்களில் இதனை அவதானிக்கலாம். மேலும் இச்சரணாலயப் பகுதியில் 149 வகையிலான நீர்ப்பறவை இனங்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்படுதாவும், கிட்டத்தட்ட 20,000 இடம் பெயர் நீர்ப் பறவைகள் இப்பகுதிக்கு வருவதாகவும், தூர இடங்களிலிருந்து பறவைகள் உள்ளவரும்போது முதலாவது தரப்பிடம் இதுவே எனவும் அதேபோன்று இலங்கையை விட்டு வெளியேறும்போது இறுதியாக தங்கிச் செல்லும் இடமாகவும் இச்சரணாலயமே விளங்குவதாகவும் குறிப்பிடப் படுகிறது. பிரதான பறவை இனங்கள் Spot- billed Duck (புள்ளி அலகு தாரா) Common Teal (காட்டு வாத்து/தாரா வகை) Northern Pintail (ஊசிவால் வாத்து/ தாரா), Greater Flamingo (பெரும் பூநாரை), Gargeny (நீலம் சிறகு வாத்து / தாரா), Peregrine Falcon (பருந்து) Black-tailed Godwits (கருவில் மூக்கன்) Pelicans (கூழைக்கடா), Red necked Pharalope (சிங்கமுத்து உள்ளான்), Egrets and herons (நாரை, கொக்கு), Black – winged stilt (கறுப்பு இறக்கை நாரை), Painted stroke (வண்ணத் தாரா) Oystercatcher (நத்தை/கிளிஞ்சல் கொத்தி, Crab Plover (நண்டு தின்னி), Great Black – headed Gull (பெரிய கறுப்புத் தலை கொண்ட கடல் புறா, CaspianTern (கஸ்பியன் ஆலா/ பருந்து). Common Sandpipers (கோட்டன்), Common Redshank (மலைக் கோட்டன்), Sri Lanka Grey Hornbill (இரட்டைச்சொண்டு குருவி), Sri Lanka Junglefowl (இலங்கை காட்டுக்கோழி), நீர்க்காகம் (Cormorants), 7கவுதாரி, ஆட்காட்டி போன்றவை குறிப்பிடத் தக்கன. (இலங்கை பறவைகள் கழகம் 2010).

பறவைகள் தவிர கடல்வாழ் உயிரிகளில் 60 வகையான இனங்கள் இப்பகுதியில் வாழ்வதாகவும் குறிப்பிடப் படுகின்றது. இவற்றுள் பச்சை கடல் ஆமைகள் (Green turtles) கடல் பசுக்கள் (Dugong or Sea Cow), உவர் நீர் முதலைகள் (Salt water Crocodiles) மற்றும் ஊர்வன (உடும்பு, Land Monitor) நீர்ப்பாம்பு, ஓணான் Green Garden Lizard) எலிகள்) கீரி, குரங்கு, முயல்,மான்,காட்டுப்பன்றி போன்ற விலங்குகளும் முக்கியமான வையாக உள்ளன. இத்துடன் வுசயஎநடடல (caranx spp.) பாரை மீன், Snappers (Lufjanus spp.) விளை மீன், போன்ற முக்கிய மீன் இனங்களும் பாலை மீன்கள், இறால், ஒட்டி, ஓரா, ( Sea Bream) மணலை, திரளி, கெளிறு போன்ற சிறியரக ஏறிவகை மீன்களும் இறால், (Prawns). பச்சை நண்டு (Green crab) மட்டி (calms) போன்ற ஓட்டுவகை மீன்களும் மென்னுடலிகளில் கடலட்டைகள் (Beach-de-mer) இப்பகுதியில் பரம்பியுள்ளன. கழுதைகள் இந்த வலயத்திற்குரித்தான சிறப்பான தனித்துவ மிக்க விலங்கு என்பதும் குறிப்பிடத்தக்கது.இதற்கென பாதுகாப்பு நிலையம் ஒன்றும் மாவட்டத்தில் உள்ளது.

இவ்வாறாக இச்சரணாலயத்தின் உயிர்பபல்வகைமை இதன் பௌதிகச்சூழலுக்கு ஏற்ப பரம்பியுள்ளமை இச் சரணாலயத்திற்கான பலமாக (strength) உள்ளமை தனிச்சிறப்பாகும். இச்சரணாலயம் சார்ந்தே புகழ்பெற்ற பாடல் பெற்ற தலமான திருக்கேதீஸ்வர இந்து ஆலயமும், வரலாற்று புகழ்பெற்ற மாந்தை துறைமுகமும், வங்காலைத் துறையும் கி.மு 6ஆம் நூற்றாண்டு முதல் கி.பி 13 ஆம் நூற்றாண்டு சிறப்புற்று விளங்கியதாக ஆய்வு ஒன்று குறிப்பிடப்படுகிறது.

இந்த சரணாலயத்தின் மத்தியில் தள்ளாடி இராணுவத்தின் விமான ஓடுபாதை, திருக்கேதீஸ்வர புகையிரத நிலையம், தள்ளாடி புனித அந்தோனியார் தேவாலயம், உப்பளம் மற்றும் இலங்கையிலேயே அதிகூடிய அகலமுடைய பெருக்கு மரமும் (Baobab tree) (பள்ளிமுனை) அமைந்துள்ளமையானது இச்சரணாலயத் திற்கு மேலும் பலம் சேர்ப்பதாக அமைந்துள்ளது. வருடத்தின் பெரும்பகுதி வறட்சியாக இருந்த போதிலும் வறட்சியைத் தாங்கக்கூடிய சதுப்பு நில வளரிகள், முட்புதர்கள், செழிப்புடன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருப்பதை அவதானிக்கலாம். மாரியில் தூர நாடுகளில் இருந்து ஆதாம் பாலம் (Adam's bridge) வழியாக இடம் பெயர்ந்து வரும் பறவைகள் ஏற்கனவே குறிப்பிட்டவாறு தள்ளாடி -மன்னார் வீதியின் இருமருங்கிலும் உள்ள பரவைக் கடலிலும் தள்ளாடி இராணுவமும் சார்ந்த தென் பகுதிகளிலும் பெரிய களம், வங்காலை நீராவியடி ,பாக்குப்பிட்டி பகுதிகளிலும் ஆயிரக்கணக்கில் செறிந்து தங்கும். அக்காலத்தில் பெருமளவு உள்நாட்டு,வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை அப்பகுதிகளில் காணலாம். மாவட்டத்திலுள்ள மடு புனித தலம் ,அரிப்பு அல்லிராணிக்கோட்டை, குஞ்சுக்குள தொங்குபாலம், கட்டுக்கரை குளம்,போன்று சுற்றுலாப் பயணிகளை கவரும் பகுதியாக இச்சரணாலயம் மிளிர்ந்து சூழல்சார் சுற்றுலா ஊடாக தேசிய அபிவிருத்திக்கும் மன்னார் பிரதேச அபிவிருத்திக்கும் பலம் சேர்க்க கூடியதாக உள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

**பலவீனம் weakness**

பறவைகள் சரணாலயத்திற்குரித்தான சாதக பண்புகள் பலவற்றை இது கொண்டிருக்கின்ற போதிலும். பலவீனமான இயல்புகளையும் இது தன்னகத்தே கொண்டிருப்பதையும் அவதானிக்கலாம். முக்கியமாக இதன் மத்திய பகுதியில் இட அமைவுபெற்றுள்ள தள்ளாடி இராணுவத்தளம் யுத்த காலத்திலும் அதன் பின்னரும் விரிவடைந்து இப்பரப்பின் பெரும் பகுதியினை விழுங்கியிருக்கிறது. பறவைகள் சரணாலயப் பிரகடனத்துக்கு முன்னரேயே இராணுவமுகாம் கேந்திர இடத்தில் இட அமைவு பெற்றுள்ளமை யினால் அது தேசிய பாதுகாப்பின் நிமித்தம் அவசியமானவையாக இருப்பினும் யுத்தம் முடிவுற்ற நிலையிலும் அவசியமின்றி முகாம் மேலும் விஸ்தரிக்கப் பட்டிருக்கின்றது. முகாமுக்குச் சமீபமாக முள்ளிப்பள்ளம் என்ற இடத்திலும் விமான ஓடுபாதைக்குச் சமீபமாக பிறிதொரு முகாமும் அமைக்கப்பட்டுள்ளது.மேலும் தள்ளாடி அந்தோனியார் கோயில் சார்ந்து இராணுவம் உணவுச்சாலை ஒன்றும் விருந்தினர் விடுதிகளும் நிர்மாணிக்கப் படுள்ளது. மேலும் நன்னீர் குளம் ஒன்று சுவீகரிக்கப்பட்டுள்ளதுடன் உள்ளக விளையாட்டு அரங்கு ஒன்றும் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. விரும்பியவாறு சரணாலய எல்லைக்குள் மேற்கொள்ளு கின்ற இத்தகைய நடவடிக்கைகள் இச்சரணாலயத்தின் தனித்துவத்தைப் பலவீனமாக்கும் தன்மையையே காட்டுகின்றது. இது சரணாலயத்தின் வளர்ச்சிக்கும்,சூழல் சுற்றுலாவுக்கும் ஆரோக்கியமானவை அல்ல என்பது எமது கருத்து.

அடுத்து சரணாலயப்பகுதி வரண்ட வலயத்தினுள் அமைவதினால் வருடத்தின் பெரும்பாலான காலப்பகுதிகள் (பெப்ரவரி முதல் ஒக்டோபர், நவம்பர்) நீர்நிலைகள் வற்றி கடும் வரட்சியாகவே காணப்படும்.சில இடங்களில் (பெரிகளம்) பெருமளவில் உப்பு படிவுகள் படிந்திருப்பதையும் காணலாம். அக்காலப்பகுதிகளில் பிற தேசத்தின் இடப்பெயர்வு பறவைகள் எவற்றையும் இக்காலப்பகுதிகளில் காண்பது அரிது. இதனால் சுற்றுலா பயணிகள் எவரையும் காணமுடிவதில்லை. ஆகவே நீடித்த கடும் வரட்சி நிலையும் பலவீனமான ஒன்றாகவே பார்க்கமுடியும். சரணாலத்தின் மேற்கு கடலோரத்திற்கும் புகையிரத வீதிக்குமிடையே பரம்பியுள்ள கண்டல் தாவரங்களானது மீன்பிடித்தல் தேவைக்காக பெருமளவாக வெட்டி அழிக்கப்பட்டு வருகின்றன. சட்டபூர்வமற்ற மீன்பிடிச் செயற்பாடுகள்,மணல் அகழ்தல் காரணமாக கரையோரமும் அரித்தலுக் குள்ளாகி வருகின்றன. (உதாரணமாக வங்காலை கடற்கரையோரம்) இவற்றைத் தடுத்து நிறுத்துவதற்கான பொறிமுறைகள் இங்கு மந்த கதியிலேயே நடைபெற்று வருவதை அவதானிக்க முடிகின்றது. கண்டல் மீள் நடுகை ,அவற்றின் பராமரிப்பு, முகாமைத்துவம்,இவை தொடர்பான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழிப்புணர்வு செயலரங்கு மிகவும் பலவீனமான நிலையில் இருப்பதாக எம்மால் அறிந்து கொள்ள முடிகிறது.

**அச்சுறுத்தல்கள் (Threats)**

இச் சரணாலயம் அண்மைக்காலங்களில் பல அச்சுறுத்தல்களுக்கு உள்ளாகி வருவது அவதானிக்கப் பட்டுள்ளது.மன்னார் தீவின் கரையோரமாக அண்மையில் நிர்மாணிக்கப்பட்ட காற்றாலை மின்சாரக் கோபுரங்களிலிருந்து மின்சாரமானது இப்பறவைகள் சரணாலயமூடாகவே கொண்டு செல்லப்படுகின்றன. இதற்கான மின் கம்பங்கள் பல பறவைகள் சஞ்சரிக்கும தள்ளாடி வங்காலைச் சக்தியிலிருந்து வங்காலை வரை அவதானிக்கலாம். மின்கம்பிகளில் காற்று வீசும்போது எழும் ஒலி சத்தம் (Noice pollution), பறவைகள் பறக்கும்போது கம்பிகளில் அடிபட்டு வீழ்தல் போன்ற விபத்துக்கள் பெரும் அச்சுறுத்தலான ஒன்றாகவே பார்க்க வேண்டியுள்ளது. இவை தவிர கண்டல்காடுகள் மீன்பிடித்தலுக்காக அழிக்கப்படுகின்றன. குழை வைத்து கணவாய் பிடித்தல்,மரக்கட்டைகள் அமிழ்த்தி வெடிவைத்து மீன்பிடித்தல் போன்ற சட்டபூர்வமற்ற நடவடிக்கைகள் கண்டல்சார் தாவர விலங்கு உயிர்பல்வகைமைக்கு பாரிய அச்சுறுத்தலாக அமைந்துள்ளன. கண்டல்கள் நீர்ப்பறவைகளின் உறைவிடமாகவும், ஏரிவகை மீன்களின் வளர்ச்சிக்கு வாய்ப்பான சூழலையும் கொண்டவை. உதாரணமாக கண்டல் மர அழிவினால் நீர்க்காகங்கள்,கொக்குகள் இடம்பெயர்ந்து மன்னார் நகரின் மையப்பகுதியிலுள்ள மரங்களில் தங்குகின்றன இதனால் நகரச் சுற்றுசூழல் பாதிப்படைகின்றன.

சட்டபூர்மற்ற மீன்பிடிமுறைகள் எவராலும் கட்டுப்படுத்த முடியாத ஒரு முறையற்ற செயற்பாடாகவே உள்ளன.தள்ளாடி மன்னார் பாலத்தடியிலே இன்று சாரதிகள் அனுமதிப்பத்திரம் வழங்கல் தொடர்பான பரிசோதனை நிலைய செயற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.அத்துடன் இராணுவச் சோதனை சாவடியும் செயல்பட்டுவருகின்றன. இவைகளும் ஒரு வகையிலே பறவைகள் சரணாலய விருத்திக்கு பெருந்தடைக் கற்களே. மேலும் இச்சரணாலயத்தின் மத்தியில் அமைந்துள்ள படைத்தளம், அங்கு மின்னொளியில் நடைபெறக்கூடிய விளையாட்டுக்கள் மற்றும் மன்னார் நகரிலிருந்து இச்சரணாலயம் வழியாக செல்லும் பார ஊர்திகள், ராணுவ டிரக்குகள், மற்றும் பெருமளவான சிறிய ரக வாகனங்கள், புகையிரத சேவைகள் இரவு பகலாக நடைபெறும்போது அவற்றின் இரைச்சல் பறவைகளுக்கு ஒருவகையில் இடைஞ்சலாக அமைகின்றன. எதிர்காலத்தில் பறவைகளின் வருகை இதனால் தடைப் படலாம்.

**சுற்றுச்சூழல்**

குறித்த சரணாலயப்பகுதியின் சில இடங்களில் முறையற்ற திண்மக் கழிவகற்றல் நடவடிக்கைகள் குறித்த சரணாலயத்திற்குப் பெரும் சுற்றுச்சூழல் அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது.சரணாலயத்தின் வடக்கு எல்லையோரமாகவே மன்னார் நகரம் உள்ளது. சனச்செறிவு மிக்க நகர்ப்பகுதிகளிலும், வர்த்தக மையப்பகுதியிலும் சேரும் கழிவுகள், மீன்பிடி இறங்குதுறை மற்றும், மீன்சந்தைகளின் திண்மக் கழிவுகள் அத்துடன் தூர இடங்களிலிருந்து கடலினூடாக வந்துசேரும் நுண் பிளாஸ்டிக் (micro plastic) கழிவுகள் போன்றவற்றாலும் இப்பகுதி கடல்வாழ் உயிர்களுக்கும்,பறவையினங்களுக்கும் பெரும் அச்சுறுத்தலாகவே உள்ளன. சில சந்தர்ப்பங்களில் சரணாலயத்தை ஊடறுத்துச் செல்லும் வீதியோரங்களிலும், நீர்நிலைகளிலும் திண்மக், கழிவுகள் பெருமளவில் கொட்டப்படுவதை அவதானிக்கலாம். அத்துடன் வாகனங்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களின் அதிகரிப்பு செறிவான போக்குவரத்து செயற்பாடுகள் காரணமாக எழும் காபன், மற்றும் தூசி துணிக்கைகள்,இரைச்சல்கள் ஒலிகள் இப்பகுதி வளி மாசு பாட்டுக்கு காரணமாகின்றன. இவைகள் இச்சரணாலய விருத்திக்கு ஆரோக்கியமானவை அல்ல.

**பொதுவான பிரச்சினைகள்**

இப்பகுதியில் சரணாலயப் பிரகடனம் 2008 இல் மேற்கொள்ளப்பட்டபோது கடுமையான உள்நாட்டுப் போர் நடைபெற்றுக் கொண்டிருந்தது. இதனால் சரணாலய எல்லையில் அமைந்துள்ள கிராம மக்களிடம் இது குறித்து கலந்துரையாடல் களோ மக்களின் கருத்துக்களோ, விழிப்புணர்வு நிகழ்வுகள் எவையுமே சம்பந்தப்பட்ட துறைசார்ந்த அதிகாரிகளால் முன்னெடுக்கப்பட்டிருக்கவில்லை. இதனால் முக்கியமாக சரணாலய தென் எல்லையில் இட அமைவு பெற்றிருந்த பெரிய கிராமமான வங்காலை அதன் மொத்தப்பரப்பளவில் மூன்றில் இரு பகுதியை இழந்தது. எல்லைக்குள் புதிய குடியிருப்பு வேலிகள் அகற்றப்பட்டன. பாடசாலைக்கு ஒதுக்கப்பட்ட விளையாட்டு மைதானம் ,எரிபொருள் நிரப்பு நிலையம் போன்றன பயன்பாட்டுக்குக் தடை ஏற்படுத்தப்பட்டன. இதற்கான மாற்று ஒழுங்குகள் எவையும் உரிய வாறு செய்யப்படவில்லை.நீண்டகாலமாக பயன்படுத்தப்பட்ட நெற்காணிகளின் ஒருபகுதியும் சரணாலய எல்லைக்குள் சென்றுள்ளன. முன்பே கட்டப்பட்ட மாதா கோயிலை அகற்றக்கோரி கோயில்நிர்வாகத்திற்கு இன்னமும் அழுத்தம் வருவதாக அறிய முடிகின்றது. யுத்தம் முடிவுற்ற பின்பு அரசு மட்டத்தில் இக்கிராமத்தின் எதிர்கால வளர்ச்சி கருதி சிறு நிலப்பகுதியை ஒதுக்கி சரணாலய எல்லைகளை சற்று நகர்த்துமாறு கோரிக்கைகள் விடப்பட்டபோதிலும் இதுவரை அது சாத்தியப்படவில்லை.

மேலும் சரணாலய எல்லையோரக் கிராமங்களான வங்காலை,சிறுநாவற்குளம், பெரிய நாவற்குளம், மன்னார் பகுதியிலுள்ள சிற்றளவு மீன்பிடியாளர்கள் சிலர் தமது அன்றாட ஜீவனோபாய தேவைகருதி இவ் எல்லைக்குள் காணப்படும் பருவகால நீர்நிலைகளில் சிறிய வலைகள்,கரப்புகள் கொண்டு மீன் பிடியில் ஈடுபட்டு வருகின்றனர்.அத்தோடு இப்பகுதியை தமது கால்நடை மேய்ச்சல் தரைகளாகவும் பயன்படுத்தி வருகின்றனர். இத்தகைய சிற்றளவிலான பொருளாதார நடவடிக்கைகள் வனவள ஜீவராசிகள் திணைக்களத்தினால் எதிர்காலத்தில் தடைசெய்யப்படலாம் என நம்பப்படுகிறது. இதனால் வறிய மீனவர்கள், கால்நடை வளர்ப்போர் பாதிக்கப்படலாம். இவ் எல்லைப்பரப்பினுள் விறகு சேகரிப் போருக்கும் இது பொருந்தும்.இன்று நாட்டில் நிலவும் எரிபொருள் நெருக்கடிகள் மின்வெட்டு, எரிவாயு பற்றாக்குறை காரணமாக எல்லையோரங்களில் வாழுகாரணமாகள் விறுகுவெட்டி சமையல்காரர்கள் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர் அதிகரித்துச் செல்லும் விறகப்படுவதால் காட்டுப் போர்வையில் தாக்கத்தை ஏற்படுத்தலாம்.

**மேம்பாட்டிற்கான சந்தர்ப்பங்கள்**

குறித்த சரணாலயத்தின் வடக்கு எல்லையிலேயே மன்னார் நகரம் உள்ளது. சரணாலயத்துடன் நெருங்கிய தொடர்புகளையுடைய திணைக்களங் களான கரையோரப்பாதுகாப்புத் திணைக்களம், வனவள ஜீவராசிகள் திணைக்களம் கடல்வாழ் நீரியல்வளத் திணைக்களம், சுற்றாடல் அபிவிருத்திச் சபை, அனர்த்த முகாமைத்துவப் பிரிவு, பிதேச செயலகம்,பிரதேச செயலாளர் அலுவலகம்,நகரசபை போன்ற நிர்வாக அலகுகள் இவற்றுள் அடங்குகின்றன. இதனால் சரணாலயத்தின் வினைத் திறனான அபிவிருத்திக்கு இத்தகைய நிறுவனரீதியான கட்டமைப்பு பக்கபலமாக அமையும்.மேலும் போக்குவரத்து வாய்ப்புக்கள் எல்லையோரங்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைந்துள்ள இராணுவ காவலரண்கள், காவல்துறை சரணாலய உயிர்பல்வகைம யினை பேணுவதற்கு வாய்ப்பாக அமையும் எனலாம்.

**விருத்திக்கான பரிந்துரைகள்**

இந்தப் பிரதேசமான இயற்கைக்கும் வனப்பகுதியாகும் கொண்டிருப்பதினால் சூழல்சார் சுற்றுலாத்துறையின் (Eco toùrism) வளர்ச்சிக்கு ஏதுவான ஒரு இடமாக மாற்றி அமைக்க முடியும்.சூழல் சார் சுற்றுலா அபிவிருத்தியில் இப்போது அரசு அதிக நாட்டப்பட்டுள்ளது இப்பகுதியையும் கவனத்தில் எடுப்பது அவசியமாகும்.

பரந்த சரணாலயத்தில் பறவைகள் பார்வையிட வருகின்ற சுற்றுலா பயணிகள் பறவையினங்களை அவதானிக்க உயரமான கண்காணிப்பு கோபுரங்கள் பொருத்தமான இடங்களில் நிர்மாணித்தல் வேண்டும். (கடந்த வருடம் 35 அடி உயரமுடைய கோபுரத்திற்கு தள்ளாடி மன்னார் வீதியின் மத்தியில் அடிக்கல் நாட்டப்பட்டது) ரயில்வே பாலங்கள் அமைந்துள்ள பாக்குப் பிட்டி, முள்ளிப்பள்ளம், திருக்கேதீஸ்வரம் ஆகிய இடங்களிலும் கண்காணிப்பு கோபுரங்கள் அமைக்கப்படலாம்.

அச்சுறுத்தலுக்கு உள்ளாகின்ற சவுத்பார் வங்காலை கடலோரத்தின் இடையில் அதன் மத்திய இடத்தில் கண்டல் தாவரங்களைப் பாதுகாக்க நிரந்தர காவல் அரண் அமைக்கப்பட்டு அப்பகுதிக்கு கண்காணிக்கப்படல் வேண்டும்.அப்பகுதி கண்டல்கள் ஏற்கனவே பெருமளவில் மீனவர்களால் அழித்து நாசமாக்கப்பட்டு விட்டன. சுற்றுச்சூழல் பாதிப்புக்குள்ளாகும் இடங்கள் 'மொபைல்' சேவை அவசியம்.வங்காலை, சிறுநாவற்குளம் வீதி, மன்னார் நகர கரையோரம், கோந்தைப்பிட்டி, சாந்திபுரம் பகுதிகள். இதில் அடங்கும்.அத்துடன் வங்காலை முதல், சவுத்பார் வரையிலான கடலோரம் சோளகப் பருவத்தில் நுண் பிளாஸ்டிக் கழிவுகளினால் மிகமோசமாக பாதிக்கப்பட்டு வருகின்றன இது கவனத்தில் எடுப்பது அவசியம்.

சரணாலயத்தின் முக்கியத்துவம்பற்றிய விழிப்புணர்வு கருத்தரங்குகளை சூழவுள்ள கிராமங்களிலும்,பாடசாலைகளிலும் சமய, சமூகவியலாளர்கள் மூலம் அணுகுதல். சுற்றுலா வழிகாட்டிகளுக்கான பயிற்சிகள் வழங்கல்.

இத்துறையில் வேலைவாய்ப்புக்கு இம்மாவட்டத்தில் படித்த ஆண் பெண் இருபாலருக்கும் வழங்க ஆவன செய்தல். பறவைகள் விலங்குகளை வேட்டையாடல், கண்டல்கள் வெட்டுதல், விறகு தேவைக்காக மக்களின் செயற்பாடுகள் போன்ற நடவடிக்கைகள் தீவிரமாக கண்காணிக்கப்படுவது அவசியம். மீறுவோர் சட்டத்தின் முன் நிறுத்தப்படுதல் வேண்டும்.

குறித்த எல்லைப்பரப்பினுள் சிற்றளவு மீன்பிடி மற்றும் கால்நடை மேய்ச்சல் நடவடிக்கைகள், விறகு சேகரிப்பு போன்ற முயற்சிகள் உரிய அதிகாரிகளிடம் அனுமதிபெற்று உயிர் பல்வகைக்குப் பங்கம் அச்சுறுத்தல்கள் ஏற்படாது ஒழுங்கமைக்கப்பட உறுதி செய்தல்.

சரணாலய எல்லைக்குள் அகப்பட்ட வயல்களில் பயிர்செய்வதற்கு அரச நிர்வாகம் உதவுதல். எல்லையோர கிராமங்கள ஏற்கனவே சமுக அபிவிருத்தி கருதி குறித்த எல்லைப்பரப்பிள் நிலங்களை ஒதுக்கீடு செய்திருப்பின் அதிகாரிகள் இவற்றை ஆய்வுக்குட்படுத்தி உரிய பரிகாரங்களைச் செய்தல் வேண்டும். குடியிருப்புகளுக்கான காணிகளுக்கு வேறு ஒரு பொருத்தமான இடத்தில் உரியவர்களுக்கு காணிகள் வழங்க சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகள் ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுத்தல். மரநடுகை, கண்டல்வளர்ப்பு உரிய இடங்களில் மேற்கொள்ளல் அவற்றை பராமரித்தல், முகாமைத்துவம் செய்தல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவசியம்..தள்ளாடி மன்னார் வீதி ஓரத்தில் மேற்கொள்ளப்பட்ட கண்டல் வளர்ப்பு எதிர்பார்த்த பலனை அளிக்கவில்லை. வாகன அனுமதிப்பத்திரம் வழங்குதல் தொடர்பான பரிசோதனை நிலையம் சரணாலய எல்லைக்கு வெளியே நடாத்த ஏற்பாடுகள் செய்வது அவசியம்.

இராணுவ செயற்பாடுகள் துப்பாக்கி சுடும் பயிற்சிகள், மின்னொளியில் விளையாடுதல் போன்ற நடவடிக்கைகளின் போது சரணாலய ஒழுங்கு விதிகளில் முடியுமான வரையில் இராணுவ நிர்வாகம் ஒத்துழைப்பதும் அவசியம்.சரணாலய எல்லைகள் மக்கள் கோரிக்கைக்கு இணங்க மீள் பரிசீலனைக்குட்படுத்தப்பட்டு எல்லையோர கிராமங்களின் நன்மைகள் கருதி நிலம் விடுவிக்கப்பட ஆவன செய்யப்பட வேண்டும்.

**முடிவுரை**

வங்காலை பறவைகள் சரணாலயம் மாவட்டத்தின் மையப்பகுதியில் தீவையும் தரையையும் இணைத்து பரந்த நிலப்பகுதியை உள்ளடக்கி காணப்படு கிறது. இதன் எல்லையோரமாக மன்னார் நகரமும் பெரிய பல கிராமங்களையும் கொண்டுள்ளது. சரணாலயத்திற்குரிய பல சாதகமான பண்புகளை இது கொண்டுள்ளபோதிலும் பல சவால் களையும் அச்சுறுத்தல்களையும் இது எதிர்நோக்கியுள்ளமை அவதானிக்கப் பட்டுள்ளது.

இதன் மத்தியில் பெரும் படைத்தளம் அமைந்திருப்பது காற்றாலை மின் கம்பங்கள், கேபிள்கள் இதனூடாக செல்வது, புகையிரத மற்றும் பெருந்தெரு போக்குவரத்து சேவைகள் இடம்பெறுவது போன்றவற்றால் பல சவால்களை இந்த பறவைகள் சரணாலயம் சந்திக்க வேண்டி யுள்ளது. இத்துறையில் அரசநிர்வாகம், கிராம மக்கள், படைத்தரப்பு ஆகியன ஒன்றிணைந்து இதன் சுற்றுச்சூழல், சூழல்சார் சுற்றுலா மேம்பாட்டிற்கு உதவுதல் வேண்டும் இது மிக அவசியமாகும். எல்லையோர குடியிருப்பு மக்கள் எதிர்நோக்கியுள்ள பிரச்சினை களுக்கும் தீர்வினை வழங்குவதும் அவசியமாகும். இல்லையெனில் பறவைகள் சரணாலயம் ஊடாக உரிய இலக்கினை அடைவது மிகக் கடினமானதாகவே இருக்கும்.










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தங்கத்தேரு... மன்னாரு



கலைச்செம்மல்
கவிஞர். வை. கஜேந்திரன் BA

தங்கத் தேரு
எங்க ஊரு
வந்து பாரு வாழ்ந்து பாரு
மன்னாரு, எங்கள் மன்னாரு

யாரு வந்தாலும்...
பேரு சொல்லி சொந்தமாக்கும் தேசமடா
கருக்கொள்ளும் கருணை பாசமடா
உருக்கொள்ளும் உள்ளத்தின் நேசமடா

கல்வியும் விளையாட்டும்
கண்களிரண்டைப்போல
கடலும் வயலும்
கதிரவன்போல...

பாடல் பெற்ற தளமாம் திருக்கேதீஸ்வரம்
பக்திகொள்ள மடுமாதாவும் மறைசாட்சியாலயமும்
பெரிய பள்ளியும் வெள்ளிக்கிழமையும்
சாந்தி பெற சாந்திபுரத்தில் புத்த பெருமானும் - மொத்தமாய்
இன்னும் பலவுண்டு இறையில்லங்கள் - இங்கு

சுற்றிப்பார்க்க பலவுண்டு
சுற்றிப் பார்க்க பலவுண்டு
சுற்றுலாத் தளங்களும் உண்டு
என்ன பார்க்க இருக்கு - என
ஏக்கம் கொள்வோருக்கு...

எழில் மிகு மன்னாரிலே....
தேக்கமும் தொங்கு பாலமும் - வானளவு
கட்டுக்கரைக்குளமும்... களனி வயல்களும்
ஏற்றமிகு முத்துக்குளிப்பும் அல்லிராணிக்கோட்டையும்
புதிய பாலமும் நேர்ப்பாதையும்
ஜோர்ஜ் கோட்டையும் பெருக்கமரமும்
மினரா கலங்கரை விளக்கும்
நபிகள் வழிவந்த 40அடி கபுறடிகளும்

ஆதம் பாலமும் தீடைகளும்
சல்லிக்கடற்கரையும் பவளப்பாறைகளும்
சொல்லிக் கொண்டே போகலாம்...
ஆய்வுகளில் அதிசயமாய் மிளிரும் மன்னாரே!

என்ன வளமில்லை
எம் மன்னார் மண்ணிலே
எல்லாருக்கும் கிண்ணாம்
எம் மன்னாரிலே....

எரிபொருள் எண்ணை வளமும்
எடுக்கவொரு கூட்டம்
ஏற்றுமதிமிக்க கனியவள மண்ணை
எடுக்கவொரு கூட்டம் - பெரும் திட்டம் - தினமும்
எம் மக்கள் வீதியிலே இறங்கி போராட்டம்

கடலும் சுருங்கிப் போகுதே
அந்நிய மீன்பிடியில் - அதிலும்
அதிகவருமானத்திற்காய் - அறிவிழந்த
அற்பத்தனமுள்ள - எமது தொழிலாளிகலாலும்
ஆபத்தினை விளைவித்திடும் டோறாவும் வலைகளும்

அன்னை மண்ணை
அடகு வைத்து அமைதியாய்
ஆடம்பரமாய் வாழ்ந்துவிட்டு
அடிமைபோல அடுத்தவனிடமே கையேந்தாமல்
அக்கினித் தீ நெஞ்சினிலே எழட்டுமே...

வரவேற்புக் கோபுரமும்
பல்கலைக்கழகமும் - நல்மருத்துவம்
பசுமையும் செழுமையும்
பார்க்கும் இடமெல்லாம் தூய்மையும்
பழமையைப் பேணி புதுமையும்
பண்பாட்டோடு வாழ்க்கை தரமும் உயர்ந்திட

பண்பான பணியாளர்களும் - புதிய இளம்
பாராளுமன்ற உறுப்பினர்களும் - போதைப்
பாவனையற்ற இளைஞர் யுவதிகளும்
பாதுகாப்பான தேவைகள் சேவைகளாய் - ெபற்றிட

வேற்றுமைகள் களைவோம்
ஒற்றுமையாய் இணைவோம்
மாற்றம் உண்டாகின் மனதிலே
ஏற்றமுண்டாகும் - மன்னாரிலே
முற்றம் ஒன்றாகும்....
சுற்றம் நன்றாகும்...
"ஊரிலே பட்டொளி வீச வேண்டும்
பாரினிலே மன்னார் புகழ் ஓங்க வேண்டும்"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் பறவைகள் சரணாலயம்

A. E. றெபேக்கா மிராண்டா
ஸ்தாபகர், பெண்கள் மேம்பாட்டு பேரவை
(AWE - Association for Women Empowerment)

இயற்கை வளங்கள் நிறைந்த மன்னார் மாவட்டத்தில், சூழலியல் ஆர்வலர் களையும் பறவை விரும்பிகளையும் கவர்ந்திழுக்கும் ஒரு முக்கிய பகுதியாக வங்காலை பறவைகள் சரணாலயம் காணப்படுகின்றது.

சர்வதேச ரீதியில் முக்கிய இடமாக இனங்காணப்பட்டதும், சுமார் 10 இலட்சம் பருவகால (இடம்ப்பெயர்) பறவைகளுக்கு புகலிடம் வழங்கும் சதுப்பு நிலமுமான இப்பிரதேசம், வனவிலங்கு பாதுகாப்புத் திணைக் களத்தினால் 2008ல் பறவைகள் சரணாலயமாக பிரகடனப்படுத்தப்பட்டது. இதன் முக்கியத்துவத்தையும் பாதுகாப்பை யும் கருத்தில் கொண்டு, 2010ம் ஆண்டு ஆடி மாதம் சர்வதேச ஒப்பந்தத்தின் மூலம் ரம்சார் மாநாட்டில் சர்வதேச ரீதியில் முக்கியம் வாய்ந்த இலங்கையின் நான்காவது ஈரநில வலயமாக் பிரகடனப்படுத்தப்பட்டது. தற்போது இது ரம்சார் ஈரநிலமாக இனங்காணப்படுகின்றது. வங்காலை பறவைகள் சரணாலயமானது புளியந்தீவு, திருக்கேதிச்சரம், பள்ளிமுனை மற்றும் வங்காலை பிரதேசங்களின் குறிப்பிட்ட பகுதிகளையும் மற்றும் மன்னார் தீவையும் மன்னார் பெருநிலப்பரப்பை இணைக்கும் பாலத்தின் இருமருங்கையும் உள்ளடக்கியதாக, 4839 ஹெக்டேயர் விஸ்தீரணத்தில் அமைந்துள்ளது. வங்காலை பறவைகள் சரணாலயமானது சதுப்பு நிலங்கள், உப்பு சதுப்பு நிலங்கள், முற்புதர்கள், மேய்ச்சல் நிலங்கள், நீர்நிலைகள், குளங்கள், மணல்திட்டுகள், புல்வெளிகள், கடற்புல்வெளிகள், கண்டல் தாவரங்களென பல்வேறுபட்ட சூழலியல் அமைப்புக்களைத் தன்னகத்தே கொண்டு பல இலட்சக்கணக்கான உயிரனங்களுக்கு புகலிடம் வழங்குகின்றது.



உள்நாட்டு பறவைகளையும் தாண்டி விசேடமாக பருவகாலப் பறவைகளான பூநாரை (Greater Flamingo), பட்டைவால் மூக்காண் (Black tailed cock), ஊசிக்கால் வாத்து (Northern Pink Tail), நண்டுதின்னி (Crab Plouwer), கிரேட் நோட் (Great



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Knot), ரெட் நோட் (Red Knote), இரோசியன் விஜியன் (Eurasian Wigeon), கார்கெனி (Garganey) நொதர்ன் சௌலார் (Northern Shoveler), கொமன் டீல் (common Teal) போன்ற அரிய வகை இடம்பெயர் பறவைகளின் பருவகால புகலிடமாகக் காணப்படுகின்றது. மற்றும் டக் (ducks) இனப் பறவைகள் இலங்கையில் வேறு எங்கும் இல்லாதவாறு மன்னாரில் ஆயிரக்கணக்கில் காணப்படுவது சிறப்பான விடயமாகும். இலங்கைக்கு வரும் பருவகால பறவைகள் முதலில் வந்திறங்கும் இடமாகவும் அவற்றில் குறிப்பிட்ட எண்ணிக்கையிலான பறவைகள் இலங்கையில் உள்ள ஏனைய பறவைகள் சரணாலயங்களிற்கு சென்று பருவகால முடிவில் மீண்டும் மன்னாரில் தரித்து நின்று தத்தமது இடங்களிற்கு செல்லும் ஒரு நுழைவாயிலாக இச்சரணாலயமும் அண்டிய ஈரநிலங்களும் காணப்படுகின்றன. கொழும்பு பல்கலைக்கழகத்தின் அண்மைய ஆய்வின்படி புரட்டாதி 2021 தொடக்கம் வைகாசி - 2022 காலப்பகுதிகளில் 230 தொடக்கம் 250 வகையான இனங்களைச் சேர்ந்த 10 இலட்சம் பறவைகள் வங்காலைப் பறவைகள் சரணாலயத்திலும் அதனை அண்டிய ஈரநில பகுதிகளிலும் தங்கிச் சென்றமை உறுதிப்படுத்தப் பட்டுள்ளது.



ஸ்பூன் பில்ட் சாண்ட் பைபர் (Spoon billed Sandpipers) - இது உலகில் காணப்படும் மிக அரிய வகை பறவை இனம் ஆகும். கிட்டத்தட்ட 100 சோடிகளே உலகில் காணப்படுகின்றன. 1978 இற்குப் பின் அதாவது 41 வருடங்களின் பின் இவை 2018ம் ஆண்டு வங்காலைச் சரணாலயத்திற்கு வருகை தந்தது பறவை விரும்பிகளையும் ஆராய்ச்சியாளர்களையும் மிக மகிழ்ச்சிக்கு உள்ளாக்கியது.

பறவைகளின் இராணி எனச் செல்லமாக அழைக்கப்படும் ஐயாயிரத்தினை அண்மித்த பூநாரைகளின் வருகை புரட்டாதி 2021 தொடக்கம் வைகாசி - 2022 வரையான காலப்பகுதியில் பல்லாயிரக் கணக்கான சுற்றுலாப் பயணகளையும் பார்வையாளர் களையும் மன்னாரின் பக்கம் கவர்ந்திழுத்தது. வங்காலை சரணாலயத்திற்கு வரும் பறவைகள் நன்னீர்க்குளமான கோரக்குளம் மற்றும் தலைமன்னார் - ஊர்மலை, பேசாலை கடற்கரை, எருக்கலம்பிட்டி களப்பு, 74ம் கட்டைப் (மைல்கல் போன்ற இடங்களிற்கும் காலநிலைக்கேற்ப இடம்பெயர்ந்து சென்று மீண்டும் இங்கு வருகின்றன.

நன்னீர்க்குளமான கோரக்குளம் சர்வதேச ரீதியில் ஆபத்தை நோக்கியுள்ள 9 இனப் பறவைகளுக்கும் தேசிய ரீதியில் ஆபத்தை நோக்கியுள்ள 15 இனப் பறவைகளுக்கும் புகளிடம் வழங்குகின்றது. தலைமன்னார் மண்திட்டுப் பகுதிகளில் சஞ்சரிக்கும் ஏறத் தாழ 30,000 பருவகாலப் பறவைகளில் 50 வீதமானவை சர்வதேச ரீதியில் அருகிவரும் இனங்களாகக் காணப்படு கின்றன. பேசாலை கடற்கரைப் பகுதிகளில் கியுககிளின் கல் (Heglin's Gull), பலாகல் (Pallas's Gull), ப்றவுண் ஹெடட் கல் (Brown-headed Gull), கப்சியன் (Caspian Tern), மற்றும் லேசர் கிரெஸ்டட் டேர்ன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(Lesser Crested Tern) போன்ற பறவைகள் காணப்படுகின்றன.

எருக்கலம்பிட்டி களப்புப் பகுதிகளில், பருவகால பறவைகளான ரோசி (Rosy), பிராமினி ஸ்டாலிங் (Brahminy Starlings), வைட் துரொட்ஸ் (Whitethroats), வாப்பிளேர்ஸ் (Warblers) மற்றும் பிபிட்ஸ்



(Pipits), லார்க்ஸ் (Larks) இனங்கள் காணப்படுகின்றன. இச்சரணாலயமானது மன்னாருக்கே உரித்தான மூன்று வகையான ஆமைகளுக்கும் - அதாவது ஒலிவ் ரிட்லே (Olive Ridley), கிரீன் டேட்டில் (Green Turtle) மற்றும் ஹோக்ஸ்பில் டேட்டில் (Hawksbill Turtle) போன்றவற்றுக்கும் பல்லாயிரக் கணக்கான மீனினங்களுக்கும்.

நுண்ணுயிர்களுக்கும் அரியவகை தாவரங்களுக்கும் ஊர்வன, பூச்சிகள் போன்றவற்றுக்கும் புகளிடமாக உள்ளது. மன்னாரில் பிரத்தியேகமாக காணப் படுவதும் உலகிலே மிகப்பெரிய கடல்வாழ தாவரஉண்ணியும் பாலூட்டியுமான அரியவகை ஆவிரியா அல்லது கடல்பசுவிற்கும் வாழ்விடத்தை வழங்குகின்றது.

பொழுதுபோக்கிற்காக பறவைகளைப் பார்வையிடுபவர்களை தாண்டி, பருவகால மற்றும் தேசிய பறவைகளைப் பற்றிய பல்வேறு ஆய்வுகளை, தேசிய மற்றும் சர்வதேச பல்கலைக்கழகங்கள் மற்றும் பறவைசார் அமைப்புக்கள் பரந்த அளவில் மன்னாரில் மேற்கொள்கின்றன. பறவைகளைப் பார்வையிடும் அதிக எண்ணிக்கையிலான உல்லாசப் பிரயாணிகளின் வருகையும் கற்கும், மற்றும் ஆய்வுகளை மேற்கொள்ளும் அமைப்புக் களின் வருகையும் மாவட்டத்தின் பொருளாதாரத்தை மேன்படுத்த உதவும் என்பதில் சந்தேகம் இல்லை.

பறவைகளைப் பாதுகாப்பது எமது பாரிய கடமையாகும். பாதுகாப்பையும் சுற்றுலாத்துறையையும் மேம்படுத்தும் நோக்குடன் வங்காலை பறவைகள் சரணாலயத்தில் அண்மையில் அமைக்கப் பட்ட பறவைகள் பார்வைக் கோபுரமானது பறவைகள் தொடர்பான முழுமையான தகவல்களை எதிர்வரும் காலங்களில் வழங்கி பறவை மற்றும் இயற்கை ஆர்வலர்களின் தேடலை இலகுவாக்கும் என்பதில் ஐயமில்லை.

பறவைகளையும் ஒட்டுமொத்த இயற்கைச் சூழலையும் பாதுகாக்க, வளம்படுத்த அனைவரும் முனைவோம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழிலோங்கும் மன்னார் தீவு



R.N. சாரா ஏஞ்சல்
முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்

கடல் சூழ்ந்த தனித்தீவு - மன்னர் ஆண்ட மணித்தீவு
தன்னை நாடி வருவோர்க்கு வாரி வழங்கும் மன்னார் தீவு
கடல் பார்த்து வலை விரித்தோர் - வலை எங்கும் மீன்கள் கண்டார்
நிலம் பார்த்து நெல் தெளித்தோர் - வயல் நிறைய விளைச்சல் கண்டார்
பனை தேடி பிழைக்க வந்தோர் - பலன் அதிகம் அடைந்து கொண்டார்.

என்ன இல்லை உன்னிடம் என தேடிப்பார்த்தேன் - இனி
என்ன வேண்டும் இதற்குமேல் என வியந்து போனேன்.

ஒரு அழகி என உன்னை எண்ணி பெருமை கொண்டேன்
அதில் எழுந்த எண்ணச் சிதறல்களை இங்கே தந்தேன்.

உன் செழுமை கொண்ட பச்சை நிறம் "உடை" உனக்கு
பண்புகளும் பண்பாடும் பெரும் சிறப்பு
அலைகளாடும் கடல் உனக்கு ஆபரணம்
அரிப்பின் அழியா முத்து உன் அழகின் மகுடம்
வளம் கொழிக்கும் குளங்கள் உந்தன் செல்வச் செழிப்பு
அதில் வளையும் சிறு ஆறுகள் உனை மெருகூட்டும் அழகு.

இறைவன் தந்த அருட்கொடையாம் மன்னார் தீவே – நீ
இயற்கையை வெளிப்படுத்தும் அழகில் நிகர் உனக்கு நீயே
இறைவன் தரும் இனிய காலைகள் உன்னுடன் விடிகின்றன
அவரின் படைப்புகளின் மகிமைகள் உன்னிலே தெரிகின்றன.

கல்தோன்றி மண்தோன்றா காலத்தில் பிறந்தாயோ - இல்லை
கடல் பிளந்து கரை தட்டி கலங்கரையாய் ஆனாயோ

சோர்வின்றி எம்மை சுமக்கும் மன்னார் தீவே – நீ
பல்லாண்டு வாழ (வைக்க) வேண்டும் எங்கள் தாயே....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நவில்கின்றோம் நன்றி

"மன்னெழில்" மலரின் பெயரில் மற்றுமொரு தடவை நன்றி தெரிவிப்பதற்கு கிடைத்த வாய்ப்பிற்காக எல்லாம் வல்ல இறைவனுக்கு நன்றி தெரிவிப்பதுடன், மலரின் வரவிற்காய் ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் எனது மனம்நிறைந்த நன்றிகளை முதலில் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மன்னார் மாவட்டத்தின் வரலாற்று மையங்கள் இனங்காணப்படுவதுடன் அவை பற்றிய உண்மைத்தன்மைகள் எழுத்துவடிவத்தில் ஆவணப்படுத்தப்படல் வேண்டும் என்ற நோக்கத்துடன் மன்னெழில் மலர் வெளியீடு ஆரம்பித்து வைக்கப்பட்டது. இத்தகைய நோக்கில் தொடக்கி வைக்கப்பட்ட பணியின் இரண்டாவது கட்டமாக இன்று மன்னெழில் - II வெளிவருகின்றது. மன்னார் மாவட்டம் பற்றிய வரலாற்று தகவல்கள் விசேடமாக மாவட்டத்தின் எழுத்தாளர்களின் கைவண்ணங்கள் ஒருங்கிணைக்கப்பட்டு நூல் வடிவில் வெளியிடப்படல் வேண்டும் என்பதில் பெரும் ஆர்வத்துடன் செயற்பட்டது மட்டுமன்றி மன்னெழில் - II மலரின் வரவிற்காய் ஆலோசனை வழிகாட்டல் மற்றும் இன்னோரன்ன உதவிகளைப் புரிந்தவர் எமது மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி அ.ஸ்ரான்லி டி மெல் அவர்கள். அவர்களுக்கு மலர்க்குழுவின் சார்பில் முதலில் எனது நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன்.

இதேவேளை மன்னெழில் மலருக்கான ஆக்கங்களை வழங்கிய எழுத்தாளர்கள் கவிஞர்கள் அதேபோல் மன்னெழில் மலரின் அட்டைப்படத்ததை வரைந்து உதவிய மன்னார் சித்திவிநாயகர் இந்து தேசியப்பாடசாலையின் அசிரியர் திரு ஜெரோமி மார்க் அவர்ளுக்கும் சிறந்த முறையில் மன்னெழில் - II மலர வேண்டும் என்பதில் ஆர்வத்துடன் செயற்பட்ட மலராசிரியர் உள்ளிட்ட மலர்க்குழுவினர், மலரை மிகக்குறுகிய காலத்தில் சிறந்த முறையில் அச்சிட்டு வழங்கிய சைபர் சிற்றி அச்சுக்கலையகத்தினருக்கும், அதன் உரிமையாளர் பதிப்புக்கலைச்செல்வன் திரு. எஸ். சதீஸ் அவர்களுக்கும் இவை எல்லாவற்றிற்கும் மேலாக மன்னெழில் மலருக்கு ஆசியுரை வழங்கிய சர்வமதத் தலைவர்களுக்கும் வாழ்த்துரைகளை வழங்கிய வடமாகாண பிரதம செயலாளர், மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர், வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர், வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களப்பணிப்பாளர் ஆகியோருக்கும் எனது மனம் நிறைந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

நன்றி

**சைவப் புலவர், சித்தாந்த பண்டிதர்**
**திரு. இ. நித்தியானந்தன் M.A - Cultural**
**சிரேஷ்ட கலாசார உத்தியோகத்தர் - மன்னார்.**
**(செயலாளர், மாவட்ட கலை பண்பாட்டுப் பேரவை, மன்னார்.)**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆடிப்பிறப்பு நிகழ்வுகள் - 2022



திருவள்ளுவர் விழா - 2022



இப்தார் நிகழ்வுகள் - 2022



நல்லூர் கலை விழா



மறைந்த கலைஞர்களை நினைவுகூரும் நிகழ்வ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Cyber City Printers, Mannar.